சமயங்கள்



ஆசிரியர்
கோவைகிழார்

வெளியீடு
தவத்திரு சிதம்பர அடிகளார் நூலகம்
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க் கல்லூரி
பேரூராதீனம், பேரூர், கோவை - 641 010.

சமயங்கள்

ஆசிரியர்

கோவைகிழார்

சி.எம். இராமச்சந்திரன் செட்டியார், *பி.ஏ.பி.எல்*

தமிழ்நெறி வழிபாட்டுத் தந்தை தவத்திரு
சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களின்
101 ஆம் ஆண்டு அவதார நாள் நிகழும்
விசுவாவசு வருடம் புரட்டாசி மாதம் 31 ஆம்
நாள் (17.10.2025) வெள்ளிக்கிழமை
நடைபெற்றபோது அவரது நினைவாக
வெளியிடப்பெற்றது.

வெளியீடு

தவத்திரு சிதம்பர அடிகளார் நூலகம்

தவத்திரு சாந்தலிங்க அடிகளார்

கலை அறிவியல் தமிழ்க் கல்லூரி,

பேரூராதீனம், பேரூர், கோவை-10.

நூற் குறிப்பு

பதிப்புரிமை : தவத்திரு சிதம்பர அடிகளார் நூலகம்

நூலின் பெயர் : சமயங்கள்

ஆசிரியர் : கோவைகிழார்

முதல் பதிப்பு : 2025

பதிப்பாசிரியர் : திருப்பெருந்திரு சாந்தலிங்க
மருதாசல அடிகளார்

உரிமை : நூலகத்திற்கு

வெளியீடு : தவத்திரு சிதம்பர அடிகளார் நூலகம்
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை
அறிவியல் தமிழ்க்கல்லூரி
பேரூர், கோவை – 641010

அச்சாக்கம் : சௌமி அச்சகம்,
1 F, துடியலூர் ரோடு, சரவணம்பட்டி,
கோவை – 641 035
9842252779.

இந்நூலின் புரவலர் சின்னத்தொட்டிபாளையம் தவத்திரு. அருணை அருள்முருகன் அடிகளார் அவர்களின் பொருளுதவியால் வெளியிடப்படுகின்றது.

உ

சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க



*திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம்
பேரூராதீனம் 25 ஆம் பட்டம் குருமகாசந்நிதானம்
கயிலைப் புனிதர் முனைவர்* **திருப்பெருந்திரு
சாந்தலிங்க மருதாசல அடிகளார்**
பேரூராதீனம், பேரூர், கோவை

இன்ப அன்பினீர்

சாந்தலிங்கப் பெருமான் இன்னருள் பெருகுக. 'மேலச் சிதம்பரமாம் மிக்க புகழ்ப் பேரூரில்' திருமடம் அமைத்து உலகுய்ய நெறி காட்டியவர் அருள்தரு சாந்தலிங்கப் பெருமான். அப்பெருமானது அருள் மரபில் பேரூராதீனத்தின் 24 ஆம் பட்டத்துக் குருமகா சந்நிதானங்களாக அருளாட்சி வீற்றிருந்தவர் கயிலைக் குருமணி தமிழ்நெறி வழிபாட்டுத்தந்தை தெய்வத் திருப்பெருந்திரு பேரூரடிகள் பெருந்தகை அவர்கள். அவர்கள் இளைய பட்டமாக இருந்த காலத்தில் ஆறுமுக அடிகளார் அவர்களுடைய நல்லாசியுடன் 1953 ஆம் ஆண்டு நம்முடைய தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியைத் தொடங்கினார்கள்.கொங்கு நாட்டில் தமிழ்க் கல்விக்கோர் மணிமகுடமாய்த் தொடங்கப்பட்ட இக்கல்லூரியின் முதல் முதல்வராய்ப் பொறுப்பேற்று றப் பணியாற்றியவர் கோவைகிழார் என்று அறியப்படும் கோ.ம ராமச்சந்திரன் செட்டியார் அவர்கள். அவர் இந்து சமய அறநிலையத்துறை ஆணையராகவும் வழக்கறிஞராகவும் இருந்தவர். மிகச்சிறந்த வரலாற்று அறிஞராக, எழுத்தாளராக, சித்தாந்த செந்நெறிச் சீலராக விளங்கியவர். அவர் பல்வேறு நூல்களைப் படைத்துள்ளார். அவற்றுள்

'சமயங்கள்' என்னும் பெயரில் அமைந்த நூல் குறிப்பிடத்தக்கது. இந்நூல் முன்பு சைவ சித்தாந்த

நூற்பதிப்புக் கழகத்தினரால் வெளியிடப் பெற்றது. தற்போது தவத்திரு சிதம்பர அடிகளார் நூலகத்தின் வழி மறுபதிப்பாக வெளியிடப் பெறுவது மகிழ்வுக்குரியது. சமயச்செந்நெறி மக்கள் வாழ்வைப் பண்படுத்துவது. பண்பட்ட மனிதர்கள் பரநிலையை அடைகிறார்கள். அவர்கள் சமயபேதங் கடந்தவர்களாக உயர்கிறார்கள். இதையே சாந்தலிங்கப் பெருமான்

'எல்லாச் சமயத்துப் பொருளும் உணர்ந்தவர்
நில்லார் அவற்றூடென்று உந்தீபற
நீங்கில் பழியாது உந்தீபற'

எனப் பாடியுள்ளார். அவ்வகையில் சமயங்களின் தன்மை சுட்டும் இந் நூலினை பேரூரடிகளார் அவர்களது நாண் மங்கல நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி வெளியிடுவது மகிழ்வுக்குரியது. கோவைகிழாரின் கையெழுத்துப் பிரதிகள் பலவற்றை நூலாக்கம் செய்து வெளியிட்டு வரும் நூலகர் அபிராமி அவர்களது முயற்சிக்குப் பாராட்டுதலைத் தெரிவிக்கின்றோம். அவர்களது செயல்பாடு இன்னும் பல நூல்களும் வெளிவரத்தக்க வகையிலே சிறப்புற வேண்டுமென்று வாழ்த்துகிறோம். இந்நூல் உருவாக உழைத்த அன்பர்களும் அச்சகத்தாரும் எல்லா நலங்களும் வளங்களும் பெற்று வாழ்வாங்கு வாழ திருவருளும் குருவருளும் நினைந்து வாழ்த்தி மகிழ்கின்றோம்.

வேண்டுந்தங்களன்பு

அன்புள்ள

சாந்தலிங்க வேதமலை அடிகள்

உள்ளுறை

சமயங்கள்

1. சமயம் என்பது யாது?

நான் யார், என்போலியவர் யாவர்? என்னைச் சுற்றிலும் உள்ள உலகம் யாது? என்னையும் உலகையும் இயக்கிவரும் பொருள் உண்டா? அது யாது? இவைகள் ஒவ்வொன்றிற்கும் உள்ள தொடர்புகள் எத்தன்மைய? இந்த வினாக்களை அறிவுள்ள எவனும் வினவுகிறான். சிந்திக்கிறான்; விடையும் சொல்லுகிறான்; அவ்விடைகளின் தொகுதிதான் சமயம் அல்லது மதம் எனப்படும்.

இவ்விடங்களில் அடிப்படை ஒன்றான போதிலும் விவரங்களில் வேற்றுமைகள் ஏற்படக்கூடும். அவைகள் காலம், இடம், செய்திகளைப் பொறுத்து வேறுபடும். அவ்வாறு வேறுபட்ட கொள்கைகள் உலகில் மிகவுண்டு. மனிதன் தோன்றினநாள் முதற்கொண்டு இவ்வினாக்களை வின விக்கொண்டும் விடைகள் சொல்லிக் கொண்டும் இருந்திருக்கிறான். இவ்விடைகள் அறிவுக்குத் தக்கபடி மாறுபட்டிருந்ததில் பல கோட்பாடுகள் அல்லது கொள்கைகள் தோன்றியும் மறைந்தும் கிளம்பியும் எழும்பியும் ஓங்கியும் இருந்து வந்திருக் கின்றன.

உலகப் பொருள்களில் உயிருள்ளவை உயிரில்லவை என இரண்டு பாகுபாடுகள் உண்டு. உயிர் உள்ளவை களுக்கு அறிவும் வளர்ச்சியும் உண்டு. உயிர் இல்லவை களுக்கு இவை இரண்டும் இல்லை. ஆகவே அவைகட்குச் சமய உணர்ச்சிக் கொள்கையில்லை. உயிர் உள்ளவைகளில் படிப்படியாகப் பலதிறப்பட்ட அறிவு கொண்டவைகள் இருக்கின்றன. ஓரறிவு உயிர் முதற்கொண்டு ஆறறிவு உயிர் வரைக்கும் உண்டு. ஓரறிவு உயிர் முதல் ஐயறிவுயிர்வரை உள்ள சிற்றுயிர்கள் சமய உணர்ச்சியைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. அவைகள் உணவு, வளர்ச்சி

இவைகளில் மட்டும் ஈடுபடுகின்றன. ஆனால் ஆறறிவுயிரான மனிதன் மட்டும் பகுத்தறிவு என்ற அறிவை அதிகப்படியாகக் கொண்டிருப்பதனால் தன்னைப் பற்றியும் தன்னைச் சுற்றிலுமுள்ள பொருள்களைப் பற்றியும் சிந்திக்கிறான். மேலும் அவன் முந்தியதாக எங்கு இருந்தேன். இனி எங்குச் செல்வேன் என்றும் நினைக்கிறான். இந்தச் சிந்தனைகளே அவனுக்குச் சமய உணர்ச்சியை ஊட்டுகின்றன.

மனிதன் தான் தோன்றியநாள் முதற்கொண்டே இவ்வினாக்களுக்கு விடைகளை உணர்ந்து கொண்டு வந்து பலவகைக் கொள்கைகளை ஏற்படுத்திக் கொண்டிருப்பதில் அவன் அடைந்துள்ள பண்பாட்டிற்கு ஏற்றபடி சமயங்களைக் கையாளத் தொடங்கி உள்ளான்.

அறிவுள்ள பொருள் தான் ஒருவன்மட்டும் அல்லன் தன்னை இயக்கிவைப்பதற்குத் தன்னைவிடச் சிறந்ததாக உள்ளதும் பேரறிவு வாய்ந்ததுமான ஓர் உயர்ந்த பொருள் இருக்கவேண்டும் என்று கண்டுகொண்டும் அதை நம்பியும் வந்திருக்கிறான். அப்பொருளுக்கும் தனக்கும் தொடர்பு உண்டு என்றும் என்றும் அறிகிறான். இத்தொடர்பின் நிலைமை பல ஏற்றத் தாழ்வுகளில் உலாவி வந்தது. ஆகவே பண்டையநாள் முதற்கொண்டு கொள்கை வேறுபாடுகள் இருக்கத் தொடங்கின. அவைகள் மக்களின் வாழ்க்கையைப் பலவகைகளிலும் ஈடுபடுத்தி வந்து இருக்கின்றன.

2. பண்டைக்காலச் சமயக் கொள்கை

மனிதன் முதலில் விலங்குகளைப்போலவே உண்ணுவதும் உறங்குவதும் இனம் பெருக்குவதுமே கொண்டிருந்தான். ஆனால் பகுத்தறிவு படைத்தவனா -கையால் தனக்கு வேண்டிய வசதிகளைத் தேடியும் உண்டாக்கியும் பிழைப்பை நலமாக்கிக் கொள்ள முயன்றான். இருக்கக் குகைகளைப் பயன்படுத்திக் கொண்டும் உண்ண வேட்டையாடிக் கொண்டும் நிலத்தில் விளையும் பழம் காய்களைத் தேடியும் முன்னேறினான். பிறகு கருவிகள், தட்டுமுட்டுச் சாமான்கள், இருக்கைகள், குடிசைகள் முதலியவைகளைக் கண்டுபிடித்தும் பயன்படுத்திக் கொண்டான். தான் கருவிகளை இயற்றினாற் போலத் தன்னை இயற்றின ஒருவன் இருக்க வேண்டும் என்று எண்ணினான். அதுபோலவே தன்னைச் சுற்றிலுமுள்ள நிலம், ஞாயிறு, திங்கள், தாரகைகள் இவைகளையும் இயக்குகிறவன் ஒருவன் உண்டு என்று கண்டான். அவனை வழிபட வேண்டும் என்றும் எண்ணி அவ்வாழ்வும் இனிதாக இருக்கவேண்டும் என்று சிந்தித்தான்.

தன் உடலும் உயிரும் பிற்காலத்தில் நல்ல நிலைமை பெறவேண்டும் என்று எண்ணி இயற்கையை வணங்கினான். இயற்கைப்பொருள்களான நிலம், நீர், காற்று, தீ, விண் இவைகளைத் தொழுதான். விண்ணில் திரியும் சுடர்களையும் தொழுதான். தன் உடல் இறந்த பிறகு பின்னொருகால் அது நற்கதியை அடையவேண்டும் என்று எண்ணி அந்த உடலை ஓர் இடத்தில் புதைத்து அதனோடு தான் அருமையாக வைத்திருந்த பொருள்களைச் சேர்த்துப் புதைத்தான். சில பெரியவர்கள் இறந்தால் அப்பெரியாருக்குத் தொண்டு செய்திருந்த பெண்கள் வேலையாட்கள் இவர்களையும் உடன் சேர்த்துப் புதைத்தான். இந்த வகையில் பண்டைய மனிதன் சமயக் கொள்கைகளைச் சிறிது சிறிதாகப் பெருக்கி வந்தான்.

இவைகளினால் தொழுகை, பலி கொடுத்தல் முதலிய சமயச் சடங்குகள் தோன்றின. இந்தச் செய்திகள் புதைபொருள் ஆராய்ச்சியாலும் பண்டைய மக்கள் வழக்கங்களின் ஆராய்ச்சியினாலும் அறியப்படுகின்றன.

ஆப்பிரிக்கப் பண்டை மக்களும், ஆஸ்திரேலியத் தென் தீவுகளில் வாழும் பண்டைக் காட்டுமிராண்டிகளும் அமெரிக்கச் சிவப்பிந்திய அடவி மனிதர்களும் இந்தப்படி இயற்கை வணக்கமும் பலி கொடுத்தலும் பின் வாழ்வுக் கொள்கையும் அவைகள் போன்ற சடங்குகளும் கைக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த மக்களுக்குப் பிறந்த, பண்பாட்டில் சிறிது தேர்ந்தவர்கள் தங்களைப்போலத் தாம் தொழும் தெய் வங்களுக்கும் உருவம் கற்பித்து அவைகளுக்குக் கோயில் கட்டி, வழிபாட்டிற்குச் சடங்குகளை ஏற்படுத்திக் கொண்டார்கள். எகிப்தியர், அசிரியர், கிரீட்டியர் பொனிசியர் முதலிய மக்கள் இந்த வகையில் மேற்சென் றிருந்தார்கள். பிறகு கிரேக்க, உரோமேனியர், நார்ஸ், கெல்ட் முதலிய வகுப்பார் உருவ வழிபாடும் அதற்கேற்ற சடங்குகளும் கைக்கொண்டார்கள். இந்தப் பண்பாட்டினர் நாளாவட்டத்தில் சீர்குறைந்து அழிந்தார்கள். ஆனால் அவர்களுடைய கொள்கைகளையும் பழக்க வழக்கங்களையும் பின் வந்தோர் ஏற்றுக்கொண்டும் பெருக்கியும் வந்திருக்கிறார்கள்.

3. பிற்காலச் சமயங்கள்

சென்ற 20 நூற்றாண்டுகளாக மக்களிடை நாகரிகம் உயர உயரச் சமயக் கொள்கைகளும் சீர்திருத்தம் அடைந்தன. மக்களிடையே தத்துவ ஆராய்ச்சி ஏற்பட்டது. சமய ஆராய்ச்சி முதிர்ச்சி அடைந்தது. கிரேக்கர்கள் உரோமானியர்கள் உருவ வழிபாட்டில் ஓங்கி இருந்தும் தத்துவ ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுப் பல தெய்வக் கொள்கையிலிருந்து ஒரு தெய்வக் கொள்கைக்கு வந்துவிட்டார்கள். மேல்நாடுகளில் ஆசியா, பாபிலோனியா முதலிய நாடுகளில் பல தெய்வக் கொள்கை இருந்திருக்க, யூதர்கள் ஒரு தெய்வக் கொள்கையை வற்புறுத்த, நாளடைவில் தனித்தெய்வக் கொள்கை பரவி விட்டது.

கிறித்து சமயமும் இசுலாமிய சமயமும், பாலஸ் தீனம் அரேபியா தேசங்களில் தோன்றி மிக விரைவில் பரவத் தொடங்கின. உரோமானிய நாடுகள் முழுதும் கிறித்து சமயமும் மேற்கு ஆசியா, வட ஆப்பிரிக்கா இரண்டினும் இசுலாமிய சமயமும் பரவி ஒரு தெய்வக் கொள்கை வேரூன்றிவிட்டது. இவை இரண்டும் விவிலிய நூல், குர்ஆன் இவைகளை ஆதார நூல்களாகக் கொண்டு பண்டைய சமயக் கொள்கைகளை முழுதும் மாற்றி விட்டன. கிறித்து சமயம் உரோமில் நடுநாயகமாக இருந்து வெள்ளையர் நாடுகள் முழுதும் பரவிவிட்டது. இசுலாமியமோ அரேபியாவை ஒரு நடுநாயகமாகக் கொண்டு வட ஆப்பிரிக்கா, மேல் ஆசியா, நடு ஆசியா முழுதும் பரவிவிட்டது. இவ்விரண்டு சமயங்களும் உலகில் பெரும் பகுதியைத் தம்முள் அடக்கிக் கொண்டன.

ஆனால், மனிதனுடைய வேற்றுமை நினைவுகளால் இவைகளிலும் பல பிரிவுகள் தோன்றிப் பிளவுகள் ஏற்படத் தொடங்கின. பல நாகரிகக்கொள்கைகள் இவைகளில் தோன்றி மக்களுடைய நம்பிக்கைகளும் மாறத் தொடங்கின. விஞ்ஞான ஆராய்ச்சிகளின் பயனாக

அம்மதங்களின் ஆதார நூல்களில் கண்ட கொள்கைகளிலும் வேறுபாடுகள் ஏற்பட்டுப் பகுத்தறிவுக்குத் தகுந்தபடி மாறுதல்கள் தோன்றியிருக்கின்றன.

இனிக் கிழக்கு ஆசியாவிலும் பௌத்த சமயம் பரவிப் பழுப்பு, மஞ்சள் நிறத்து மக்களைச் சீர்திருத்தி விட்டது. சீனா, ஜப்பான், இந்தோசீனா முதலிய நாடுகளில் பௌத்த சமயம் பண்டைய சமயங்களைச் சீர் திருத்திவிட்டது. இந்தியாவில் தற்போது பெரும் பான்மையாக இருப்பது ஆரிய சமயம். அது இந்து சமயம் என்ற பெயரால் வழங்கி வருகிறது. இதில் ''சார்வாகம்' (நாத்திகம்) முதல் அத்வைதம் இறுதியாகக் கணக்கற்ற சமயபேதங்கள் உள்ளன.

இவை இரண்டும் தவிரச் சிண்போ சமயம், கன்பூசியஸ் சமயம் முதலிய சில்லறைச் சமயங்களும் கீழ்நாடுகளில் உண்டு. ஆகவே தற்போது உலகில் உள்ள பெரும் சமயங்கள் நான்கு எனலாம். கிறித்து, இசுலாம், இந்து, பௌத்த சமயங்கள் உலக மக்களைப் பகிர்ந்து கொண்டுள்ளன. இவைகளில் கிறித்து, இசுலாம், பௌத்தம் தனித்தனிப் போதகாசிரியரால் தொடங்கப்பட்டவை. இந்து சமயம் தனி ஆசிரியர் இல்லாமல் பண்டு முதல் வழங்கிவந்த பெருமை பெற்றது.

4. சமயத்திலும் அலைத்தொடர்ச்சி

நீர்ப் பரப்பில் அலைகள் ஏறியும் இறங்கியும் தொடர்ந்து செல்வது இயற்கையே. அதுபோல மனித வாழ்க்கையிலும் காண்கின்றோம். தனிக்குடும்பத்திலும் தனி இனத்திலும் வளர்ச்சி தாழ்ச்சி மாறி மாறி வரும். 'ஆறிடும் மேடும் மடுவும் போலாம் செல்வம் ஏறிடும் மாறிடும்' என்றார். அதுபோல் சமயங்களிலும் உயர்வு தாழ்வு ஏற்படுவதை வரலாறு நிருபிக்கின்றது. நாடுகளிலும் அதையே காண்கிறோம். இதற்குக் கால அளவும் இருக்கலாமோ என்றும் சிந்திக்கலாம். ஒரு குடும்பத்தின் செல்வாக்கு ஒரு தலைமுறையில் ஏற ஒரு தலைமுறையில் நிற்க ஒரு தலைமுறையில் அழியக் காண்கிறோம்.

இனங்கள் அல்லது ஒத்த பண்புடைய தொகுதிகளை எடுத்து ஆராயின் குடும்பத்தை விடச் சிறிது நீண்டகால அளவு காண்கிறோம். உதாரணமாகக் கோவையில் ஒக்கிலியர் தேவாங்கர், கம்மவார் முறையே ஏற்றமும் இறக்கமும் கொண்டிருக்கிறார்கள் அல்லவா? இந்த முறையில் அரசியல் வளர்ச்சியும் தாழ்ச்சியும் பெற்றுள்ளன. எகிப்து, மெசபொடோமியா, பாரசீகம், கிரீசு, உரோம், ஹுணர் நாடு, துருக்கி, ஸ்பெயின், பிரான்சு, இங்கிலாந்து, அமெரிக்கா இவைகள் முறையே ஏற்றமும் தாழ்வும் பெற்றிருக்கின் றன. இத்தகைய மாறுதல்கள் ஒருவகையில் சமயங்களையும் பீடித்திருக்கின்றன. பல சமயங்கள் உயர்ச்சியும் தாழ்ச்சியும் அடைந்ததாகப் படித்திருக்கிறோம்.

சமய வரலாற்றில் சிறிது வேறுபாடான தொடர்ச்சி காண்கிறோம். அதனைச் சமய ஆசாரியர்கள் மும்முரத்தினால் ஏற்பட்டிருக்கக் காணலாம். அவர்கள் போதனைகளால் சமய உணர்ச்சி மக்களிடையே அவ்வப்போது மேம்பாடு அடைந்திருக்கிறது. இதனை உலக இயற்கைப் போக்கின் இயல்பு என்று கூறலாமோ? இந்த அட்டவணையைச் சிந்தியுங்கள்.

25 நூற்றாண்டு	500 கி.மு.	புத்தர் (பௌத்தம்) மகா வீரர் (சைனம்) சாக்ரடீசு (கிரேக்) கான்பூசியஸ் (சீனம்) ஜோநாஸ்தர் (பார சீகம்)	முதற்சங்கம் தொல்காப்பி யர்
20 நூற்றாண்டு	1 கி.பி.	கிறிஸ்து (பாலஸ்தீன்) காளிஸ்கர் (காசுமீர்) ஆந்திர் (தான்ய கடகம்) விக்கிரமா தித்தன், சாலிவாகன் (வடநாடு)	கடைச் சங்கம் திருவள்ளுவர்
15 நூற்றாண்டு	500 கி.பி.	முகம்மது (அரபு) பாஹியான் (சீனம்) காளிதாசன் (வடக்கு)	சைவ மறு மலர்ச்சி, சம் பந்தர், அப்பர்
10 நூற்றாண்டு	1000 கி.பி.	இசுலாம் வளர்ச்சி (நடு ஆசியா) பசவர் (நடுபாரதம்)	சோழர் முதிர்ச்சி சேக்கிழார் இராமானுசர்
5 நூற்றாண்டு	1500 கி.பி.	நானக் (சீக்கியர்) கபீர், துளசி தாசர், இராமாநந்தர்	சித்தாந்த ஆசி ரியர் வைணவ ஆசிரியர் மடாலயங்கள்
தற்காலம்	1950	இராம கிருஷ்ணர். இராம மோஹன், துளசிதாசர் (வடக்கு)	இராமலிங்கர்

மேலே கூறப்பட்ட பாகுபாடுகளைக் காணுங்கால் 500 ஆண்டுகளுக்கு ஒருமுறை உலகிலே சமய ஆசிரியர்கள் தோன்றிப் புத்துணர்ச்சி தந்திருக்கிறார்கள். பல சமயங்களும் சமயச் சீர்திருத்தங்களும் அவர்களாலேயே தோன்றி

இருக்கின்றன. அவர்கள் தோன்றிச் சமயப் பரப்புச் செய்ததும் நாட்டில் எங்கும் சமயப் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. அஃது ஒன்றிரண்டு நூற்றாண்டுகளில் வீரத்துடன் தொழில் செய்து மக்களை ஈடேற்றி வந்திருக்கின்றது. பிறகு சிறிது சிறிதாக ஓய்ந்து தாழ்வு அடைந்திருக்கின்றது. பின்னர் 500 ஆண்டில் மீண்டும் அதே கதியைத்தான் காண்கிறோம்.

5. பாரதச் சமயம் - அடிப்படைகள்

பாரதநாட்டில் வழங்கும் பெரும்பான்மைச் சமயம் இந்து சமயம் என்று வழங்கும் தொன்மைச் சமயமும் அதன் கிளைகளும். இந்து என்ற சொல் பிறரால் இந்த நாட்டுக்குக் கொடுக்கப்பட்டது. அதனை வை தீகம் அல்லது சனாதனம் என்று நாட்டுமக்கள் வழங்கு கிறார்கள். இதில் பல வேறுபட்ட கொள்கைகள் உண்டு. காலா காலங்களில் வெவ்வேறு ஆசிரியர்கள் வெவ்வேறு கொள்கைகளை வற்புறுத்திச் சென்றார்கள். இவைகளைத் தனிச்சமயங்கள் என்றும் கூறத்தக்க வேற்றுமைகள் ஒவ்வொன்றிற்கும் உண்டு. நாத்திகம் முதற்கொண்டு அத்வைதம் இறுதியாக உள்ள சமய வேறுபாடுகளை ஒரு தனிச்சமயம் என்று எவ்வாறு கூற முடியும் என்றும் தர்க்கிப்பார்கள். என்றாலும் இதனை ஒரு தனித்தொகுதிச் சமயம் என்று கூறின் அது மிகை யன்று. அந்நிலைமையை இரண்டு காரணங்களால் விளக்கலாம். ஒன்று: இதன் பிரிவுகளுக்குள் உள்ள அடிப்படைக் கோட்பாடுகள் எல்லோரும் ஒத்துக் கொள்ளக்கூடியவைகள். இரண்டு : இச்சமயத்திற்கும் உலகில் உள்ள வேறு சமயங்களுக்கும் உள்ள கொள்கை வேறுபாடுகள். இவ்விரண்டைக் கொண்டும் இந்து சமயம் தனிச் சமயம் என்று கூறலாம்.

இந்து சமயங்களில் உள்ள அடிப்படைக் கொள்கைகள் பலவகைப்பட்ட மணிகளைக் கோத்த சரடு போன்றவை. அச்சரடு பலவகை மணிகளையும் இணைத்துக்கொண்டும் பிரிக்க முடியாமலும் பாதுகாக்கும். அதுபோன்ற பண்புகளாவன :-

1. கடவுள் ஒருவர், உயிர்கள் (ஆன்மா) பல. கடவுள் பேரறிவு படைத்தவர். உயிர்கள் சிற்றறிவின. கடவுள் அளவிறந்த பெருங்கருணையினால் உயிர்களுக்கு உடல் முதலிய துணைகளைத் தந்து துய்ப்பறிவை விளக்கி ஈடேற்றுகிறார். அவ்வீடேற்றம் வீடுபேறு.

2. அவ்வாறு துய்ப்பறிவு பெறுவதற்காக உயிர்கள் பிறவிகளை எடுக்கும். அப்பிறவிகள் துய்த்தறிதற்குத் தக்கபடி படிமுறையில் அல்லது வளர்ச்சித் தத்துவ முறையில் (பரிணாமம்) ஈடேறுவன.

3. கடவுளே ஆசானாக எழுந்தருளி உயிர்களுக்குப் பெருங்கருணையினால் ஞான அனுபவம் (அறிவு முதிர்ச்சி) தந்து ஆட்கொள்ளுவார்.

4. உயிர்கள் செய்யும் நல்வினை, தீவினைகளுக்குத் தக்கபடி பிறப்பு இறப்புகளைப் பெற்று அதன் பயன் களைத் துய்க்கின்றன. அவ்வாறு விதைத்த வினைப் பயனைப் புசிப்பதே கருமம் அல்லது வினை எனப்படும். இது ஊழ்வினையாகப் பெருகும். இதனை ஒழிப்பதற்கு இறைவழிபாடும் இறை அடைக்கலமும் வேண்டும்.

5. அதற்காக உயிர்கள் இறைவனை வழிபட வேண்டும். அதில் சிற்றின்பங்களை ஒழித்துப் பேரின்பத்தைக் கோரியே முயல வேண்டும்.

6. உயிர்கள் பக்குவம் அடையும் மட்டும் சமய நிலையங்களில் ஈடுபட்டு முன்னேற வேண்டும்.

7. அந்த வகையில் நல்லொழுக்கம், நற்குணங்கள், நற்செயல்கள் முதலியவற்றைக் கைக்கொண்டு, தீயவைகளை அறவே ஒழிக்கவேண்டும்.

8. கடவுள் அருள் வடிவமானவர். ஆகவே அவரை அடைவதற்குத் தாமும் அன்பு மயத்தில் ஈடு படவேண்டும்.

9. பிற உயிர்களிடத்தில் அன்பும் அருளும் கொண்டு தீங்கு அணுகாத வண்ணம் நல்லொழுக்கத்தில் ஈடுபட வேண்டும்.

10. இறைவன் கருணைக்கும் மன்னிப்புக்கும் புகலிடம். ஆதலால் அவைகளை முன்னிட்டே வழிபாடு செய்ய வேண்டும்.

இந்தப் பத்துக் கொள்கைகளும் இந்துசமயத்திற்கு அடிப்படையானவைகள். இவைகள் எல்லாச் சமய பேதங்களுக்கும் பொதுவாக உள்ள பண்புகள். இந்தப் பண்பாடுகள் தாம் எல்லாச் சமயப் பிரிவுகளையும் கட்டுப் படுத்தி இருப்பவை.

வேற்றுமைகள் காணப்பட்டால் அவைகள் சடங்குகளிலும் சின்னங்களிலும் பெயர்களிலும் காணப்படும். அவ்வேற்றுமைகள் அடிப்படையானவை அல்ல. ஆகவே அவைகளை வைத்துக்கொண்டு இந்துமதம் ஒரு தனிச்சமயம் அன்று என்று கூறுவது அறியாமையே ஆகும்.

6. இதற்கும் பிறநாட்டுச் சமயங்களுக்கும் உள்ள வேறுபாடுகள்

பிறநாட்டுச் சமயங்களுக்கும் நமது நாட்டுச் சமயத்திற்கும் உள்ள சிறப்பு வேறுபாடுகளைக் கூறுவோம்:-

1. **தோற்றம்:** இந்து சமயமும் அதன் மேற்கோள் (பிரமாணங்)களும் ஒருவரால் தோற்றுவிக்கப் பட்டவைகள் அல்ல. அவை அரிய செயல்கள் (அற்புதங்கள்) மூலமாகவோ தனி ஆசிரியன் ஆற்றல் வழியாகவோ தோன்றியனவல்ல. பண்டைக்காலம் முதற்கொண்டே நாட்டில் தோன்றிய பேரறிஞர்களான ஞானிகள் தங்கள் உள்ளொளிப் பெருக்கினாலும், சாதன முறைகளினாலும் பெற்ற அறிவாற்றல்களின் விளைவேயாகித் தொகுத்து நின்றனவேயாகும். கிறித்து சமயம் இயேசு கிறித்துவினாலும், இசுலாமியம் முகமது நபியி னாலும், பௌத்தமதம் சித்தார்த்த கௌதமராலும் தோற்றுவிக்கப்பட்டன. அவைபோலவே சைனம் வீரராலும், பாரசிகம் ஜொரோஸ்தராலும், சீனசமயம் கன்பூசியஸாலும் தோற்றுவிக்கப்பட்டன. அப்படிப்பட்ட தனித் தோற்றுவாய் இல்லாது மிகத் தொன்மை வாய்ந்தவை இந்து சமயமும் அதன் கோட்பாடுகளும்.

2. காரணகாரிய முறையில் உலகில் செயல்கள் தோன்றுவதைப் போலவே இந்துசமய ஒழுக்க நெறியிலும் விதைத்தவன் விதைத்ததையே அறுத்துப் புசிப்பான் என்ற படிப்பினையைக் கொண்ட ஊழ்வினை (கன்மவழி) அமைப்பு உண்டு. அதுவே உலகை இயக்குவிக்கும் ஒழுங்கு ஆகும். மற்றச் சமயங்களில் இவ் வமைப்பு இல்லை.

3. அந்த ஊழை வெல்வதற்கு எளிதான முறைகள் இல்லை. ஆனாலும் அதனை வென்று இறையடி அடைய இறைவழி நிற்றல் ஒன்றே ஆகும். மற்றச் சமயங்களின்

சமயமாற்றம், ஆசிரியன் உதவி, இவைகளன்றி இறையடி பெற முடியாது.

4. கடவுள் ஒருவரேதாம். ஆனால், அவருக்கு மக்கள் பல பெயர் தந்து வடிவம் அமைத்து வழிபடினும் எல்லாருக்கும் அவரவர் பகுத்தறிவிற்குத் தக்கபடி அருள் கிடைக்கும். ஏனைய சமயங்களில் தங்கள் சமயத்தில் சேராவிட்டால் கதி இல்லை. தாங்கள் சொல்லுகிற வழிபாடு செய்யாவிட்டால் வீடுபேறு இல்லை.

5. உயிர்கள் வினைகளுக்கு ஏற்றபடி பிறவிகள் பெற்று இறுதியில் நற்கதி அடையலாம். இசுலாம், கிறித்துவம், இவைகளில் ஒரே பிறப்புத்தான் உண்டு. அதிலேயே துறக்கமோ,நிரயமோ பெறவேண்டும். கூர்ப்பு முறை (Evolution) கிடையாது. அவைகள் கடவுளைக் கடுங்கோலன் ஆக்குகின்றனவேயன்றி அருள் வடிவினனாய் ஆக்குவதில்லை.

6. தனிமனிதனுடைய வளர்ச்சி, சமுதாயத்தின் வளர்ச்சி, வாழ்க்கைக் குறிக்கோள், அதன் கூர்ப்பு முறை இவை எல்லாம் உலகப்படைப்பின் வெவ்வேறு கூறுகளேயன்றி வேறில்லை. இவைகள் திருக்குறிப்பை ஒட்டியே எல்லாம் நடைபெறும். மற்றச் சமயங்களில் மானுட வளர்ச்சி வாழ்க்கைக் கூர்ப்பு முறை முதலிய படிகள் இல்லை.

இந்த வேற்றுமைப் பண்புகளே இந்துசமயத்தைத் தனியே பிரித்து ஒப்பற்ற பெருமை தருகின்றன.

7. பாரதீய சமய வரலாறு

பாரதீய சமய வரலாறு ஒரு தனித்தன்மை பெற்றது. அதனை நீக்கிவிட்டுப் பாரதீய வரலாறு ஒன்றை எழுதினால் அது யாதொரு பயனும் அற்றது என்று கூறலாம்.

ஏனெனில், சமயமே ஒவ்வொரு பகுதியிலும் உட் புகுந்து ஊறிக்கிடக்கின்றது. ஆகவே, சமயவரலாற்றைக் கூறும்போது நாட்டு வரலாறு முழுவதையுமே கூற வேண்டியிருக்கிறது. எனவே, சுருக்கமாகத் தலைப்புக்களை மட்டுமே இங்குக் கூறுவோம்.

1. **பண்டைய நிலை :** 60 நூற்றாண்டிற்கு முன் நாட்டில் பண்டைக் குடிகள் வசித்திருந்தார்கள். நாளா வட்டத்தில் அவர்கள் ஓரளவு நாகரிகம் பெற்றிருந்தார்கள். நகரம், வீடு, கோயில், உருவ வழிபாடு, வேளாண்மை, அரசியல் இவைகள் ஆக்கவேலைகளாகக் கொண்டு வாழ்ந்தார்கள். அவர்களைத் திராவிடர் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். அவர்கள் பண்டைத் தமிழர்களே. இவர்களுடைய பண்பாடு புதைபொருள் ஆராய்ச்சியால் அறியப்படுகிறது. சிந்து நாகரிகம் என்று இதனைக் கூறுவர். அவர்கள் கடவுள் வழிபாடு கொண்டிருந்தார்கள். முதுமக்கட்டாழிகளில் புதையல் செய்திருந்த வகையில் அவர்கள் மறுபிறப்பு உண்டு என்று நம்பிக்கை கொண்டிருந்தார்கள். இவர்கள் பனிமலை முதல் குமரிவரை பரவியிருந்தார்கள்.

2. **ஆரியர் வருகை :** 40 நூற்றாண்டுகளுக்குமுன் வடமேற்குத் திசையிலிருந்து ஆரியர் குடியேறினார்கள். இங்கு வருமுன் இவர்கள் கால்நடைகளை மேய்த்துக் கூடாரங்களில் வசித்து வந்திருந்தார்கள். சிந்து, கங்கை, யமுனை, நதிதீரங்களில் குடியேறினார்கள். இவர்கள் இந்திரன், வருணன் முதலிய தெய்வங்களை வணங்கி வேதங்களை வழிவழியாக (பரம்பரையாக) ஓதி யாகங்களைச் செய்து வந்தார்கள். இங்கே வந்த பிறகு

உழவு முதலியவைகளைப் பண்டை மக்களிடம் கற்றுக் கொண்டு அவர்களைத் தெற்கே துரத்திவிட்டார்கள். அவர்கள் மொழி வடமொழி.

3. **அரசுகள் தோற்றம்:** ஆரியர்கள் நாட்டில் நிலையாக நின்றபிறகு தனித்தனி அரசியல்கள் ஏற்படுத்தினார்கள். வைதீகச் சடங்கும் சிறப்பாகச் செய்யப்பட்டது. யாகங்களில் பிராணிகளைப் பலி கொடுத்து வந்தார்கள். வேதங்களோடு உபநிஷத்துக்கள் தோன்றின. தென்நாட்டில் சேர சோழ பாண்டியர்கள் அரசர்களாகி மிக மேன்மையுடன் தமிழ்க் கொள்கைகளை முன்னிட்டுச் சமயக்கொள்கைகளில் சிறந்து விளங்கினார்கள். வடக்கே 30 ஆம் நூற்றாண்டின் அளவில் நாட்டு வரலாறுகளை ஒட்டி இதிகாசங்கள் தோன்றின.

4. **சமண, பௌத்த சமயங்கள் :** கி. மு. 5 ஆம் நூற்றாண்டில் யாகப் பலிகளுக்கு எதிர்ப்புத் தோன்றியது. மகாவீரர் சமண சமயத்தையும், கௌதமர் பௌத்த சமயத்தையும் தோற்றுவித்தனர். அவர்கள் அரசகுலங்களில் பிறந்தவர்கள். அரசர்களையும் சேர்த்துக்கொண்டனர். சந்திரகுப்தர் சமணத்தையும், அசோகர் பௌத் தத்தையும் போற்றிப் பரப்பினர். இவைகள் வெளி நாடுகளுக்குஞ் சென்றன.

5. **மேல்நாடுகளின் தொடர்பு :** பாரசீகர், கிரேக்கர் மேல்நாடுகளிலிருந்து படையெடுத்து வந்தனர். அவர்களில் சிலர் பாரதத்தில் தங்கினர். யவனத் தொடர்பு ஏற்பட்டமையால் இந்தியக் கலைகளும் சமயக் கொள்கைகளும் மேற்கே செல்ல, யவனர் கொள்கைகள் இந்தியாவிற்குள் வந்தன. பௌத்த சமணங்களுள் உருவ வழிபாடு தொடங்க, யவன உருவ வழிபாடும் அதனுடன் கலக்க, நாடு முழுதும் அது பரவிவிட்டது. யாகச் சடங்குகள் குறைந்தன. ஆரிய சமயத்துள் சீர்திருத்தம் ஏற்பட்டது. முதல்

நூற்றாண்டில் மொழிப் பயிற்சியுடன் சமய மறுமலர்ச்சியும் ஏற்பட்டது.

6. தென்னாட்டில் முச்சங்கங்கள் தோன்றித் தமிழ் ஆராய்ச்சி வளர்ந்து சமய முன்னேற்றமும் அடைந்து வடநாட்டுக் கலப்பும் சிறுகச்சிறுக உண்டாயிற்று.

7. **இரு பெரிய வளர்ச்சிகள் :** கி.பி. தொடக்கமுதல் 6ஆம் நூற்றாண்டுவரை சீர்திருத்தம் பெற்ற ஆரியசம்யம் வடக்கே மறுமலர்ச்சி பெற்றது. சிறந்த சாம்ராஜ்ஜியமாகக் குப்தப்பேரரசு தோன்றிப் படையெடுத்து வந்த ஹூணர்களை விரட்டி ஓட்டியது. வடமொழி மிகச் சிறப்பாக முன்னேறிற்று. காளிதாசன் முதலிய பெருங்கவிஞர்கள் தோன்றிப் புராணக்கதைகளை நாட கங்களாகவும், காவியங்களாகவும் விளக்கிப் பரப்பி னார்கள். தெற்கே பல்லவர் தோன்றிச் சமணத்தை முதலில் பின்பற்றிப் பிறகு சைவ ஆசிரியர்களால் சீர் திருத்தப்பெற்றுச் சிறப்பக் கோயில்களை உண்டாக்கி நாட்டில் சைவத்தை நிலைநாட்டினார்கள்.

8. **இரண்டாம் பேரரசு :** வடக்கே பல சிற்றரசுகள் தோன்றி ஆரியத்தைப் பின்பற்றிப் பிறகு கன்னோசியில் ஸ்ரீஹர்ஷன் தோன்றி மீண்டும் பேரரசைத் தோற்றுவித்தான். வடமொழியும் வேதசமயமும் முன்னேறின. தெற்கே பல்லவர்களும் பாண்டியர்களும் சைவ வைணவங்களைப் பரப்பினார்கள். நாயன்மார்களும் ஆழ்வார்களும் சமயப்பரப்புச் செய்தார்கள்.

9. **சமயப் படையெடுப்பு :** 10 ஆம் நூற்றாண்டு வடநாடு பல சிறு அரசுகளாகப் பிரிந்து ஒற்றுமையின்றி வலுக்குறைவாக இருந்தது. வடமேற்கு மூலையில் இருந்து ஆப்கானிய முசுலீமுகள் இந்நாட்டின் மீது பல முறை படையெடுத்து இந்துக் கோயில்களைக்

கொள்ளையடித்துத் தங்கள் சமயத்தைப் புகுத்தினார்கள். இந்து சமயத்திற்கும், சமய நிலையங்களுக்கும் பேரிடர் நேர்ந்தது. 200 ஆண்டுகளுக்குள் வடநாடு முழுதும் முசுலீம் ஆதிக்கத்துக்குட்பட்டு விட்டது. தென்நாட்டில் அமைதி நிலவியிருந்தது. சோழர் பேரரசு சைவத்தை நிலைநிறுத்திப் பெருங்கோயில்களைக் கட்டிச் சமயத்தைப் பரப்பிற்று. கடல் கடந்தும் சைவத்தைப் பரப்பிற்று. இலங்கை, பர்மா, சாவகம் முதலிய இடங்களில் சைவம் பரவிற்று.

10. **சமய மறுமலர்ச்சி:** 15 ஆம் நூற்றாண்டு ஆப்கானியக் கொடுங்கோலின் பிறகு முகலாயப் பேரரசு வந்தது. முதலில் சமயம் தாக்கின முறையில் நாட்டுச் சமயத்தில் மாறுதல்கள் ஏற்பட்டன. சமரச பாவனைகள் தோன்றின. நானக் சீக்கிய சமயமும், கபீர் சமய ஒற்றுமையும், துளசிதாசர் பக்தி ஏற்றமும் செய்தார்கள். தென்னாட்டில், சோழர் ஆட்சி குன்ற விஜய நகரத்து ஆட்சி தொடங்கியது. தமிழர் சமயம் நிலைத்தது. கோயில்கள் புதுப்பிக்கப்பட்டன. மடங்கள் தோன்றிச் சமயப் பனுவல்கள் எழுதப்பட்டன.

11. **வெள்ளையர் நுழைவு:** 16 ஆம் நூற்றாண்டு மேற்கிலிருந்து வெள்ளையர் புகுந்து கிறித்து சமயத்தை நுழைக்க முயன்றனர். வடநாட்டை விடத் தென்னாட்டில் அவர்கள் ஆதிக்கம் மிகுந்தது. தாழ்ந்த வகுப்பினர் அதனைப் பின்பற்றினர். ஆனால், முன்னேற்றம் மிகக் குறைவு.

12. **தற்காலம்:** பிற சமயங்கள் வலிமை காட்டியதனால் நாட்டில் பல சமயங்கள் பரவிவிட்டன. தற்போது அடியிற்கண்ட புள்ளிவிவரங்கள் காணப்படுகின்றன :

1. இந்து 2. முசுலீம் 3. கிறித்து 4.சமணம் 5. பௌத்தம் 6. பாரசீ 7. ஆதிவாசி 8. ஏனையவை.

8. சான்று (ஆதார) நூல்கள்

பாரதீய சமயங்களுக்கு அடிப்படைச் சான்று நூல் கள் 1. சுருதி மிருதி என்றும் 2. வேதம், ஆகமம் என்றும் இருவகையாகக் கூறப்படும். சுருதி என்றால் கேட்கப்படுவது. மிருதி என்றால் நினைக்கப்படுவது என்பது பொருள். இனி வேதம் என்றால் அறிவு, ஆகமம் என்றால் நூல் என்றும் பொருள்படும். இவ்விரு பிரிவினைக்கும் பொதுவாக உள்ள சுருதி அல்லது வேதம் காலவரம்பிற்கு முற்பட்டது. அவைகளில் இருந்து விரிக்கப்பட்டனவே மற்றவைகள். வேதங்கள் நான்கு: இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்பன. இவைகள் ஒவ்வொன்றும் முறையே மந்திரம், பிரா மணம், உபநிடதம் என்று பிரிக்கப்படும். மந்திரம் பண்டைய ஆரியர்கள் அமரர்களை வணங்கின துதிப் பாடல்கள் அல்லது வேண்டுதல்கள். இவை மாணவர்களுக்குரியவை. பிராமணம் வேள்விச் சடங்குகளை விரிப்பன. இவை இல்லறத்தார்க்குரியன. இவைகளில் தொடர்ச்சி ஆரண்யம் எனப்படும். அவை வனங்களில் தவம் புரிவார்க்குரியன. உபநிட தங்கள் உயிர் இறைவன் முதலிய தத்துவங்களை உணர்த்துவன. இவை துறவிகட்கு உரியன. இவைகள் 108 ஆகும். 12 சிறந்தவை. இவை அறிவின் கருவூலங்கள். ஆகவே, வேதாந்தம் (வேதத்தின் முடிவு) எனப்படும்.

இனி, மிருதி என்பவை 5 பகுதிகள் கொண்டவை. 1.அறநூல், (தருமம்). 2. வரலாற்று நூல் (இதிகாசம்). 3.புராணம் (பழங்கதை). 4. ஆகமம் (சடங்கு நூல்). 5.தரிசனம் (மதக்கொள்கை) என்பன. அவைகளில்

1.அறநூல்கள்: மது, வாத்சாயன், சங்கரிதர், பராசர் என்பவர்கள் இயற்றிய 3 ஒழுக்க நூல்கள்.

2. வரலாறு: இராமாயணம், மகாபாரதம் என்ற ஆரிய சந்திரவமிச சரிதைகள். பாரதத்தில் பகவத்கீதை என்ற தத்துவப் பகுதி இருக்கிறது.

3. புராணம்: 18. இவைகள் சைவ, விஷ்ணு வரலாறுகள் கூறுவன. நாட்டு அரசக் கால்வழிகளையும் கூறுன.

4. ஆகமம்: தெய்வக்கொள்கை, தெய்வ நிலையங்கள், தெய்வ வழிபாடுகள் கூறுவன. இரண்டு பகுதிகள் கொண்டு சைவ வைணவ, ஆகமங்கள் என உள்ளன. சைவ ஆகமம் 28. காமிகம், காரணம், வாதுளம், சுப்ரபேதம் சிறந்தவை. வைணவாகமம் வைகானகம், பாஞ்சராத்திரம் என இரு வகைப்படும். கோயில்களில் இவைகளில் கண்டபடி வழிபாடு முதலியன நடைபெறும்.

5. தரிசனம்: என்பது உயர்ந்த தத்துவ ஞானத்தைக் கூறும் பகுதிகள். அவைகள் ஆறு வகைகள் ஆகும்.

பிரிவு	இயற்றியவர்
நியாயம்	கௌதமர்
வைசேஷியம்	கணாதர்
சாங்கியம்	கபிலர்
யோகம்	பதஞ்சலி
மீமாம்சம்	சைமினி
வேதாந்தம்	பாதராயனர்

இவைகள் சூத்திர வடிவாக இயற்றப்பட்டுள்ளன. இவைகளுக்குப் பல பேரறிஞர்கள் விரிவுரை எழுதி இருக்கிறார்கள். இவைகளில் வேதாந்தம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இஃது உபநிஷத்துக்களின் சாரம் ஆகும். இதன் பேருரைகள் (பாடியம்) சங்கரர் (அத்வைதம்) இராமாநுசர் (விசிஸ்டாத்வைதம்) மத்துவர் (துவிதம்), நீலகண்டர் (சிவாத்துவிதம்) எனப் பலரும் எழுதியுள்ளார்கள். இவைகள் ஒவ்வொன் றிற்கும் வேறுபாடுகள் உண்டு. இவ் வேறுபாடுகளை ஒட்டியே நாட்டில் சமய பேதங்கள் உண்டாயின. இவர்களே கீதைக்கும் பேருரைகள் தம் தம் கொள்கைகளை வற்புறுத்தி எழுதியுள்ளார்கள். இவைகள் வடமொழியில் எழுதியிருந்த போதிலும் தென்னாட்டிலும் பரவியிருக்கின்றன.

9. சமய நிலையங்கள்

ஆதார நூல்கள் உயர்ந்த தத்துவங்களைக் கூறிய வகையால் மிகப் பிடித்த வகுப்பார்களே நன்கு அறிந் தார்கள். ஆனால் சமய ஒழுக்கங்களை மற்ற வகுப்பார்கள் அறியவில்லையோ என்று வினவலாம். அவைகளைச் சமய நிலையங்களே அறிவித்தன. அந்நிலையங்கள் மூவகைப்படும். 1. கோயில்கள், 2. மடாலயங்கள், 3.சமுதாயச் சடங்குகள். இவைகளில் கோயில்களே பாமர மக்களையும் சமய உணர்ச்சியில் ஈடுபடுத்தின. இறைவன் ஒருவனே ஆயினும் அவனுடைய செயல்களால் மும்மூர்த்திகளாக விளங்குகிறான். படைத்தலுக்குப் பிரமன் (அயன்) காத்தலுக்கு மால் (அரி). அழித்தலுக்குச் சிவன் (அரன்) என வணங்கப்படுவான். பிரமன் நிர்க்குணமானவன். ஆகவே அருவன் எனவே அவனுக்குக் கோயில் வேண்டியதில்லை. தனிக்கோயில் கிடையாது. விஷ்ணு உருவம் கொண்டவன். சகுணம் ஆனவன். ஆகவே கோயில் உண்டு. சிவன் அருவ உருவம் கொண்டவன். இலிங்க வடிவில் தொழக் கூடியவன் ஆகவே கோயில் உண்டு. பாரதநாடு முழுதும் சிவ வைணவக் கோயில்களே இருக்கின்றன. ஆகவே இரண்டு மூர்த்திகளையும் வணங்குகிறவர்கள் நாளடைவில் தனித்தனி சமயிகள் ஆகிப் பிரிந்தார்கள். கோயில்கள் பிரியவே அங்கே நடக்கும் சடங்குகளும் ஆராதனைகளும் வெவ்வேறாயின. தமிழ்நாட்டில் வணக்கப் பாடல்களும் வேறாயின. அவைகளை இயற்றிய அடியார்களும் வேறாயினர். ஆனால் அடிப்படை ஒன்றே. ஆலயங்களில் நடைபெறும் விழாக்களும் வேறே. இனி இவ்விரு மூர்த்தங்களின் மூர்த்திகளும் வேறே. சிவாலயங்களில் சிவகுமாரர்களான விநாயகர், முருகர் ஆலயங்கள் உண்டு. மற்றும் இவர்களுக்குத் தனிக் கோயில்களும் ஏற்பட்டன. விஷ்ணு ஆலயங்களில் அனுமான் கருடன், இவர்களுக்கும் கோவில்கள் உண்டு. சக்திபீடங்கள் தோன்றின.

சிவசக்தியாகிய உமையம்மைக்கும் கோவில்கள் உண்டு. விஷ்ணு சக்தியாகிய திருமகளுக்கும் கோவில்கள் உண்டு. கிராம தேவதைகளான காளி முதலிய சக்திகளுக்குக் கோயில்கள், வழிபாடுகள் உண்டு.

இரண்டாவதான நிலையம் மடாலயம் ஆகும். மடாலயங்களில் பெரும்பாலும் துறவிகளே தலைமை வகிப்பார்கள். இவர்கள் குருசீட பரம்பரையில் வருகிற வர்கள். இவர்களுக்குத் தனித்தனி சமயபேதமுண்டு. பாரதநாடு முழுதும் பலவகைத் தத்துவங்களைப் போதிக்கும் மடங்கள் உண்டு. அத்வைதம், விசிட்டாத் வைதம், துவைதம், சைவம் முதலியன பண்டை மடங்கள். விசிட்டாத்வைதத்தில் வடகலை, தென்கலை என்ற இரு பாகுபாடுகள் உண்டு. சைவத்தில் சித்தாந்த சைவம், ஐக்கியவா தசைவம், வீரசைவம் முதலிய பல பாகுபாடுகள் இருக்கின்றன. இவ்வாறான ஒவ்வொரு சமயபேதத்திலும் கணக்கற்ற மடங்கள் உண்டு.

அம்மடங்களுக்குக் கணக்கற்ற சீடர்கள் இருக்கி றார்கள். வடநாட்டில் 15ஆம் நூற்றாண்டில் சீர்திருத்த வகையில் பல புதுமடங்கள் ஏற்பட்டன. அவைகளில் கபீர் சைதான் வல்லபாசாரியார் முதலிய பல மடங்கள் தோன்றின.

மூன்றாவது சமுதாயம் அல்லது சங்கம். இந்து சமூகம் சமய ஒழுக்கங்களால் கட்டுப்பட்டிருக்கின்றது. அவ்வொழுக்கங்களே சமூகத்தை ஒற்றுமைப்படுத்தி நிற்கின்றன. ஒழுக்கத்திற்கு உதவியாக நிற்பது சமயச் சடங்கு, இதனை ஓர் உருவகத்தால் விளக்கலாம்.

இந்துசமயத்தை ஒரு மானிடவடிவமாக உருவகப் படுத்தினால், அதன் கால்கள் சமயச்சடங்குகள், கைகள் ஒழுக்கம், நெஞ்சு வழிபாடு, மூளை ஞானம் என்க. ஒருவடிவம் கால்கள் இன்றி நிற்காது. ஆகவே சடங்குகள் இன்றிச் சமயம் நிலைக்காது. இந்த உண்மை உலகில்

எல்லாச் சமயங்களிலும் உண்டு. சடங்குகள் புறச்செயல்கள் தாம். நெல்லில் உமிபோன்றது. உமி நீக்கினால் நெல் முளைக்காது. ஆகவே சடங்குகள் போற்றப்படுகின்றன.

சடங்குகள் குடும்பவளர்ச்சிக்கு வேண்டியவை. அவை சிறிது சிறிதாகப் பெருகிச் சமுதாயத்தைப் பீடித்து நிற்கின்றன. முற்றத் துறந்த முனிவர்களுக்குச் சடங்குகள் வேண்டியதில்லை. குடும்ப வாழ்வில் உள்ளவர்கட்கு வேண்டும். சமய நிலையங்கள் வழிபாட்டிற்கு வேண்டும்.

வழிபாட்டில் தனிமனிதன், கூட்டம் என இரு வகைப்படும். தனிமனிதன் ஆன்ம முன்னேற்றத்தைக் குறித்து வழிபடுகின்றான். கூட்டவகையில் பல பேர் கூடி வழிபடுகிறார்கள். மடங்கள் பஜனை கோயில் இவைகளில் நடைபெறும். இவற்றிற்குத் தனித்தனி விதிகள் உண்டு.

தனிமனிதன், பெயரிடுதல், படித்தல், தீட்சை பெறல், விரதங்கள், நீத்தோர்கடமை முதலியவைகளில் ஈடுபடுகிறான். பண்டிகைகள் புனிதயாத்திரைகளும் உண்டு. பூசைகள் 3, 5, 16, விதங்களாகப் பிரிக்கப்படும்.

பொதுவழிபாடுகள், நாட்பூசை, காரணப்பூசை, திருவிழா (நித்தியம், நைமித்திகம், விசேஷம்) என்று மூன்றுவகை விசேடம் என்றும் சமயம் என்றும் கூறப் படும். நித்தியம் - நாட்பூசை. நைமித்திகன், புதுமதி நிறைமதிப் பூசைகள், விசேடம் வேண்டுதல் குறித்தது.

10. சமய ஞானம்

இந்து சமயத்திற்கு முளைபோன்றது ஞானம் அல்லது பேரறிவு ஆகும். அது வெறும் ஒளிவீசும் ஆகாயக் கோட்டையன்று. பண்டைக்காலம் முதற் கொண்டு பேரறிஞர்கள் கருதலளவையாற் (அனுமானத்தில்) கண்டுகொண்ட கொள்கைத்தொகுதி ஆகும். அதனை நான்காகப் பிரித்துக் காணலாம். கடவுள், படைப்பு, மனிதன், வீடுபேறு என்பன. இந்நான்கு பிரிவுகளைப் பற்றியும் வெவ்வேறு ஆசிரியர்கள் ஆராய்ந்து தம் கொள்கைகளை வெளியிட்டிருக்கின்றார்கள். அவர்களில் சிறந்தவர்கள், அத்வைதம் கண்ட சங்கரர், விசிட்டாத் வைதம் கண்ட இராமானுசர், துவைதம் கண்ட மத்வர், சித்தாந்தம் கண்ட மெய் கண்ட தேவஆசிரியர்.

1. அத்வைதம்: இது முதலில் 9ஆம் நூற்றாண்டு கௌடபாதரால் விளக்கப்பட்டது. அவருடைய மாணாக்கரின் மாணாக்கர் ஆன சங்கரர் அதனை விரிவு படுத்தினார். அதனை அவர் எழுதிய பேருரைகளில் காணலாம். சீவான்மா, பரமான்மாவின் ஒரு பொறி. சீவன் ஞானம் பெற்று வீடுபேறு அடையும்போது இறைவனோடு இரண்டறக் கலத்தலே முடிவு என்பதாம். கடவுள் - பிரமம்.

2. விசிட்டாத்வைதம்: முதலில் தென்னாட்டில் ஆழ்வாராதியரால் பிரபந்தங்களில் ஆளப்பட்டுப் பின் நாதமுனிகள் முதலிய ஆசாரியர்களால் விரிவாக்கப் பட்டு இராமாநுசர் என்ற உடையவரால் 12ஆம் நூற்றாண்டில் தெளிவாக்கப்பட்டுப் பரப்பப்பட்டது. ஆழ்வார்கள் தமிழிலும் உடையவர் வடமொழியிலும் எழுதியிருக்கிறார்கள். அதில் அன்பினால் இறைவனை அடையலாம். அவனில் சரணாகதி அடையவேண்டும், முத்திப்பேறு என்றால் பரமபதத்தில் நித்தியசூரியாக ஆனந்தத்தில் இருத்தலேயாகும். கடவுள் - திருமால்.

3. துவைதம்: என்பது மத்துவாச்சாரியாரால் 13ஆம் நூற்றாண்டில் தென்கன்னடத்தில் உடுப்பிக்கருகில் வெளியிடப்பட்டது. பரமாத்மன் வேறு சீவாத்மன் வேறு. ஜீவாத்மன் பேரறிவடைவது பக்தியினால். அவ்வாறு பேரறிவு அடைந்து இறைவனுடைய பரமபதத்தில் அவனுடன் இருந்து ஆனந்தம் துய்ப்பதே முத்திப்பேறு ஆம். கடவுள் - விஷ்ணு.

4.சித்தாந்தம்: தென்னாட்டில் 6, 8ஆம் நூற்றாண்டில் ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், வாதவூரடிகள் என்ற நால்வர்களால் தேவாராதிகளில் ஆளப்பட்டு நாயன் மார்களால் வாழ்க்கைகளில் பாராட்டப்பட்டுத் திரு மூலரால் விரிக்கப்பட்டு மெய்கண்ட தேவரால் சிவ ஞான போதத்தில் நிலை நிறுத்தப்பெற்று 14 சாத்திரங்களில் விவரிக்கப்பட்டது. இறைவன் (பதி), உயிர் (பசு), கட்டு (பாசம்) என்ற முப்பொருள்கள் என்றும் உள்ளவை. இறைவன் - பேரறிவாளன். உயிர் - சிற்றறி வுடையது. கட்டு தடையாக உள்ளது. உயிர் இறைவன் அருளினால் பேரறிவடையும் போது கட்டு நீங்கி இறைவனுடைய தாள் அடைவதே வீடுபேறு ஆகும். கடவுள் - சிவன்.

இந்த நான்கு சமயக் கொள்கைகளேயன்றிச் சிறு சிறு வேற்றுமைகள் கொண்ட வேறு சில சமயங்களும் உண்டு. அவைகளைப் பலவேறு வடநாட்டு, இடை நாட்டு அறிஞர்கள் நூல்களால் வெளியிட்டுள்ளார்கள். அவைகளை முறையே படித்து ஆராயலாம்.

இவ்வேற்றுமை சமயங்களில் இறுதிநிலை மட்டும் வேறுபட்டுக் கிடக்குமே ஒழிய அடிப்படை நிலைகள் ஒன்றே ஆக ஒருமைப்பட்டிருக்கும். ஆகவே பொது மக்கள் இவ்வேற்றுமைகளைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை என்க.

சைவ சித்தாந்தம்

I

1. முன்னுரை

நான்கு வகைச் சமய ஞானங்களில் சித்தாந்தம் ஒன்று. இது மற்ற எல்லாக் கொள்கையிலும் தொன்மை வாய்ந்தது. இது தமிழ்நாட்டில் சிறப்பாகத் தோன்றி வளர்ந்தது. வளர்ச்சி முழுதும் தமிழ்நாட்டினுடையதேயாகும். இதைப் போலவே தமிழ்நாட்டில் தோன்றி இங்கேயே தமிழர்களால் வளர்க்கப்பட்டது, திருமால் சித்தாந்தம் ஆகும். இவ்விரண்டையும் சித்தாந்தங்கள் என்று சிறப்பாகக் குறிப்பார்கள். மற்ற இரண்டாகிய அத்வைதமும், துவைதமும் வேதாந்தத்தில் சேர்த்துக் கூறுவார்கள். ஆனால் அச்சொல் அத்வைதத்திற்கே சிறப்பாகச் சொல்லப்படுகிறது. இவ்விரண்டும் வடமொழிச் சார்பில் தோன்றியவை. என்றாலும் தென்னாடாகிய கேரளம், துளு இவைகளில் தோன்றியவை. தோன்றிய இடங்களைக் குறித்து ஆராய்ந்தால் முதற் பெருமை தென்னாட்டிற்கே உண்டு. வேதாந்தக் கொள்கைகள் தெற்கே தோன்றினாலும் அவை வடக்கே சென்று மக்களைச் சீர்திருத்தின. ஆனால் வைணவர்கள் தமிழை மறக்கவில்லை. ஆந்திர நாடுகளில் வைணவப் பிரபந்தங்களைத் தெலுங்கில் எழுதியும், வட நாடுகளில் இந்தியில் எழுதியும் படிக்கிறார்கள். அப்படியின்றிச் சைவமோ தென்னாட்டிலேயே சிறப்பாகப் பரவி இங்கேயே பெருகிற்று. வட நாட்டாருக்குச் சைவ சித்தாந்தம் தெரியாது. காஷ்மீரத்தில் ஒருவகைச் சைவம் உண்டு. அது அவர்கள் மொழியிலேயே ஆராயப்படுகிறது. ஆகவே தூய்மையான தமிழ் நாட்டுச் சமயம் சைவசித்தாந்தம் ஆகும். வடமொழிகளில் இதன் கொள்கைகளையாவது நூல்களையாவது மொழிபெயர்க்க ஒருவரும் முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை.

உ. சொல்லின் பொருள்

சைவசித்தாந்தம் என்ற கூட்டுச்சொல் சைவம்+ சித்தாந்தம் என்ற இரண்டு சொற்களின் கூட்டுஆகும். சைவம் என்றால் சிவத்தொடர்பு கொண்டது. சித்தாந்தம் என்றால் உறுதி பெற்ற கோட்பாடு என்பன பொருள்கள். சைவம் சிவனை முழுமுதற்கடவுளாகக் கொண்டதாகும். சிவம் என்ற சொல்லுக்கு மங்கலம் உண்டாக்குபவன் என்பது பொருள். தன்னை வழிபடுவோர்க்கு என்றைக்கும் மங்கலம் செய்பவன் சிவன். சிவனே ஐந்து வினைகளைத் திருவுள்ளங்கொள்ளும் (சங்கல்பிக்கும்) போது அயன், அரி, அரன், மகேசன், சதாசிவன் என்ற மூர்த்திகளாகத் திகழுவன். அம்மூர்த்திகளின் தொழில்கள் ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவாகும். ஆகவே அவனே முழுமுதலாக நின்று எல்லாவற்றையும் இயக்குவிப்பவன். அவன் தொடர்பு கொண்ட சமயம் சைவ சித்தாந்தமாகும்.

இனிச் சித்தாந்தம் என்ற சொல் சித்த + அந்தம் என்ற இருகூறுகளின் இணைப்பு ஆகும். சித்த என்றால் முடிந்த என்றுபொருள். ஆகவே சித்தாந்த என்ற கூட்டுப்பதத்திற்குப் பொருள் நிலை நிறுத்தினமுடிவு மெய்ப்பிக்கப்பட்ட (ருசுவான) செய்தி. முடிவான கொள்கை என்பது ஆகும்.

ஆகவே சைவசித்தாந்தம் என்றால் சைவத் தொடர்பு கொண்ட முடிவான கொள்கை என்பது தெளிவு.ஏனைய கொள்கை அரை குறையாக நிற்கலாம். ஆனால் சைவசித்தாந்தமோ முடிவு கட்டின கொள்கையாகும். இனி இக்கொள்கைக்குமேல் வேறு கொள்கை இல்லை என்று கூறும்வகையில் முடிவுபெற்ற கொள்கைத் தொகுதி சித்தாந்தம் ஆகும். சைவத்தொடர்பு கொண்ட பல கொள்கைகள் உண்டு. பாசுபதம், காபாலிகம் முதலியன. அவைகள் குறைவு கொண்டவைகள். சித்தாந்தமே நிறைவுகொண்ட கொள்கைத் தொகுதி ஆகும்.

3. கொள்கைகளின் சுருக்கம்

சித்தாந்தக் கொள்கைகளைச் சுருக்கிக் கூறுவாம்: இறைவன் எல்லாவற்றிற்கும் முதல்வன் (பதி). அவன் பேரறிவுடையவன். எல்லாவற்றையும் இயக்குவிப்பவன். உயிர்கள் பல சிற்றறிவுடையன (பசு). ஆனால் முதிர்ச்சி அடைந்து பேரறிவு அடையக்கூடும். பிறப்பு, இறப்புக்களில் சுழல்வன. இறைவன் அருளால் தடைகள் நீங்கி விடுதலை பெறக்கூடும். அதற்குத் தடையாய் இருந்து இறைவனை அடையாமற் செய்வது பாசம். இஃது உலக வடிவாகத் தோன்றும் மாயை, ஆணவம், கன்மம் என்ற மூன்றுமாம். இவைகள் உயிரைப் பிணைத்துக்கொண்டே இருக்கும். பேரறிவு வர இவைகள் நீங்கும். அதுவே வீடுபேறு என்னப் படும். ஆகவே இறைவன், உயிர், தடை என்பன முப் பொருள்கள். இவை மூன்றும் என்றும் அழியாமல் இருப்பன.

இறைவன் தன் பெருங்கருணையால் உயிர்கள்மீது இரக்கம் கொண்டு உடல் முதலியவைகளைக் கொடுத்தும், அனுபவத்தைத் தந்தும் முதிர்ந்த அறிவு பெறுதற்கு வழி காட்டியும் பேரறிவு தருகிறான். இவ்வாறு பல பிறப்புக்களை எடுத்து, முதறிவு அடைகிறபோது இறைவன் தடுத்தாட்கொள்ளுகிறான். மும்மலங்களும் ஒவ்வொன்றாக நீங்கி இறுதியில் ஜீவன் முத்தனாகிறான். அதன் பேரில் அவனுக்குப் பிறப்பு இறப்பின்றி வீடு பேற்றுத் தன்மையினை (முமுக்ஷுவத்தை) அடைந்து கூறவொண்ணாப் பேரின்பத்தில் திகழ்கிறான். இப்படி வீடுபேற்றை அடைவதற்கு வேண்டிய சாதனங்களைக் கூறுவது சித்தாந்த முதன்மை ஆகும். அதனை ஐயந்திரிபுற உரைக்கும் நூல்கள் தமிழில் உள்ளன. அவைகளைப் பேரறிஞர்கள் உலகிற்கு நல்கிச் சென்றிருக்கின்றார்கள்.

4. சைவ ஆதார நூல்கள்

சைவசித்தாந்த ஆதார நூல்கள் இரண்டு வகைப் படும். 1. தோத்திரம் 2. சாத்திரம். தோத்திரங்கள் இலக்கியமாகவும், சாத்திரங்கள் இலக்கணமாகவும் இருக்கின்றன. தோத்திரங்கள் 6, 7 நூற்றாண்டுகளில் சிறிது முன்னும் பின்னும் சைவாசாரியர்களாலும், அடியார்களாலும் அருளிச் செய்யப்பட்ட புகழ் உருவமான நூல்கள் 12 ஆகும். இவைகள் பன்னிரண்டு திருமுறைகள் எனப்படும். நால்வர் பெருமக்கள் பாடிய தேவார திருவாசகங்கள் 8 திருமுறைகளாகவும் பின் வந்த சிவனடியார்கள் பாடியவை திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என 9ஆம் திருமுறையாகவும், திருமூலர் அருளிச்செய்த திருமந்திரம் 10ஆம் திருமுறையாகவும், பல புலவர்கள் பாடியவை 11ஆம் திருமுறையாகவும், அடியார்கள் வரலாறுகளாலான திருத்தொண்டர் புராணம் 12ஆம் திருமுறையாகவும் வகுக்கப்பட்டன.

இவைகளில் சித்தாந்த மெய்க்கொள்கைகள் ஆங்காங்கே போதிக்கப்பட்டாலும், பெரும்பான்மையான திருமுறைகள் தோத்திர நூல்களாகும்.

இனி இரண்டாம் தொகுதி இலக்கண வடிவான சாத்திரங்கள். இவைகள் 13, 14ஆம் நூற்றாண்டுகளில் அடியார்களால் உருவாக்கப்பட்டன. அவைகள் மெய்கண்ட நூல்கள் என்ற வகையில் எழுந்த 14 சாத்திரங்கள், சைவசித்தாந்தக் கொள்கைகளை நல்ல உருவில் தொகுத்திருக்கின்றன. இவைகளில் மெய்கண்ட தேவர் அருளிய சிவஞான போதம், அருணந்தி சிவாசாரியார் அருளிய சிவஞான சித்தியார், உமாபதி சிவாச்சாரியார் அருளிய சிவப்பிரகாசம் இம்மூன்றும் பெரியவைகள். திருவுந்தியார் முதலிய 11 நூல்களும் சிறியவைகள். இந்தப் பதினான்கு நூல்களும் சித்தாந்த ஆதார நூல்கள் ஆகும்.

இவைகளே தவிரச் சைவமடங்களில் தோன்றிய அருள் துறவிகள் பல அரிய தோத்திரங்களையும் இயற்றி உள்ளார்கள். இவைகள் மேலே கூறிய நூல்களைப் பல உதாரணங்களால் விளக்குபவை. இவைகள் பண்டார சாத்திரங்கள் என்னப்படும்.

இனிப் பல சைவப் புலவர்கள் அவ்வப்போது தோன்றிப் பல பனுவல்களையும், உரைகளையும் எழுதியிருக்கிறார்கள். சிவப்பிரகாசர், குமரகுருபரர், சிதம்பர முனிவர், கண்ணுடையவள்ளல், தாயுமானவர், முதலிய பல புலவர்கள் அரிய இலக்கியங்களை எழுதியிருக்கிறார்கள். சிவஞானமுனிவர், நிரம்ப அழகியர் முதலியோர் சாத்திரங்களுக்குப் பேருரைகள் வகுத் திருக்கிறார்கள். ஆனால் சில உரைகள் மூலத்தைக் காட்டிலும் கடினமாகவும் இருக்கக் காணலாம். இவைகளை முற்றும் படித்து அறியலாம். எல்லாவற்றிலும் சிறந்தது சிவஞான மாபாடியம் ஆகும்.

5. திருமுறைகளைப்பற்றி மற்றும் சில செய்திகள்

அறியத்தக்கவை அவைகள் தமிழ்மறை அல்லது திருமறைகள் என்றும் கூறப்படும். மறைகளில் காணப்படும் தெய்வீகப் புகழ்களேயன்றி தத்துவக் கொள்கைகளும் அவற்றில் அடங்கியிருக்கின்றன. பின்னால் தோன்றிய இலக்கணங்களாகிய சாத்திரங்கள் அவைகளைப் பொறுக்கிச் சூத்திரங்களாக வகுத்திருக்கின்றன. ஆகவே திருமுறைகள் மறைகளே ஆகும். அதற்கு ஒரு சிறந்த காரணமும் காட்டுவர். திருமுறைகளின் முதற்பாசுரம் 'தோடுடைய' என்று தொடங்கும் சொல் (த்+ஓ) அஃதாவது ஓங்காரத்தின் முதல் எழுத்தாக உள்ளது. 12ஆந் திருமுறையின் இறுதிச் சொல்' உலகெலாம்' என்று முடிகிறது. அது 'ம்' என்ற எழுத்தில் முடிகிறது. அஃதாவது திருமுறைகள் 12-ம் ஓ-ம் என்ற பிரணவவெழுத்தில் அடங்கியிருக்கிறது. ஆகவே அவைகள் திருமறைகளும் ஆகும்.

இனி முதல் 9 முறைகளும் 11ஆம் முறையுமாக 10 திருமுறைகள் திருப்புகழ்களாக இருக்கின்றன. 10ஆம் திருமுறையாகிய திருமந்திரம் ஞான நூலாக சித்தாந்தக் கொள்கைகளே உடன்கொண்டிருக்கின்றன. 12ஆம் திருமுறையாகிய பெரியபுராணம் பெரியார்களின் வரலாறுகளை உட்கொண்டிருக்கிறது. ஆகவே இவற்றிலும் புகழ், கொள்கை, வரலாறு என்ற முப்பொருள்களும் உள்ளன. ஏனைய சமயநூல்களில் வரலாற்றுப் பகுதிகளே சிறப்பாகவும், புகழ்ப் பகுதிகளும், கோட்பாட்டுப் பகுதிகளும் குறைவாகவும் இருப்பதைக் காணலாம். ஆனால் சைவத்திலோ இவை மூன்றும் சமமாக இருக்கக் காணலாம்.

சைவத்தில் சமயநிலையங்களாகிய கோயில்கள் பெருகிடவே மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பவைகள் சிறந்து ஓங்கின. இவைகள் பாமரமக்கள் உண்மைகளை மறவாதிருக்கத் தோன்றியவைகள். இவைகளை நன்கு விளக்குதற்பொருட்டுப் பலநூல்கள் பிற்காலத்தில் எழுந்தன. அவைகளில் சில உயர்வு நவிற்சிகள் இருந்தபோதிலும் மக்களிடை நம்பிக்கை உண்டு பண்ணுவதற்காக அவைகள் எழுந்தன. இவை களிடையே பல்சாத்திரக் கருத்துக்கள் அவைகளில் பொதிந்து கிடக்கின்றன. சிறப்பாகப் பல கவிஞர்கள் காவிய வடிவங்களில் தலபுராணங்கள் என்ற பெயரில் அரிய இலக்கிய நூல்களை எழுதியிருக்கின்றனர். அவைகளில் சிறந்தவை திருவிளையாடற்புராணம் (மதுரை), காஞ்சிப்புராணம் (கச்சி), சேதுபுராணம் (இராமேசுவரம்), பேரூர்ப்புராணம் (பேரூர்), சிதம்பர புராணம் முதலியவைகள்.

மேலும் பிற்காலத்தில் வடமொழியிலிருந்து பல தெய்வீகப்புராணங்கள் தோன்றின. சிறந்தவை கந்த புராணம் (கச்சியப்பர்), விநாயக புராணம் (கச்சியப்ப முனிவர்), உபதேச காண்டம் முதலியன. மற்றும் பல புகழ்த்தொகுதிகளும் தோன்றின. திருத்தணி, திருப்போரூர்,

சந்நிதிமுறைகளும், பிள்ளைத்தமிழ், கலம்பகம், உலா, அந்தாதி, பரணி முதலியவைகளும் சைவக் கருத்துக்களை வெளியிடுகின்றன.

II

1. வரலாறு

சைவசித்தாந்தத்தை நன்கு அறிய வேண்டுமாயின் அதன் வரலாற்றை முறையாக அறியவேண்டும். மேல் நாட்டார்கள் எந்த இயலையோ பொருளையோ அறிவிக்க வேண்டுமாயின் அவ்வியல் அல்லது பொருள் சென்றுள்ள வரலாற்றைக் கூறிப் பிறகு விவரிப்பார்கள். நமது நாட்டிலும் பண்டைய அறிஞர்கள், எதைக் கூறினபோதிலும் வரலாற்று முறை அல்லது காலமுறை கொண்டுதான் ஆராய்ந்து இருக்கிறார்கள். நாமும் அதையே பின்பற்றிச் சென்றாலன்றி உள்ளக் கிடையை அறியமுடியாது. ஆகவே சித்தாந்தத்தை விளக்குவதற்கு இனி வரலாற்றைப் பின்பற்றி நாம் இங்குச் சற்று ஆராயத் தொடங்குவோம். நாட்டு நூலாசிரியர்கள் வரலாறுகளை எழுதும்போது செவி வழக்காறுகளையும் (கர்ண பரம்பரைகளையும்) கட்டுக் கதைகளையும் வரலாறுகளோடு பிணைத்து எழுதுவது வழக்கம். அவைகளைத் துருவி எடுத்து விட்டு மெய்களை மட்டும் எடுத்தாள முயல்வோம்.

சரித்திரம் அல்லது வரலாற்றை அறிவுக்கு முற்பட்ட பகுதிகள் சான்றுகள் இல்லாத வகையில் உள்ளதால் அவைகளை நாட்டுப்பழக்க வழக்கங்கள். தொழுகைப் பொருள்கள், பிணச்சடங்கின் அடையாளங்கள் (உத்திரகிரியைச் சின்னங்கள்) இவைகளே நமக்குப் பண்டைச் செய்திகளை அறிவிக்கின்றன. நாட்டுப்புறக் கோயில்களில் நடைபெறும் பலி கொடுத் தல் முதலிய சடங்குகள் விழாக்களில் வெறியாடல், சாமி சொல்லுதல் இவைகளே பழைய பழக்கங்களை வெளியிடுகின்றன. அக்கால மக்கள் கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் என்றும்,

தாம் அருமையாகக் கொண்டிருந்த பொருள்கள் உயிர்கள் முதலியவற்றை வழிபடு கடவுளுக்கு ஒப்புவிக்கும் (அர்ப்பணம் செய்த) வகையில் கொடைகொடுத்து (தியாகம் செய்து) வழிபட்டார்கள் என்றும் அறிகிறோம். வெறியாடல், சாமி சொல்லுதல் இவைகளினால் தங்கள் நன்மை, தீமைகளை அறிந்துகொண்டு, கழுவாய் (பரிகாரம்) தேட முயன்றார்கள் என்றும் அறிகின்றோம்.

உத்திரக் கிரியைச் சின்னங்கள் நிலத்தில் அறைகளில் புதைக்கப்பட்ட பொருள்களைக் கொண்டு மனிதனுக்குப்பின் வாழ்க்கை உண்டு என்ற நம்பிக்கை கொண்டிருந்தார்கள் என்றும் கூறமுடியும். இப்ப டிப்பட்ட சின்னங்கள் தமிழ்நாட்டில் பல இடங்களிலும் காண்கிறோம். பாண்டவர் குழிகள், பண்டைக் காடுகள், முதுமக்கட்டாழிகள் அவைகளில் கிடைக்கும் ஒரு எலும்புக்கூடுகள், அணிவகைகள், பலியிடப்பட்ட விலங்குகளின் எலும்புகள் முதலியவை அக்கால மக்களின் நம்பிக்கைகளை மெய்ப்பிக்கின்றன (நிரூபிக்கின்றன.) இனி வீரக்கல், சமாதிக்கல் முதலிய சின்னங்கள் இறந்தவரின் பிற்கால வாழ்க்கை, துறக்கத்தில் அவர்கள் இன்புறுதல் பின்தங்கியவர்கள் அவர்களுக்கு வழிபாடு இயற்றுதல் முதலிய சமயக்கொள்கைகளை வெளிப்படுத்துகின்றன. இவைகளைக் கொண்டு பண்டைத் தமிழர்களின் தெய்வ நம்பிக்கையை ஒருவாறு அறியக்கூடும்.

உ. சிந்துநதி நாகரிகம்

இன்றைக்கு 60 நூற்றாண்டிற்கு முன் பாரதநாடு முழுதும் ஒரே சமூக மக்களும் ஒரே சமய வாழ்க்கையும் இருந்தன என்று சான்றுகளுடன் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். அதற்கு ஆதாரமாக நாட்டில் பல வேறு திக்குக்களில் தோண்டி எடுத்த புதைபொருள்களைக் காட்டுகின்றனர். அதனைத் திராவிட நாகரிகம் என்றும் பண்டைய தமிழர் நாகரிகம் என்றும் அவ்வாராய்ச்சியாளர்

சொல்லுகின்றனர். சிந்து நதிக்கரையில் மொகஞ்சதாரோ, அரப்பா என்ற இடங்களில் தோண்டியெடுக்கப்பட்ட புதை பொருள்களைக் கொண்டு அக்காலத்திய மக்கள் வாழ்க்கை இன்னதென்று விவரிக்கின்றனர். மேலும் இமயமலை யடிவாரத்தில் அஹித்சத்ரா என்ற இடத்திலும் புதுச்சேரிக் கடுத்த அரிக்கமேடு என்ற இடத்திலும் நெல்லைமாவட்டம் ஆதிச்சநல்லூரிலும் அதேமாதிரியான சின்னங்கள் கிடைத்தன. கோவை மாவட்டத்தில் பேரூர் முதலிய இடங்களிலும் மற்றும்பல இடங்களிலும் சிறிய அளவில் பல சின்னங்களும் கிடைத்தன. எல்லாம் ஒரே நாகரிகச் சின்னங்களாகத் தோன்றுகின்றன. ஆகவே இந்தியா முழுவதும் ஒரேமாதிரி பண்டைய நாகரிகம் இருந்தது என்கின்றனர்.

நகரங்கள், வீட்டமைப்புக்கள், தெருக்கள், சாக்கடைகள், நீர்வழிகள் முதலிய பல அமைப்புக்களும் சிறந்த நாகரிகத்தைக் காட்டுகின்றன. அவர்கள் சமயக் கொள்கைகளையும் கொண்டவர்கள் என்பதற்கு தெய்வீக வழக்கங்கள் முதலிய ஆராதனைக்குரிய பொருள்கள் கிடைத்தன என்கிறார்கள். அவ்வடி வங்கள் களிமண்ணால் ஆக்கப்பட்டன. அருவுருவமாகிய இலிங்க வடிவங்களும், விலங்குத்தலை கொண்ட நரவடிவங்களும் கிடைத்தனவாம். பின்சொன்னவைகள் நரமிருகம் என்று சொல்லப்படும். நரசிங்கம். நரமிருகம் போன்றவைகள் பாண்டியநாட்டில் சிறப்பாக நெல்லை மாவட்டத்தில் சிவாலயங்களில் இப்படிப்பட்ட நரமிருக வடிவங்கள் தூண்களில் செதுக்கியிருக்கக் காணலாம். புதைகளில் கண்டெடுத்தவை சிறிய வடிவங்கள். சில மூத்த பிள்ளையார் போன்ற வடிவு கொண்டிருக்கின்றன. இத்தகைய உருவங்களைப் பண்டைய தமிழர்களின் வழிபாட்டுச் சின்னங்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். மேலும் சில மானிட உருவங்கள் கிடைத்துள்ளன. அவைகளின் பார்வை முதலியன ஆலயவழிபாடுகள் செய்கிற குருக்களாகவும் இருக்கக்கூடும்

என்று கூறுகிறார்கள். மேற்கு ஆசியாவில் இருந்த சுமேரியப் புதையல்களில் (30 நூற்றாண்டு) கண்ட உருவங்களை ஒத்து அவை இருக்கின்றனவாம். இப்படிப்பட்ட கணக்கற்ற உருவங்கள் கிடைத்திருக்கின்றன. ஹாரப்பாவில் நான்கு கைகளும் மூன்று தலைகளும் கொண்டதுமான நடனம் ஆடும் உருவம் கிடைத்திருக்கிறது. இது நடராசப்பெருமானின் பண்டைய உருவமாக இருக்கக்கூடும். மொகஞ்ச தாரோவில் செம்புப்படிவம் ஒன்று கிடைத்திருக்கிறது அணிகளும், வளையல்களும் தேவதாசி எனக் காட்டுகின்றன. மேலும் சில நாணயச் சின்னங்களில் முத்தலை எருது, நந்தி முதலிய உருவங்கள் அகப்பட்டன. திரிசூலம்போலும் கொம்புள்ள தேவ உருவம், சில பிராணிகள் பண்டைக்கால வடிவமாகக் கருதப்படுகின்றன. எருது வடிவங்கள் நந்திப் பெருமானை நினைவூட்டுகின்றன. சில மண்பாண்டங்களில் தேவி போன்ற உருவங்கள் சித்திரிக்கப்பட்டிருக்கின் றன. மேலும் மூன்று வகை எழுத்துக்களை அவர்கள் எழுதியிருக்கிறார்கள். அவைகளை உறுதியாக அறிய வகையில்லை. இவைகளையெல்லாம் காணும்போது அக்காலத்தில் சைவ சமயம் பண்டைய நிலையில் போற் றப்பட்டது என்று கூறலாம்.

3. வெளிநாடுகளில் சான்றுகள்

சிந்து நதி நாகரிகத்திற்குப் பிறகு மக்களுடைய சமய நிலை எவ்வாறு இருந்தது என்று கண்டுபிடிக்க இயலவில்லை. ஆனால் வெப்ப நாடுகள் பலவற்றிலும் ஆங்காங்கே பல சின்னங்கள் கிடைத்திருக்கின்றன. அவைகள் சமயச் சின்னங்களாக இருக்கவேண்டும். அரேபியாவில் மெக்காவில் உள்ள காபா என்ற திரு வடிவம் இலிங்கம் போன்று அருவுருவமாக இருக்கின்றது. இதனை விஞ்ஞானிகள் வானிலிருந்து இழிந்த எரிமீன் என்கிறார்கள். ஆப்பிரிக்காவில் நடுப்பகுதியில்

வனாந்திரங்கள் அடர்ந்த நாடுகளில் இலிங்கங்கள் போன்ற உருவங்கள் இன்றும் தொழப்படுகின்றனவாம். அவைகளில் சில தனிக்கற்களால் ஆக்கப்பட்டவையும் சில பல கற்களால் கட்டப்பட்டவைகளாகவும் இருக்கின்றன. காங்கோ வனங்கள், ரொடீஷியா வனங்கள் இவைகளில் இச்சின்னங்கள் ஏராளமாக இருக்கின்றன. நடு அமெரிக்காவில் யூகடான் மாயா மக்களிடை இலிங்க வடிவங்கள் காணப்படுகின்றன. அதுபோலவே பெரு, மெக்சிகோ, தென் அமெரிக்கா, பேசிபிக் தீவுகள், இந்து சீனா, இந்தோனிசியா பிரதேசங்களிலும் பல சின்னங்கள் இருக்கின்றன. பனிமலைக்கு வடபால் திபெத்து, பாமீர், சீனத்துருக்கி முதலிய நாடுகளில் பல பண்டைக் கோயில்களில் சிவ சின்னங்கள் காணப்படுகின்றன. இவைகள் பெரும்பாலும் உருவ வழிபாட்டின் பரப்பினை நிரூபித்த போதிலும் சைவ வழிபாட்டுச் சின்னங்களாக இருப்பதைக் காட்டுகின்றன. மேலும் இவைகள் பெரும் பாலும் 60 நூற்றாண்டுகளின் பின்னர் 40 நூற்றாண்டுகளின் இடையில் இருந்திருக்க வேண்டும் என உய்த்துணரலாம் (ஊகிக்கலாம்).

இனி இந்தியாவிற்குள் ஒரு மாறுதல் ஏற்பட்டது. திராவிடர்கள் அருவுருவமான இலிங்கத்தையும் மற்றத் தெய்வீக உருவங்களையும் வழிபட்டு வந்தார்கள். வடமேற்கேயிருந்து வந்த ஆரியர்கள் வேள்விகளில் ஈடுபட்டு வந்தார்கள். ஆரியர்கள் இந்து நாட்டுக்குள் படையெடுத்துப் பண்டைய நாகரிகத்தை யழித்துத் தம் நாகரிகத்தைப் புகுத்தினார்கள். எனினும் நாளாவட்டத்தில் ஆரிய நாகரிகம் தமிழ் நாகரிகத்துடன் ஐக்கியமாகிவிட்டது. திராவிடர்கள் நகரங்களை உண்டாக்கிச் சமயக் கொள்கைகளைப் பின்பற்றிக் கொண்டு (அனுசரித்து) வந்தார்கள். ஆனால் ஆரியர்களோ அவைகளை அழித்து வேள்வியில் ஈடுபட்டார்கள். திராவிடர்கள் நூல் ஆகமம். ஆரியர்கள் நூல் வேதம். இவர்கள் இருவகுப்புகளுக்குக்

கலப்பு ஏற்படவே ஆரியர்கள் தங்கள் மெலிந்த குடிசைகளை விடத் தொடங்கித் திராவிடர்களுடைய உறுதியான கட்டிடங்களை மேற்கொண்டார்கள். சமயச் சடங்குகளில் அருவங்களை வழிபடுவதோடு திராவிட உருவ வழிபாட்டினைக் கொண்டார்கள். இலிங்கம், நந்தி, நரமிருகம் முதலிய உருவங்கள் ஆரியத்தில் புகுந்தன. இந்த வகையில் வடக்கே ஆரியம் திராவிட நாகரிகத்திற்குச் சிறிது சிறிதாக அடங்கிற்று.

இவ்வாறு வடநாட்டு நாகரிகம் மாறுதல் அடையத் தென்னாட்டில் படைய நாகரிகமே வேரூன்றத் தொடங்கியது. ஆகவே ஆகமமும் உருவ வழிபாடும் வெற்றியடைந்தன.

4. தொல்காப்பிய காலம்

சிந்து நதி நாகரிகத்திற்குப் பிறகு 20 நூற்றாண்டு தமிழ் நாடு எந்த நிலையில் இருந்ததென்று கூறச் சான்றுகள் இல்லை. வடமேற்கே இருந்து ஆரிய இனத்தார்கள் குடியேறிக் கங்கை, சிந்து இடைப்பிரதேசங்களில் தங்கள் நாகரிகத்தைப் புகுத்தினார்கள். பண்டைய மக்கள் விந்தியத்திற்குத் தெற்கே ஒதுங்கிக் கொண்டார்கள். திராவிட நாடுகள் முழுதும் பரவித் தம் பண்டைக் கொள்கைகள் பழக்க வழக்கங்கள் இவைகளை விடாது காத்து வந்தார்கள். என்றாலும் புது நாகரிகம் ஒரு சிறிது அந்நாடுகளில் புகுந்து மொழி, சமயம் இவைகளைச் சற்று மாற்றியிருக்கக் கூடும்.

பண்டைத் தமிழர் முப்பெருங் குலங்களாகப் பிரிந்து அரசியல்களை ஏற்படுத்தி மொழியையும் சமயத்தையும் வளர்த்து வந்தார்கள். அவர்கள் பல இலக்கியங்களை எழுதினார்கள். அவ்விலக்கியங்கள் இப்போது கிடைக்காது அழிந்து விட்டன. அவ்விலக்கியங்களுக்கு இலக்கணமும் தோன்றிற்று. தற்போது உள்ள மிகப் பண்டைய நூல் தொல்காப்பியமாகும். அந்நூல் அக்கால இலக்கணமாக

அமைந்திருக்கிறது. அதில் எழுத்து, சொல், யாப்பு, அணி முதலிய இலக்கணப் பகுதிகளேயன்றிப் பொருள் என்ற பகுதியும் உண்டு. அது அக்கால மக்களின் வாழ்க்கை, சமுதாயம், அரசியல், இன்பம் முதலிய பல பகுதிகளையும் கூறுகின்றது. அகம் புறம் என்ற இரு பகுப்புக்களை ஆராய்ந்து அவற்றின் சிறப்பு உறுப்புக்களை விவரிக்கிறது. இப்பிரிவினை தமிழர்க்குச் சிறப்பாக உள்ளது. வேறு எந்த மொழியிலும் அகத்துறையைத் திணையாக வகுத்தும் புறத்துறையைத் திணையாக வகுத்தும் இலக்கணம் எழுதியது கிடையாது. அக்காலத்தின் தமிழ்மக்களின் சமயநிலை எவ்வாறு இருந்தது என்பதற்குப் பல எடுத்துக்காட்டுக்கள் ஆளப்பட்டுள்ளன. அவற்றில் அடிப்படையாக உள்ள நல்ல கருத்துக்களை இங்கு விவரிப்போம். இதற்குச் சூத்திரங்களும், மேற்கோள்களும் உள்ளன.

அகத்திணையை உரைக்கும்போது பொருள் மூவகையாக்கி, முதல், கரு, உரி என்று விரித்தார். முதற் பொருள் பொழுது, நிலம் என இருவகை. அந்நிலம் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்று நான்காகப் பிரிக்கப்பட்டன. அவைகளில் முல்லை என்ற காட்டு நிலத்திற்கு மாயோன் (திருமால்), குறிஞ்சி என்ற மலைநிலத்திற்குச் சேயோன் (முருகன்), மருதம் என்ற நீர்சூழ் நிலத்திற்கு வேந்தன் (இந்திரன்), நெய்தல் என்ற கடற்கரை நிலத்திற்கு வருணன் எனவும் கடவுள் வகுத்தார். ஆகவே இயற்கைக்குத் தக்க தெய்வங்களும் வழிபாடுகளும் கூறப்பட்டன. இனிக் கருப்பொருள் கூறுமிடத்துத் தெய்வம், உணாவே, மா, மரம், புள், பறை, செய்தி யாழ் முதலியன கூறப்பட்டன. இதில் முதலில் தெய்வம் கூறப்பட்டது. எல்லாக் கருப்பொருள்களிலும் தெய்வம் முதன்மை பெற்றது. ஆகவே அக்காலத்தில் மக்கள் தெய்வம் அஃதாவது சமயத்திற்கு முதன்மை கொடுத்து மற்றவற்றைப் பின் நடத்தினார்கள். களவு, கற்பு

முதலிய ஒழுக்கங்களும், காமம், காதல் முதலிய பண்புகளும் அரசு, சமுதாயம் முதலியவைகளும் பொருளீட்டல், போர்செய்தல் முதலிய தொழில்களும் கொண்டிருந்தாலும் அக்கால மக்களுக்கும், சிறப்பாகச் சமய ஈடுபாடு மிகவும் இருந்ததென்ப. 'நிலம், நீர், வளி, தீ விசும்போடைந்தும் கலந்த மயக்கம் உலகம் ஆதல்' என்று தொல்காப்பியர் கூறுவதால் பௌத்தர் போலல்லாது, விசும்பையும் ஒத்துக்கொள்ளுகிறார். 'காலம்,உலகம், உயிரே உடம்பே, பால்வரு தெய்வம் வினையே பூதம், ஞாயிறு திங்கள் சொல் எனவரூஉம் ஆயீரைந்தும்' என்றார். ஆதலின் 'பால்வரை தெய்வம்' என்பது ஆணும், பெண்ணும் அலியுமாகிய நிலைமையை வரைந்து நிற்பது பரம் பொருள் என்கிறார். ஆகவே சைவக்கொள்கை கொண்டவர் என்க. கோயில்களில் படிமங்களை வைத்து வழிபாடு செய்வதை உணர்த்தி இருக்கின்றார். உயிர்கள் பல; அவைகள் பிறவிகள் எடுக்கும்: நித்தியமானவை என்றும் கூறுகிறார். மால், வேலன், வருணன், மடங்கல், பழையோள் என்ற தூய தமிழ்ப் பெயர்களைக் கொண்ட தெய்வங்கள் தொழப்பட்டன. அறம், பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப்பொருள்கள் அவருக்கு உடன்பாடு, கால்கோள், நீர்ப்படை, நடுகல் முதலிய சடங்குகளை ஆதரிப்பவர் எனத் தெரிகிறது. ஆகவே பல பகுதிகள் வழக்கத்திலும் கோட்பாடுகளிலும் இருந்தன என இந்நூலால் அறியலாம்.

5. சங்ககாலம்

தமிழ்நாட்டில் மூன்று சங்கங்கள் இருந்தன அவைகள் பல நூற்றாண்டுகளாகத் தமிழ் ஆராய்ந்தன. முதலிரண்டு சங்கங்களும் ஆராய்ந்த நூல்கள் மறைந்துவிட்டன. மூன்றாம் சங்க நூல்கள் தாம் மூன்று தொகுதிகளாகக் காணக் கிடைக்கின்றன. அந்த நூல்கள் தாம், சங்க நூல்கள் என்று தற்போது வழங்கப்படுகின்றன. பல ஆண்டுகளாகப் பல திறப்பட்ட புலவர்கள் எழுதிய நூல்கள் பின்னால்

தொகுக்கப்பட்டு நமக்குக் கிடைத்து இருக்கின்றன. பற்பல கருத்துக்கள் மிக்க வேறுபாடுகளுடனும் சமய வேற்றுமைகளுடனும் அவற்றில் இருந்த போதிலும் அவற்றுள் ஊடுருவிப்பாயும் பண்பாடும் எண்ணப் போக்கும் மொழி நடையும் ஒன்றாயிருக்கக் காண் கிறோம். ஆகவே அதற்குச் சங்க காலம் என்ற சிறப்புப் பெயர் வந்தது வியப்பு அன்று.

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க் கணக்கு என்ற மூவகைக்கும் 36 நூல்கள் தொகுதிகளாக அதில் சேர்க்கப்பட்டுள்ளன. இவைகளுள் அக்காலத்துப் பழக்க வழக்கங்கள், எண்ணப்போக்கு, அரசியல், பொருளியல், சமயச்சார்பு முதலிய பல செய்திகளும் நமக்குக் கிடைத்து இருக்கின்றன.

ஒவ்வொரு நூலிலும் கடவுள் வாழ்த்துக் கூறித் தான் நூலைத் தொடங்குவது என்ற முறை சங்கத்தார் காலத்திலே ஏற்பட்டு விட்டது. பெரும்பாலும் பாரதம் பாடிய பெருந்தேவனாரே கடவுள் வாழ்த்துப் பாடியிருக்கிறார். அகநானூற்றில் 'கார்விரி கொன்றை' புறநானூற்றில் 'கண்ணி கார்நறுங் கொன்றை' குறுந்தொகையில் 'தாமரை புரையும்' நற்றிணையில் 'மாநிலஞ் சேவடியாக' ஐங்குறுநூற்றில் 'நீலமேனி வாலிழைபாகத்து' என்ற வாழ்த்துக்கள் அவரே பாடியவை. பரிபாடலில் ''ஆயிரம் விரித்த'' என்ற பெருஞ் செய்யுள் பாடினோர் பேர் தெரியவில்லை. பதிற்றுப்பத்தில் 'எரியெள்ளு வன்ன' என்ற செய்யுள் வாழ்த்தாக இருக்கவேண்டும் என்று ஊகிக்கப்படுகிறது. ஆக எட்டுத்தொகை, பத்துப்பாட்டுக்களில் 8 செய்யுட்கள் கடவுள் வாழ்த்துக்கள். இச்செய்யுட்களுள் சைவ பரமானவை 6. குறுந்தொகை முருகன் பாடல். கலித்தொகை ஆறறியந்தணர் என்பது நல்லந்துவனார் பாடல். அதில் காளியை வியந்திருக்கிறது. நற்றிணையில் - திருமால் - வாழ்த்தாக உள்ளது. பத்துப் பாட்டில் முதற்பாட்டு திருமுருகாற்றுப்படை. இது முழுதும் முருகன்

புகழ். இது சைவத் திருமுறையில் சேர்க்கப் பெற்றுள்ளது. பலபேர் பாராயணத்திற்கும் கொண்டிருக்கிறார்கள்.

இனி இறைவனைக் குறித்திருக்கும் சொற்கள் ' அருந்தவத்தோன், ஆதிரை முதல்வன், ஆலமர் செல்வன், ஆனேற்றுக் கொடியோன், கொன்றையலங் கலந்தெரியலவன், சீறருமுன்பினோன், செவ்விடைப் பாகன், புதுத் திங்கட் கண்ணியன், பைங்கட் பார்ப்பான் மணிமிடற்றெண்கையான், மழுவாள் நெடியோன், முக்கட் செல்வன் - முதலான சிறப்புப் பெயர்கள். ஐங்குறுநூறு கூறும் செய்யுள் :

''நீலமேனி வாலிழை பாகத்
தொருவன் இரு,தாள் நிழற்கீழ்
மூவகை உலகு முகிழ்த்தன முறையே''

என்பது மிகச் சிறந்தது.

திருமுருகாற்றுப்படை முருகனை வழிபட்டான் ஒருவன் நண்பன் ஒருவனுக்கு எவ்வாறு வழிபடுதல் என்பதை அறிவுறுத்திப் பயன் பெறுமாறு அனுப்புவதே அவ்வாற்றுப் படையாகும். இதனால் அக்காலப் புலவர்கள் சமயத்தில் மிகவும் ஈடுபட்டிருந்தனர் என அறியலாம்.

இனி மூன்றாம் தொகுதி 18 கீழ்க்கணக்கு அகத் துறைகளும் நீதிகளும் கூறுகின்றன. இன்னா நாற்பது, இனியவை நாற்பது, நாலடியார், திருக்குறள், திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம், நான்மணிக் கடிகை, முதுமொழிக் காஞ்சி, இன்னிலை, ஆசாரக்கோவை, பழமொழி என்பவைகள் நீதி நூல்கள். இவைகளில் கடவுள் வாழ்த்துக்கள் உண்டு. சமண சைவ வாழ்த்துக்கள் உள்ளன. சைவ வாழ்த்துக்களே யன்றித் திருக்குறளில் 10 குறள் ஓர் அதிகாரம் கடவுளைப் பற்றி உள்ளது. குணங்கள் பொதுவாய் உள்ளன. இருந்தாலும் சைவத்திற்கு மிகவும் பொருத்தமாக உள்ளன. நூல்களிலே உதாரணங்களும்

உவமைகளும் பல சைவத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளன. ஆகவே அக்காலத்தில் சைவ சமயம் மிகவும் சிறந்த முறையில் இருந்திருக்க வேண்டும். கோயில் அமைப்பு, வழிபாடு, விழாக்கள் முதலிய சடங்குகள் இவைகள் எல்லாம் நன்கு விரிக்கப்பட வில்லை.

6. காப்பிய காலம்

வட நாட்டிலிருந்து தென்னாடு புகுந்த பௌத்த குரவர்கள் தங்கள் சமயங்களைப் பரப்பும் பொருட்டுத் தமிழைக் கற்றுப் புலமை பெற்று நூல்களை எழுதினார்கள். பதினெண் கீழ்க்கணக்கில் அவர்கள் நீதி உரைகள் இடம் பெற்று இருக்கின்றன. அவர்களுக்கு நாட்டு மன்னர்களின் போற்றுதல்களும் கிடைத்தன. நாட்டு மன்னர்களாயிருந்த பல்லவரும் பாண்டியரும் ஆதரவு அளித்தார்கள். தங்களுடை சமயக் கோட்பாடுகளைத் தமிழில் எழுதினார்கள். அக்காலத்தில் எழுதப்பட்ட ஐம்பெருங் காப்பியங்களிலும் அவர்களே பெரும்பங்கு கொண்டார்கள். ஐம்பெருங்காப்பியங்களில் தமிழன்னைக்குச் சிறந்த சிந்தாமணி தலையணியாகவும், குண்டலகேசி காதணியாகவும், வளையாபதி கையணியாகவும், மணிமேகலை இடையணியாகவும், சிலப்பதிகாரம் காலணியாகவும் சாத்தினார்கள். இவைகளில் சிந்தாமணி, குண்டல கேசி, வளையாபதி- சமண ஆசிரியர்களாலும் மணி மேகலை பௌத்த ஆசிரியராலும், சிலப்பதிகாரம் சேர அடிகளாலும் இயற்றப்பட்டன. இவைகளில் தம்தம் சமயக் கொள்கைகள் எழுதப்பட்டுள்ளன. ஐஞ்சிறு காப்பியங்களில் சூளாமணி, யசோதரகாவியம், நீலகேசி, உதயணன்கதை, சமண நூல்களாக உள்ளன. இவைகளிலும் கடவுள் வாழ்த்துக்கள், சமயக் கொள்கைகள் நிரம்ப உள்ளன.

இனிச் சைவத்தைப் பற்றி இந்நூல்களில் சிலப்பதி காரத்தில் நன்கு எழுதப் பட்டுள்ளது. அந்நூல் பொதுவாகத் திருமால் (ஆய்ச்சியர் குரவை) வேலன் (குன்றக் குரவை)

கொற்றவை (வேட்டுவவரி) பத்தினிக் கடவுள் (வாழ்த்துக் காதை) என்ற தெய்வங்களைப் பற்றி வெகு உருக்கமாகக் கூறுகிறது. இறைவனைப் பற்றிக் கூறும்போது 'நுதல்விழி நாட்டத் திறையோன்' என்று விரிக்கிறது. மற்றும் மதுரை நகரத்துக் கோயில்களைக் கூறுகையில் திருமால் கோயில், பலதேவன் கோயில், முருகவேள் கோயில் அங்கிருந்தன. ஐயை கோட்டத் (துர்க்கை) தில் விழவு அயர்ந்தார்கள். வேலன் கோட்டம் அதில் வேட்டுவர் ஆடுதல், திருமால் கோயில் அதில் ஆய்ச்சியர் குரவை ஆடுதல் கூறப்பட்டன. நெடுமால் கோயில்கள் புகார், அரங்கம், சோலைமலை இவைகளில் இருந்தன. இனிப், பௌத்தர் பள்ளிகளும் சமணர் பள்ளிகளும் இருந்தன எனக் காண்கிறோம். ஆகவே அக்காலத்தில் இந்தச் சமய நிலையங்கள் இருந்தன என்றும் மக்கள் அவைகளில் தொழச் சென்றார்கள் என்றும் அறியலாம்.

மணிமேகலை ஒரு பௌத்தப் புலவரால் எழுதப் பெற்றது. அது சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சி. பௌத்த ஆதாரங்கள் அதில் கூறப்பட்டுள்ளன. ஆனால் சில சைவச் செய்திகளும் அடங்கியுள்ளன. விழாவறை காதையில்,

''நுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வம் ஈறாக''

என்பதில் சிவபெருமான் முதல் சதுக்கப்பூதம் இறுதியாகக் கூறுந் தெய்வங்களில் சிவபெருமான் முதலில் வைக்கப்பட்டதை உணர்க. இனிச் சக்கரவாளக் கோட்டம் என்னும் சுடுகாட்டுக் கோட்டத்தில் பலவகைத் தெய்வங்கள் பல கோயில் கொண்டிருந்தன எனக் காண்கிறோம். 'நெடுநிலை மண்ணீடு' என்பது மயானத்தைக் காக்கும் தெய்வம். காடமர் செல்வி என்பது துர்க்காதேவி. இத் தெய்வங்களின் கோவில்கள் இருந்தனவாம். மற்றும் 'சுடுவோர்', இடுவோர், தொடுகுழிப் படுப்போர், தாழ்வயின் அடைப்போர், தாழியிற் கவிப்போர் என்ற வழக்கங்கள் இறந்தோர்

பிணங்களை அப்புறப்படுத்தும் முறைகள் பல இருந்தன. ஆகவே அக்காலத்தார் பின்பிறவி உண்டென்பார் என்க. மயானத்திலே சுடலைக் கோயில்களில் பைரவிகள் வழிபாடியற்றுவர் என்றும் அறிகிறோம். மேலும் புத்த பீடிகைகள் பீடிகை கண்டு முற்பிறப்பு உணர்த்தும் தெய்வ உருவங்களைக் கண்டு தொழில் தேவராட்டியால் முற்பிறவி பிற்செய்தி முதலிய அறிதலும் கொள்கைகளாக இருந்தன. வஞ்சி நகர்ச் சென்று மணிமேகலை சமயக்கணக்கர் திறம் கேட்டாள். அவர்களில் வைதீக மார்க்கத்து அளவை வாதியை விளித்து அவள் கொள்கைகளை விவரமாகக் கேட்டாள். காட்சி, கருதல், உவமம், ஆகமம், அருத்தா பத்தி, இயல்பு, ஐதிகம், சுபாவம், மீட்சி, சம்பவம் என்பவைகள் தர்க்கிக்கப்பட்டன. பிறகு சைவ, பிரம, வைணவ, வேத, ஆசீவக. சாங்கிய, வைசேடிக, பூதவாதங்கள் கேட்டாள். அவைகளில் முதலில் கேட்டது சைவவாதம். அதனை,

''இருசுட ரோடு இயமானன்ஐம் பூதம்என்று
எட்டு வகையும் உயிரும்யாக் கையுமாய்க்
கட்டிநிற் போனும் கலைஉரு வினோனும்
படைத்துவிளை யாடும் பண்பி னோனும்
துடைத்துத் துயர்தீர் தோற்றத் தோனும்
தன்னில் வேறு தானொன் றிலோனும்
அன்னோன் இறைவ னாகும்என் றுரைத்தான்.''

இதில் இறைவன் என்றால் எப்பொருளிலும் தங்கு கின்றவன் என்பது பொருள். இதனால் அக்காலச் சைவத்தின் இலக்கணம் கூறப்பட்டது.

7. குன்றிய காலம்

காப்பிய காலத்திலும் அதை ஒட்டியும் சமண பௌத்தங்கள் முன்னேறியிருந்தன. அரசர்கள் பெரும் பாலும் சமணச் சார்பு கொண்டவர்கள். சைவப் புலவர்கள் தோன்றவில்லை. சைவ நூல்களும் எழுதப் படவில்லை. மக்கள் இலக்கியங்களிலேயே நாட்டம் கொண்டார்கள்.

பல்லவப் பேரரசு புகழ் பெறத் தொடங்கியது. தகுந்த தலைவர்கள் இல்லாததினால் பாசுபதம், காபாலிகம், சாக்தம் முதலிய சில்லறைச் சமயங்கள் சைவத்தில் களைகளாக இருந்தன. அப்போது அவைகளைக் கண்ட மகேந்திரன் திறமைபெற்ற அறிஞன் ஆனதனால் ஒரு கண்டன நாடகம் எழுதினான். அதன் பெயர் மத்தவிலாசப் பிரகசனம். அதில் பாசுபதர், கபாலிகர் முதலிய தாந்தீகர்களையும் பச்சை பச்சையாகக் கண்டித்து எழுதினான். அரசனே அப்படி எழுதினால் மக்கள் எவ்வாறு சமயத்தில் ஈடுபடுவார்கள்.

அந்தக் காலத்தில் உயர்ந்த சமய நூல்கள் உண்டாகவில்லை. நீதிநூல்களில் அறநெறிச்சாரம் என்ற ஒரு சிறு நூல் தோன்றியது. அது பதினெண்கீழ்க் கணக்கைப் போன்றது. அதனை இயற்றியவர் முனைப் பாடியார் என்ற புலவர். மற்றொரு நூல் புறப்பொருள் வெண்பாமாலை என்பது. அதனை ஐயனாரிதனார் என்ற சேரர் குலத்தலைவர் இயற்றினார். அது புறப்பொருள் இலக்கணத்தை மேற்கோளோடு விரிக்கின்றது. அதில் மக்களுடைய பழக்க வழக்கங்களைக் கூறும்போது அரசியல், போர் முதலிய சிறப்புக்களைச் செய்த செய்தி கூறப்பட்டுள்ளது. மேலும் கடவுள் மங்கலம் என்ற தொடக்கச் சடங்குகள் கூறப்பட்டுள்ளன. ஆகவே அக்காலத்தில் சமயம், சமய வழிபாடு, சமயச் சடங்குகள் முதலியவைகள் எப்படி இருந்தன என்பதை ஒருவாறு அறியலாம். இறந்த பிறகு உயிர்கள் நசித்துப் போகாமல் மற்றொரு வாழ்க்கை பெறும் என்ற நம்பிக்கை புதையல் முதலிய ஈமச் சடங்குகளால் தெரிய வரும்.

III

1. மறு மலர்ச்சி

1. எழுச்சி : 6 ஆம் நூற்றாண்டு இறுதியில் தமிழ் நாடு மிகத்தாழ்ந்த நிலையில் இருந்தது. அரசியலில், வளமையில், சமய நிலையில் எங்கும் தாழ்மைப் பான்மையே நிலைகொண்டிருந்தது. பண்டைய மூவேந்தர் நிலைகுன்றியிருந்தார்கள். களப்பிரர் படையெடுப்பால் நாட்டில் வறுமை குடிகொண்டிருந்தது. சமணர் நுழைவால் 'சைவசமயம்' தலை குனிந்தது. மக்கள் தெய்வக் கொள்கையை விட்டொழிந்தார்கள். சமய நிலையங்கள் புறக்கணிக்கப்பட்டன. இந்த நிலைமையில் கல்வியறிவும் குறைந்தது. சங்ககால இலக்கியங்கள் கறையானுக்குக் கொடுக்கப்பட்டன. சிறந்த புலவர்கள் ஆய்ந்த சங்க நூல்கள் கணக்கின்றி அழிந்தன. புதிதாக எழுதப் போதுமான கல்வியைச் சமூகம் ஆதரிக்கவில்லை. ஆகவே, ஒவ்வொரு பண்பிலும் செயலிலும் தமிழ்நாடு தாழ்ந்து கிடந்தது.

அப்போது மக்களிடம் தோன்றிய அறியாமை இழிவுகளைக் கண்ட மகேந்திரவர்மன் அங்கத நாடகத்தை எழுதினான் என்கிறோம். அதனைக் கண்ட மக்களுள் ஒரு சமய எழுச்சி தோன்றிற்று. பிறகு சீகாழியில் ஆளுடைய பிள்ளையார் தோன்றி அதுவரை பரந்திருந்த இழிவை நீக்கக் கருதினார், அழுதார், வென்றார். வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத் துறை விளங்கப் பூத பரம்பரை பொலியப் புனித வாய் மலர்ந்தழுதார். அந்த அழுகைக் கண்ணீரே பேரானந்த பாஷ்பமாகி நாடெங்கும் புனிதமாக்கியது. சமணமும், பௌத்தமும் ஒழிந்தன. அரசனும் மக்களும் சைவம் ஆனார்கள். திருக்கோயில்களில் தேவாரங்கள் ஒலித்தன. வீடுகளிலும், தெருக்களிலும் தமிழ் இன்னிசை ஒலித்தது. மக்கள் வாழ்க்கை புனிதம் அடைந்தது. மதுரையிலே பாண்டியன் சமணனாகியிருந்தான். மன்னன் தேவியார் மங்கையர்க்கரசியார் மிகுந்த துயரத்தில்

ஆழ்ந்திருந்தார். இறைவனை நாள்தோறும் வேண்ட இறைவன் அத்தேவியார் முறைகளைக் கேட்டார். சம்பந்தரும் அங்கே வந்தார். சமணர் தீங்கு இயற்றினார்கள். சம்பந்தர் வாதிட்டு வென்றார். அரசனும் சைவனானான். மேலும் அதன் பின்னர், சுந்தரர் முதலிய பல அடியார்கள் தோன்றிச் சைவத்தை நிலைநாட்டினார்கள். நாட்டில் மக்களிடம் மீண்டும் சைவப்புனித வாழ்க்கை தோன்றிற்று. இதுவே சைவத்தின் மறுமலர்ச்சி ஆக எழுந்தது. நடு நாட்டில் திருவாமூரில் மருள்நீக்கியார் தோன்றினார். அவருக்கேற்ற ஆசிரியையாக அவர் தமக்கையார் திலக வதியம்மையார் தோன்றினார். தம்பியார் வேறு சமய ஊழலில் திரிந்தும் அவரை மீண்டும் தம் சமயத்திற்குத் திருப்ப எண்ணி இறைவனை வழுத்த அவரும் மனக்கருணை காட்டி மீட்டினார். அவரும் இனிய பாசுரங்களைப் பாடிக் கோயில்களில் எல்லாம் சைவசமய ஒலி பரப்பினார். அரசனும் சைவத்திற்குத் திரும்பி வந்து அன்பில் திகழ்ந்தான். நாடெங்கும் குகைக்கோயில்களும் கட்டுக் கோயில்களும் எழுப்பி மக்களை நல்வழிப் படுத்தினான்.

2. மூவர் முதலிகள்: (சம்பந்தர், அப்பர், சுந்தரர்) 7 ஆம் நூற்றாண்டில் அப்பரும், சம்பந்தரும், 9 ஆம் நூற்றாண்டில் சுந்தரரும் சமய வளர்ச்சியில் ஈடுபட்டார்கள். வெற்றியும் கண்டார்கள்.

I. சம்பந்தர் : ஒளி நிகழவல்ல காலநிலை-7ஆம் நூற்றாண்டில் பல்லவர் ஆட்சி. 2. உயரிய வாழ்வின் நோக்கம். சமணர் தவம் என்ற பெயரில் இழிவு தரச் சம்பந்தர் ஞானம் என்ற கயிற்றால் பந்தப்படுத்தினார். 3.அந்நோக்கிற்கேற்ற வசதிகள் இளவயது, சுருங்கிய காலம். இரண்டுமே இயக்கங்களுக்கு உறுதி தருவன. 4.இயக்கத்திற்கு உதவி புரிந்தது. மொழியின் வண்மையும், இசையின் மேன்மையும், நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன். வண்மை-பாவும், கருத்தும்,

அகத்துறையும். 5. இயக்க வளர்ச்சிக்கு உகந்த பண்புகளான அன்பும், இன்பமும் ஆண்டமை- துறவறமன்று. இல்லறம் சிற்றின்பமன்று பேரின்பம். 6. மக்கட்கு அறிவுறுத்திடச் சித்தாந்த ஞானமும், கொள்கைகளும் ஆண்டமை - பொன்னணியில் மணி யழுத்தியது போலச் சித்தாந்தக் கொள்கைகள் வித்தகச் செய்யுள். 7. மக்களை இழுக்க அரசியலையும் ஆட் படுத்திய திறம் மன்னனைச் சைவனாக்கியது. கழுவாய், ஐந்தெழுத்து. 8. சமய நிலையங்கள் மேன்மை, பௌத்த சமண ஆலயங்களைப் பின்பற்றிக் கோயில்களில் சித்திரம், சிற்பம், சிலைகள். 9. பிற சமயங்களை வெறுக்காமை. ஆனால் குற்றம் நீக்கல், சைவம்- தாய், ஏனையவை மக்கள். 10. தொண்டரொடு கூட்டு. ஒத்துழைப்பு, அப்பர், நீலகண்டயாழ்ப்பாணர், முருகர், சிறுத்தொண்டர் முதலியவர்களுடன் சேர்க்கை. 11. அற்புதச் செயல்கள்- கருணை - 20 அற்புதங்கள், ஞானப் பால் உண்டல் முதல் ஒரு மணத்தில் சோதிக்கலப்பு (கொல்லி மழவன் மகள், குளிர்சுரம், யாழ் மூரி, கதவு திறப்பு, வாதங்கள் பூம்பாவை, முதலியன) 12. சமயத்திற்குப் புத்துயிர் அளித்தது. தவறிச்சென்றவர் களைத் திருப்பிச் சேர்த்தது, சமயமாற்றம், சித்தாந்த ஞானத்தை எளிதில் கூறினது.

II. அப்பர்: 1. காலநிலை. மக்களின் கொள்கைகளை மாற்றவல்ல நிலை, அருமை. 2. இளமைக் கல்வி, நல்ல படிப்பு. ஆனால் பெற்றோர் காவல் இன்மையால் பல நூல் ஆராய்ச்சி ஈடுபாடு, சமணத்தின் வீழ்ச்சி. சிறந்த புலமை, அதிகாரம். 3. சமய மாற்றம், தமக்கையாரால் திரும்பினது. கழுவாய், மாறுதலில் வீரம். 4. துன்பத்தில் வீரமும் இன்பமும்- துன்பத்தை இன்பமாகக் கருதுதல் - நீற்றறை - நஞ்சு- யானைக் காலில் வீழ்த்தல்-பொறுமையுடன் சகிப்பு - சம்பந்தர் இன்பம். அப்பர் துன்பம். 5. அச்சமின்மை - அரசனுக்கு அஞ்சார் ''நாமார்க்கும்'' - இறுதியில் வெற்றி- அரசன் தோல்வி - சைவன் ஆனான். வீரமுடன் சைவம் போற்றினான். 6. சமயப்பரப்பு - தலசேவை-கயிலை

மட்டும். தேவார சேவை. குணபரேச்சரம், பழையாறை, உண்ணாவிரதம், அரசன் ஈடுபாடு. 7. உலக அனுபவம், பழமொழிகள். இயற்கை ஆராய்ச்சி, அகத்துறை, வானந்துளங்கிலென் . 8. கடுந்துறவு, முதிய வயதில் சோதனைச் சகிப்பு, மணிகள், கல், வேசையர், பொய்மாயம். 9. எளிய தோற்றம், அன்புருக அழுத்த கண்ணீர், தூயகந்தல், திருநீறு. 'மார்பாரப் பொழி கண்ணீர்?. 10.உலக ஊழியம், நஞ்சுநீக்கல், காசு ஈகை, அடியார் வலம் வர (அப்பூதி) உழவாரத் திருப் பணி, சமய நிலையங்களைச் சீர்திருத்தல், 11. தொண்ட ரொடு கூட்டு, சம்பந்தர் உறவு, அப்பூதி, குலபேத மின்மை. 12. முதியவயது, முழுவயது, 80 இடையறாத் தொண்டு, இளமை உழைப்பு.

(a) முதுமையும் இளமையும் ஒன்று சேர்தல், சம்பந்தர் - அப்பர், அன்பு, சமயப்பிரசாரம், இருவரையும் பந்தப்படுத்திய கயிறு. ஆகவே, வேறுபாடுகள் மறைவு, 3 முறை சந்திப்புகள். (b) அற்புதங்கள் 24. கொடுமைகளில் தப்புதல், நஞ்சு நீக்கம், அப்பூதி 'கதவு திறத்தல்' கயிலை சென்று மீண்டது, (c) அப்பர் சம்பந்தர் சந்திப்பு, சீகாழி, 2. திருப்புகலூர் முருகர் மடம். 3.திருப்பூந்துருத்தி.

III. சுந்தரர்: 1. காலநிலை, பல்லவர் இறுதி, சேரர் அரசு அமைதி நிலை. 2. கோலம், மணவாளக் கோலம், அரசன் ஆதரவு, அகவாழ்க்கை; பொருட் பேறு, உள்ளம் தூய்மை, 3.உலக வழக்கு, நாட்டு வழக்கங்களுக்குக் கீழ்ப்படிதல், ஊர்ச்சபை, உரிமை ஆவணம், 4. திருமணம், பெற்றோர் வகுத்த மணம் தடைப்படல், கணிகை மணம், வேளாளர் மணம், உலகர் வெறுப்பு இல்லை, தற்கால இருப்புச் சட்டம் அன்று. 5. இல்லற வாழ்வு, ஒத்துழைப்பு, வீட்டுப் பொருள் நெல் முதலியவை, இறைவன் பேரில் பாரம், ஊடல், ஒத்த அன்பு, உயர்வு. 6. குற்ற மன்னிப்பு, சபதம் தவறுதல், குருட்டுப் பச்சாத்தாபம், மன்னிப்பு, மனிதத் தன்மை, ஆண்ட உலகு வழக்குகள். 7. நட்பின் விளைவு, சேரமானுடன் நட்பு, பொருள் முதலியன. 8. கடவுள் மீது

நம்பிக்கை, சரணாகதி, தனக்குத் தானே உதவி, பொதி சோறு, 9. குலபேதம் இல்லை, இல்லறம், உணவு, 10. அற்புதங்கள், பொருள், முதுகுன்று, குளம், அவிநாசி, முதலை, வேடுபறி, முருகன் பூண்டி, பொதிசோறு, நெல்லு, கலிக்காமர் உறவு. 11. அடிமை ஈசனுக்கு, திருத்தொண்டத் -தொகை, இறுமாப்பு விடுதல். 12. ஆலய வழிபாடு, சமயப் பரப்பு, தேவாரம்.

(a) வாழ்க்கைச் செய்திகள். பிறப்பு, நாவலூர்; அரசன் மகன்மை, திருமணத்தடை, புத்தூர்: ஆவணம், வெண்ணெய்அருள், திருவருட்டுறை, திருவடி சூட்டல், பரவை மணம்-ஆரூர். நெல்லு, குண்டையூர் வந்து காண், பேரூர்; ஆற்றில் பொன், முதுகுன்று, பொதிசோறு, குருகாவூர்; கயிலை, காளத்தி, சங்கிலி மணம், ஒற்றியூர்; சபதம், குருடு, காஞ்சி, ஊடல் ஆரூர்; கலிக்காமர், சேரமான் தோழமை, கொடுங்கோளூர்: வேடர் பறி, முதலை கொங்கு, முத்தி, வெள்ளானை, அஞ்சைக்களம். **(b)** சரிதச் சான்றுகள்.

3. மாணிக்கவாசகர் : 1. சூழ்நிலை. புத்த சமயம், அழுகிக் கிடந்த சமயம், மேல்நாட்டு யவனர் வாணிபம் சிறந்த சமயம். பாண்டியன் சிறப்புடன் ஆண்ட காலம். சைவத்தை நிலை நாட்டினவர். காலத்தைப் பற்றிப் பல கொள்கைகள். சான்று முடிவு இல்லை. வட நாட்டுத் தொடர்பு கொண்டவர். இடம், கொள்கை. 2. அரசியலில் தொடர்பு, முதலில் கண்டு, பிறகு நீத்தது. ஆன்ம விசாரம், அறவேலை, அரசு துறவு. 3. உலகவாழ்வு- இல்லறம் இல்லை. சிலர் கருத்து சரியா, கடுந்துறவு, பித்தன் போல் திரிதல், எழுச்சிப் பாடல், காட்சிப் பொருள்களெலாம் கருத்துக்கள் தந்தன. 4.தாழ்மை, உண்மைச் சமயநெறி, நாயினும் கடையனாய்க் கருதும் தாழ்மை. 5. காட்சிப் பயன்கள், சிற்றுயிர்கள், தேனீ. மகளிர் விளையாட்டுகள், பாவைப்பாடல், வணிகச் சாத்து, நாவறட்சி. 6. துறவி ஆனாலும் அகப்பொருள் எடுத்தாளல், திருவாசகத்திலும் கோவையிலும் சிற்றின்பத்தைக் கொண்டு பேரின்பம்.

7.சமய அனுபவம், படிப்படியாக உயர்ந்து மேல்படி அடைந்தது. 8. அருட் செயல்கள், திருவிளையாடல்கள், இறையடி நிற்றல். 9. இனியவாக்கு - 'திருவாசகத்திற் குருகாதார்' உள்ளத்தெழும்பும் உணர்ச்சி. 10.திருவடியடைதல், உலகை மறந்தது.

(b) அற்புதச் செயல்கள் 18 குறிப்புக்கள்: '

1. அவதாரம் திருவாதவூர்
2. குதிரை வாங்கல்
3. மதுரை. அமைச்சு
4. குருந்த நிழல் - திருப் பெருந்துறை.
5. திருப்பணி
6. ஆவணி மூலம் மதுரை
7. சிறைவாசம்- மதுரை
8. குதிரைக்கோலம்
9. நரி குதிரை
10. ஆற்றுவெள்ளம் மதுரை.
11. பெருமை அறிதல்
12. பெருந்துறை மீளல் - பெருந்துறை.
13. தலங்கள் செல்லல்.
14. திருப்பாடல்கள் - பல இடங்கள்.
15. புத்தவாதம் - தில்லை.
16. ஊமைப்பெண் பேசுதல்
17. மறைமொழி
18. பொருள் கேட்டது. திருவடி நிழல்

(c) ஆராய்ச்சிக் குறிப்புக்கள்:

1.நூல்கள். திருவாசகம், 51-656 பாடல்கள் கோவையார் - 400 பாடல்கள் 2. உலகநிலை, பித்தனைப் போல் துறவு. 3. சரிதச் சான்றுகள், தீட்சை, விளை யாடல், புத்தவாதம், பெயர்கள். 4. சித்தாந்தக் கருத்துக்கள், முடிந்த முடிவுகள். பசுத்தன்மை நீக்கம், ஆசிரியன் உதவி. 5. அற்புதமும் + அதிசயமும் = அறியாது அனுபவம் + உணர்ந்து அனுபவம். 6. அடியார் இலக்கணம், குறிக்கோள் இருவினை ஒப்பு. 7. சொல், அருமை, நயம், அமைதி, சுவை, உவமை, பழமொழி, ஆன்றோர் மொழி ஆட்சி. 8. தன்னையே தாழ்த்திக் கூறல். நாயினேன். 9.உலகத்தைக் கருதிய நிலை. 10. கால ஆராய்ச்சி, மூவருக்கு முந்தியவர்.

(d) நீத்தார் பெருமை	குறள் இயைந்த வரலாறு.
1. ஒழுக்கத்து நீத்தார்	அமைச்சு, கல்வித்திறம், தவ ஒழுக்கத்தில் நிற்றல்
2. இருமை வகை தெரிந்து	குருந்தடி, உபதேசம் – உண்மை விளக்கம்.
3. சுவை ஒளி ஊறு	தொடர்பு நீத்தல்
4. செயற் கரியார்	அருஞ் செயல்கள் – நரிபரி. வைகைப் பெருக்கம்
5. உரனென்னுந்தோட்டி	அமைச்சும் வேண்டாமை, துறவு
6. அந்தணர் என்போர்	அருந்தவம், ஆரருள், அருள் வாக்குகள்
7. குணமென்னும்	புத்தவாதம், தோல்வி தரல்
8. ஐந்தவித்தான்	கோபப்பிரசாதம், ஊமைப் பெண் பேசுவித்தல்
9. நிறை மொழி மாந்தர்	ஈசன் எழுதுதல், நிறை மொழி களை எழுதுதல்
10. துறந்தார் பெருமை	திருவடி கலத்தல்–தில்லை.

இரண்டையும் ஒப்பிடுக .C.K.S.

2. சமயப்பணிச் சாரம்.

நால்வர் பெருமக்கள் சைவ மறுமலர்ச்சிக்குத் திருத்தொண்டு செய்தார்கள். வெற்றியும் அடைந்தார்கள். ஒவ்வொருவர் வாழ்க்கையும் ஒவ்வொருவர் குறிக்கோளும் ஒன்றே. அதுதான் சைவ சமயத்திற்கு நாட்டில் மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தல். பின் வந்த அறிஞர்கள் இந்த நால்வர் பெருமக்களின் வாழ்க்கைகளையும் நன்கு ஆராய்ந்து ஒப்பிட்டுச் சிறப்புப் பண்புகளை எடுத்துக்காட்டிப் பாகுபாடு செய்திருக்கிறார்கள். சைவசித்தாந்தத்தின் முடிவான கோட்பாடுகளுக்கு இந்நால்வர்களே வழிகாட்டிகளாக இருக்கிறார்கள். இக்கோட்பாடுகளுக்கெனவே அவதரித்தார்களோ என்று வியந்து கூறும் வண்ணம் அவர்கள் வரலாறுகள் அமைந்திருக்கின்றன. அப்பாகுபாடுகளை இங்கே அவர்கள் வகுத்தபடி வரும் நன்னெறி நான்மை விளக்கத்தின் வாயிலாக விளக்குவாம்.

நன்னெறி நான்மை விளக்கம்

எண்	பெயர்	இடம்	நிலை	வகை	வேழி	குரவர்	பயன்	செய்யுள்	சரிதம்
1	சரியை	கோயில்	அரும்பு	இருவினை ஒப்பு	தாச மார்க்கம்	அப்பர்	சாலோகம்	என் கடன் பணிசெய்து கிடப்பதே	உழவாரத் திருப்பணி
2	கிரியை	சடங்கு	மலர்	மல்பரி பாகம்	புதல்வ மார்க்கம்	சம்பந்தர்	சாமீபம்	என்ன புண்ணியம் செய்தனை	வழிபாடும் பேரொளியும் மணமும்
3	யோகம்	சாதனம்	காய்	சத்தினி பாதம்	சக மார்க்கம்	சுந்தரர்	சாரூப்யம்	தவநெறி	வெள்ளானை மீது கயிலை செல்லல்
4	ஞானம்	அறிவு	கனி	சற்குரு காட்சி	சன்மார்க் கம்	மாணிக்க வாசகர்	சாயுச்சியம்	நன்றே செய்வாய்	குருந்தநிழல் குருவருள்

IV

1. வளமை நிலை

சைவம் மறுமலர்ச்சி உற்று நல்ல நிலையில் வேரூன்றி விட்டது. அது நன்கு வளரத்தொடங்கிற்று. அதற்குக் காலநிலை தக்க பலத்தைத் தந்தது. நாட்டில் பல்லவ அரசு தாழ்ச்சி உற்றது. தஞ்சையில் சோழ அரசு முளைத்தது. விசயாலயச்சோழன் புதுச்சோழ மரபைத் தொடங்கினான். அவனுடைய மரபில் ஆதித்தன், பராந்தகன், உத்தமன், இராசராசன் இராசேந்திரன் முதலான பேரரசர்கள் தோன்றி னார்கள். தமிழ்ப் பண்பாட்டை வளர்த்தி, தமிழ் வழங்கின நாடுகள் எல்லாவற்றையும் ஒரு குடைக் கீழ்க்கொண்டு வந்து வெளிநாடுகளிலும் பரப்பினார்கள். கடல் கடந்து கடாரம் சாவகம் முதலான தீவுகளுக்கும் சென்று வாணிபத்தைப் பெருக்கிச் செல்வாக்கை மிகுதிப் படுத்தினார்கள். வீரம், வெற்றி இவைகளால் அதுவரை இல்லாத பெரும் புகழும் நாட்டுப் பெருக்கமும் தமிழ்நாடு அடைந்தது. இந்தப்புகழ் ஆயிரம் ஆண்டுகளும் குறையாமல் வீசி நின்றது. பெருமை மட்டுமோ? தமிழ்மொழியின் சிறப்பு மட்டுமோ? சைவ சமயத்தையும் போற்றி நாடெங்கும் சைவ நிலையங்களான கோயில்களை எழுப்பினார்கள். தஞ்சை, கங்கைகொண்ட சோழபுரம் முதலான இடங்களில் மிகப்பெரிய கோயில்களைக் கட்டிச் சிற்பங்களையும் ஓவியங்களையும் சிறப்பித்தார்கள். திருவிழாக்கள், சமயப்பிரசாரங்கள், தேவார முழக்கங்கள், நாட்டியக் கலை முதலியவைகளையும் கோயில்களில் சிறப்பித்துத் தமிழ்க் கலைஞானத்தைப் பெருக்கினார்கள். தமிழ் நாடு மட்டுமேயன்றி இலங்கை, கடாரம், சாவகம், கம்போடியா முதலான தொலை நாடுகளிலும் கோயில்களைக் கட்டினார்கள். இந்த நாடுகளில் இன்னும் பண்டைச் சைவக்கோயில்கள் காட்சியளிக்கின்றன. இலங்கையில் பொலன்னறுவையில் சோழர்கள் கோயில்கள் இன்னமும் அழியாமல் இருக்கின்றன.

அக்கோயில்களில் அரிய செப்புத் திருமேனிகளை வைத்துத் திருவிழாக்களை ஏற்படுத்தினார்கள்.

தற்போது கிடைத்துள்ள நால்வர்களுடைய வெண்கலச் சிலைகளில் பொலன்னறுவைப் பிரதிமைகள் தாம் மிகப் பழமையானவையாய்ச் சிறப்புடனும் விளங்கு கின்றன என்று சிற்ப நிபுணர்கள் கூறுகிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட சிறந்த மேம்பாடு சோழ மன்னர்களால் உண்டாக்கி இருக்கும் நிலைமை நால்வர் களுடைய ஆக்க வேலையினால்தான் என்று அறிய வேண்டும். அவர்கள் அருளிச்செய்த தேவார திருவாசகங்களை நன்கு போற்றி எல்லாக் கோயில்களிலும் ஓதுவதற்கு ஏற்பாடு செய்தனர். அதற்காக அளவிறந்த தானங்களைத் தந்து நிறுவினார்கள். இந்த முறையில் நாடெங்கும் சைவம் வளர்ந்து விளங்கியது. அவர்கள் காலத்தில் மற்றும் பல் சைவப் பெரியார்கள் தோன்றிச் சைவ இலக்கியத்தை வளர்த்தார்கள்.

௨. சோழர் காலச் சமய நூல்கள் :

சோழப் பேரரசுக் காலத்தில் தேவாரங்களை ஒட்டிப் பாடிய சிவனடியார்கள் ஒன்பது பேர். இவர்களுடைய நூல்கள் திருவிசைப்பா என்ற தொகுதியில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. 1. திருமாளிகைத்தேவர் 4 பதிகங்கள். 2. சேந்தனார் 3 பதிகங்கள். 3. கரு வூர்த்தேவர் 10 பதிகங்கள். 4. பூந்துருத்தி நம்பி காட நம்பி 2 பதிகங்கள். 5.கண்டராதித்தர் 1 பதிகம். 6. வேணாட்டடிகள் 1 பதிகம், 7. திருவாலியமுதனார் 4 பதிகங்கள், 8. புருடோத்தம நம்பி 2 பதிகங்கள், 9. சேதிராயர் 1 பதிகம் ஆகப் பாடினோர். 9. பதிகங்கள் 28. சேந்தனார் திருப்பல்லாண்டு 1 பதிகம் ஆகப் பதிகங்கள் 29. இவர்களில் சிறப்புள்ளவர் கருவூர்த் தேவர். இராசராசன், இராசேந்திரன் காலத்தவர். அவர்கள் கட்டிய தஞ்சைப் பெருங்கோயில், கங்கை கொண்ட சோழேச்சரம் இவைகளைப் பாடியிருக்கிறார். இவர் ஒரு சித்தர். இவர் பல அற்புதங்களைச் செய்தவர். தஞ்சைக் கோயிலில் மூர்த்தியை நிலை நிறுத்தியவர். இவர் பாடிய பத்துப்

பதிகங்களில் திரைலோக்கிய சுந்தரம், களந்தை ஆதித்தேச்சுரம் சோழர் திருப்பணிகள் ஆகும்.

கண்டராதித்தர்:

சோழர் பரம்பரையில் வந்த அரசர் பல ஆலயங்களைக் கட்டினவர். இவரின் தேவியார் செம்பியன் மாதேவியார் என்ற புகழ் பெற்ற சைவ மாதர். திருமாளிகைத் தேவர், இவர் 4 பதிகங்களைப் பாடினவர். சோழ மன்னர்களுக்குக் குருமுறை வந்தவர். இவரும் பல அற்புதங்களைச் செய்தார். சேந்தனார் திருவிசைப்பா 3, பல்லாண்டு ஒன்று பாடியவர்; பல்லாண்டு பாடித் தில்லையில் திருத்தேர் நடத்தினாராம்.

திருப்பூந்துருத்தி நம்பி காடநம்பி 2 பதிகம் பாடினார். கண்ணப்பர், சம்பந்தர், அப்பர், சேரமான், சுந்தரர் முதலிய நாயன்மார்களைத் தம் பதிகத்துள் எடுத்தாண்டுள்ளார். வேணாட்டடிகள் மலை நாட்டில் தோன்றி ஓர் அரிய பதிகம் பாடியுள்ளார்.

திருவாலித் திருவமுதனார் வைணவத்தில் தோன்றிப் பிறகு சைவராகிக் கோயிலைப் பற்றி 4 பதிகங்கள் பாடினார். புருடோத்தம நம்பியும் அவரைப் போல வைணவத்தில் தோன்றிச் சிவநேயர் ஆகி 3 பதிகம் பாடினார்.

சேதிராயர் சேதி நாட்டுத் தலைவர் மரபில் வந்தவர். ஒரு பதிகம் பாடியுள்ளார். ஆக மொத்தம் 9 அடியார்கள் 29 பதிகங்களைப் பாடினார்கள். 333 பாசுரங்களை அருளிச் செய்தார்கள். இவர்கள் எல்லாரும் சோழர் விஜயாலய முதற் பரம்பரையில் தோன்றிச் சைவத்தைப் பரப்பிய அடியார்கள் ஆவர்.

திருவிசைப்பா ஆசிரியர்கள் தேவார காலத்திற்குப் பிறகு ஒன்றிரண்டு நூற்றாண்டுகளின் பின்னரே தோன்றியுள்ளார்கள். அவர்கள் தேவாரங்களின் போக்கை ஒட்டிப் பாடினபோதிலும் கால வேற்றுமையினால் சில

மாறுதல்கள் தோன்றியிருக்கின்றன. சோழர்கள் வடமொழியையும், வடநாட்டு வழக்கங்களையும் பின்பற்றினார்கள். அந்த வேறுபாடு திருவிசைப்பாவிலே எடுத்தவுடன் காண்போம். அது வரையில் இருந்த முருகன் என்ற சொல்லை முதன் முதலாகச் சுப்பிரமணியன் என்று திருவிடைக்கழித் திருவிசைப்பாவிலே சேந்தனார் பாடியிருக்கின்றார்.

செய்யுட் போக்கில் அந்தாதித் தொடை புருடோத்தம நம்பி சேதிராயர் ஆண்டிருக்கின்றனர். அகப் பொருள்துறை யமைந்த கருத்து பாக்களில் இருக்கின்றது. பொதுவாகக் கருவூர்த் தேவர் பாடல்கள் மிகச் சிறந்து இருக்கின்றன. பல்லாண்டு ஒரு புதிய கருத்து ஆகும். அதில் பிறர் சமயத்தைக் கண்டிக்கிற செய்தி வந்திருக்கிறது. நடை, பொருள் இவைகளைக் காணும்போது தேவார காலத்தைவிட விருவிருப்புக் குறைவு என்றே கூற வேண்டும். காரணம் நாட்டில் அரசியல் அசைவு ஏற்பட்டதுதான் என்க.

3. திருமந்திரம் 10-ஆம் திருமுறை :

10 ஆம் திருமுறை அருளிச் செய்தவர் திருமூல நாயனார். அவர் அறுபத்துமூவரில் ஒருவர்; அவர் காலத்தினாலும் முந்தியவர் என்பர். அப்படியாயின் திருமுறை ஏன் பின் வைக்கப்பட்டது? இதுவரை தொகுக்கப் பெற்ற 9 திருமுறைகளும் துதிநூல்கள். 10ஆம் திருமுறையாகிய இந்நூலோ சைவத்தைப் பற்றிய கொள்கைகளைக் கூறுவது. வகுத்த நம்பிகள் துதிமுற்றுங் கூறியான பிறகு கோட்பாடுகளை வைக்கலாம் என்று கருதியிருக்கலாம். திருமூலர் ஆண்டுக்கு ஒரு பாடலாக 3000 ஆண்டுகள் பாடினார் என்பர். அதாவது நீண்ட காலமாகப் பாடினார் எனலாம். இந்நூலை முழுவதும் பாடிமுடிக்கச் சோழர்காலம் வரை நீடித்திருக்கலாம் என்று விளக்க முடியும். நம்பிகள் அதைக் கொண்டு தம்காலம்

வரை முடிவு அடைந்த இந்த நூலை 10ஆம் திருமுறையாய் வகுத்திருக்கலாம். நூலினுடைய நடை கருத்து போக்கு இவைகளை ஆராய்ந்தால் 10ஆம் நூற்றாண்டு அளவில் இதனைக் கொண்டு வரக்கூடும். இந்தமுறையில் திருமந்திரம் சேர்க்கப்பட்டது என்றால் யாரும் மறுக்க வழியில்லை. அதுவரை வகுக்கப்படாத செய்திகளை முதன் முறையாக இந்நூல் கூறுகிறது அல்லவா?

இனி, திருமந்திரத்தில் உள்ள கருத்துப் போக்கைச் சிறிது ஆராய்வது நன்று.

பாயிரம் - கடவுள் வாழ்த்து- வேதாகமச் சிறப்பு - மூவர் வரலாறு.

முதல்: உபதேசம், யாக்கை, செல்வம் நிலையாமை. கொல்லாமை, கல்வி, கள்ளுண்ணாமை.

இரண்டாவது: அட்டவீரட்டம், லிங்கபுடம், 5 தொழில், கர்ப்பக்கிரியை, சிவநிந்தை, குருநிந்தை.

மூன்றாவது: அட்டாங்கயோகம், அட்டமாசித்தி.

நான்காவது: திருவம்பலச் சக்கரம், நவகுண்டம் வயிரவி.

ஐந்தாவது: சரியை, கிரியை, யோகம், ஞானம்.

ஆறாவது: குருதரிசனம், திருநீறு, துறவு, தவ வேடம், ஞானயோகம்.

ஏழாவது: ஆறாதாரம், சிவபூசை, குருபூசை, சமாதிக்கிரியை, மத இலக்கணம்.

எட்டாவது: அவத்தைகள், வாய்மை, அவாவறுத்தல், பத்திமுத்தி.

ஒன்பதாவது: பஞ்சாட்சரம், சிவதரிசனம், சூனிய சம்பாஷணை, தோத்திரம்.

சித்தர் கருத்துக்களைக் கண்டவர்கள் வடமொழியில் உள்ள வேதம், ஆகமம் இவைகளைத் தமிழ்ப்படுத்தி யவர் என்பர். திருமூலர் எடுத்தாண்ட முறையில் வேதாகமங்கள் இல்லை. இதுவல்ல கருத்துக்கள். இருக்கலாம். முறையும் ஒழுங்கில்லை. ஆகவே திருமூலர் இந்நூலை முதல் நூலாகவே இயற்றினார் என்பதில் இழுக்கில்லை. உபநிஷத்துக்கள், ஆகமங்கள் இவைகளைப் படித்து விட்டுத் தமிழில் புதிதாக வரிசைப் படுத்தி இந்நூலை அவர் எழுதியிருக்கலாம். மக்கள் சமயத்தை அறிவதற்கும் சமய நிலையங்கள் முதலியவைகளை வழிபடுவதற்கும் இந்நூல் எழுதி இருக்கின்றார் என்று அறிய வேண்டும். இந்நூல் அந்நாளில் கோயில் எழுப்புவதற்கும், வழிபாடு செய்வதற்கும் சமயக் கொள்கைகளைப் பரப்புவதற்கும் மிகவும் பயன்பட்டது. மிக உயர்ந்து அப்பியாசங்கள் ஆன அட்டமாசித்தி, அட்டாங்க யோகம் முதலான செயற்கரிய செயல்களையும் இந்நூல் கூறுகிறது. ஆலயச் சிற்பத்தை முதன் முதலில் இந்நூல்தான் கூறுகின்றது. சோழ அரசர்கள் கோயில் நிர்மாணத்திற்கு இந்நூலே ஆதாரமாக இருந்தது. சூனிய சம்பாஷணை என்பது விளங்காத உண்மைகளில் தொகுக்கப்பட்டுள்ளது. இது உரையின்றி அறியற் பாலதன்று.

4. பதினோராம் திருமுறை : நூல்களைத் தொகுத்து தொகை நூல்கள் ஆக்கி மக்கள் ஒத்த கருத்துக்களை ஒரே இடத்தில் ஒழுங்காக அறிதற் பொருட்டு வெளியிடுதல் தமிழ்ப் புலமையின் சிறந்த பண்பாகும். அவ்வாறு சங்ககாலம் முதல் பல தொகை நூல்கள் வெளிவந்தன. சைவ சமயத்தை உணர்த்தும் நூல்களைத் திரட்டி வெளியிடுதல் அப்பண்பில் ஒன்றாகும். திருமுறைகளை வெளியிட்ட செய்தி அந்தக் கொள்கையின் பொருட்டே. முதலில் நால்வர் துதிநூல்களும் வெளியிடப்பட்டன. பிறகு ஒன்பதும் பத்தும் வெளி வந்தன. இவைகள் போக இன்னும் பல நூல்கள் சைவபரமாக இருந்தன. அவைகள் சங்கத்தார் காலம் முதல் தம் காலம் வரையில் பரந்து கிடக்கக்

கண்டார் நம்பியாண்டார் நம்பிகள். அவைகளை ஒன்று சேர்த்தி ஒரு தொகுதியாக வெளியிட்டால் சைவ மரபை வெகு எளிதில் கண்டு கொள்ளலாம் என்று கருதி 12 அடியார்கள் அருளிச் செய்த 40 நூல்களை ஒன்று சேர்த்துப் பதினோராம் திருமுறையென்று பெயரிட்டார். இவைகளில் தற்போது கிடைத்துள்ளவை 1388 பாடல்கள் மட்டும். முன்பு பல பாசுரங்கள் கூடியிருக்க வேண்டும்.

இத்தொகுதி மிகச்சிறந்த வகையில் அமைந்துள்ளது. முதற்பாசுரம் 'மதிமலி புரிசை' என்பது. திருவாலவாயுடையாரால் அருளப்பட்டது. மற்றொன்று நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப் படை. இவ்விரண்டும் சங்கநூல்கள். காரைக்கால் அம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள் இம்மூவரும் நாயன்மார்கள். நக்கீரர், கல்லாடர், கபிலர், பரணர் என்ற நால்வரும் கடைச்சங்கப் புலவர்கள். ஆனால் திருமுருகாற்றுப்படை தவிர இதில் கண்ட வேறு நூல்கள் சங்க நூல்களில் காணப்பெறவில்லை. அவர்கள் வாக்கோ என்பதும் ஐயம். இளம் பெருமானடிகள், அதிராவடிகள் என்பவர்களைப் பற்றிய செய்தி பிற நூல்களில் இல்லை. பட்டினத்தடிகள் வாக்கு மிக மேன்மை பொருந்தியது. மற்றொரு பட்டினத்தடிகள் வேறு பாடல்களைப் பாடியுள்ளார். நம்பியாண்டார் நம்பிகள் இந்தப் பதினோர் அடியார்களின் நூல்களோடு தாம் இயற்றிய 10 நூல்களையும் சேர்த்து ஒரு திருமுறை ஆக்கினார். இந்த வகையில் அந்நாள் வரை சைவ மக்களால் எடுத்தாளப்பட்ட சைவ நூல்கள் எல்லாம் இந்தப் பதினொரு திருமுறைகளில் அடங்கி விட்டன.

இத்தொகுதியில் வேறு சில சிறப்புக்களும் உண்டு. முந்திய 10 திருமுறைகளில் ஏதோ சிற்சில பாடல்களில் மட்டும் பிள்ளையார், முருகன் இவர்களைப்பற்றிப் பாடல்கள் உண்டு. ஆனால் இந்தத் திருமுறையிலோ விநாயகருக்கும், முருகப் பெருமானுக்கும் தனித்தனி

நூல்களே இருக்கின்றன. இதில் விநாயகருக்கு 3உம் முருகருக்கு 1உம் சிவபெருமானுக்கு 26உம் நூல்கள் அமைந்துள்ளன. மேலும் புதிதாக அடியார்களில் சம்பந்தர் 6, அப்பர் 1, கண்ணப்பர் 2, சேரமான் திருத் தொண்டர் பொதுவில் 1 ஆக இவைகள் உள்ளன. சோழர்கள் அரசுக்கு முன் இறைவனைத் தவிர மக்களில் எவருக்கும் தொழுகை இல்லை. முதன் முதலில் சோழர்கள் தாம் சிவன் அடியார்களுக்கு உருவங்களும், விழாக்களும், பாடல்களும், வைத்து ஆதரித்தார்கள். அவற்றை முற்றிவைத்தவர் தாம் நம்பிகள். திருமுறைகளில் பொதுவாக விருத்தங்களே ஆளப்பட்டன. இந்தத் திருமுறையில் அந்தாதி 8, ஆற்றுப்படை 1, இரட்டைமணி மாலை 4, உலா 2, எழுகூற்றிருக்கை 1, மறம் 2, மும்மணிக்கோவை 7, ஏகாதச மாலை, ஒருபா ஒருபஃது, கலம்பகம், கலிவெண்பா, வெண்பா முதலிய பிரபந்தங்கள் காணப்படுகின்றன. வழக்காறு மாறிவிட்டது. காரைக்கால் அம்மையார், சேரமான் பெருமான் நூல்கள் மிகச் சிறந்த கருத்துக்களைக் கொண்டவை. அவற்றைப் போலவே பட்டினத்தடிகள் பாடல்களும்.நம்பியாண்டார் தாம் முதன் முதலில் அடியார்களை வியந்து பாடியவர். அவருக்குப் பின் கணக்கற்ற நூல்கள் தோன்றத் தொடங்கின. 11ஆம் திருமுறை பிரபந்த இலக்கியத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கிற்று. பின்னரே அதற்குப் புகழ்பரவிற்று. வெண்பாக்களின் சிறப்பு முதலியவைகளை வெகு இனி மையாக எடுத்தாண்டவை, கபிலர், பரணர், முதலியோரின் நூல்களே யாகும்.

5. திருத்தொண்டர் புராணம், 12ஆம் திருமுறை சோழர் காலத்தில் தோன்றின சைவ நூல்களில் மிகச் சிறந்தது இந்நூலாகும். அக்காலத்தில் சோழன் அமைச்சராக இருந்த அருண்மொழித் தேவர் என்ற சேக்கிழார் அருளிச் செய்த பெருநூல் இதுவாகும். சிறந்த இலக்கியமாகவும், வரலாற்றுச் சான்று நூலாகவும், சமய நூலாகவும் இது விளங்கும். சிவனடியார்கள் அறுபத்து மூவர் வரலாற்றைக் கூறும்

வகையால் இது அமைக்கப்பட்டுள்ளது. இடை இடையே அழகிய இலக்கியக் கருத்துக்களும், சமயக் கோட்பாடுகளும் நிறைந்துள்ளன. தற்காலத் தென்னாட்டு வரலாற்று ஆராய்ச்சிக்கு மிகவும் பயன்படுகிறது. சுந்தர மூர்த்திகள் அருளிய திருத்தொண்டத் தொகையை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது இந்நூல். ஏனைய சமயங்களில் சமயாசிரியர் வரலாறே மறையாக இருப்பது போல இந்நூல் மற்றத் துதி நூல்களுக்குச் சேர்க்கையாக வரலாற்று நூலாக அமைந்திருக்கிறது. விவிலிய நூல் விவிலியத்திற்கு வரலாறு போல இந்நூல் தென்மொழிச் சைவத்திற்கு வரலாற்று நூலாக அமைந்திருக்கிறது. இந்நூல் விரிவானது: 4253 செய்யுள் கொண்டது; 13 பிரிவுகளாகப் பிரிந்தும் உள்ளது. தமிழில் புராணம் என்ற பெயரால் முதன் முதலில் வழங்கப்பட்டது.

சேக்கிழார் தோன்றிய காலம் தமிழ்நாட்டில் சோழர்கள் மிகப் புகழோடும் வெற்றியோடும் திகழ்ந்து சைவம் பரப்பி ஓங்கச்செய்த காலமாகும். உள்நாட்டுப் போர்கள் வெளிநாட்டுப் போர்கள் எல்லாம் நின்று போய் நாடெங்கும் அமைதி நிலவிய காலம். தமிழ் ஆராய்ச்சியிலும் சைவ ஒழுக்கத்திலும் தலைசிறந்திருந்த காலம். சோழர் பேரரசு உச்சியில் திகழ்ந்த காலம். ஆகவே அதனைக் குலோத்துங்கன் II ஆம் காலம் என்பர். இதனை மறுத்துச் சிலர் முன்பின் என்று கூறுவாரும் உளர். பெரிய புராணம் என்று பொதுவாய் வழங்கும் திருத்தொண்டர் மாக்கதை தமிழர்களிடைப் பெரும் உணர்ச்சி தோற்றுவித்தது. அடியார்களுடைய வரலாறுகளைப் பொதுமக்களும் அதிகாரிகளும் போற்றி வரலானார்கள். கோயில்களில் அதுவரை மானிடர்களை வைத்து வழிபடாத மக்கள் அடியார்களின் திருவுருவங்களை அங்கங்கே வைத்து வணங்கலானார்கள். பெரிய கோயில் எதுவானாலும் தொண்டர்கள் திருவடிவங்களை நிறுவினார்கள். சைவசமயத்தின் மேன்மைகளை மக்கள் மிகவும் உணர்ந்தார்கள். சுற்றிலும் இருந்த நாடுகளில் அது

பரவிற்று. ஆந்திர கருநாடகப் பகுதிகளிலும் திருத்தொண்டர் வரலாறுகள் பரவின. வீரசைவம் வளர்ந்த கருநாடக நாட்டிலும் அவர்கள் இலக்கியத்திலும் அறுபத்துமூவர் வரலாறுகள் வழங்கத் தொடங்கின. தெலுங்குக் காவியங்களிலும் அவ்வரலாறுகள் புகுந்தன. தெற்கே இலங்கையிலும் நாயன்மார்கள் வரலாறுகள் சென்றன, இந்தவகையில் சேக்கிழார் நூல் பரவிற்று.

குல வேற்றுமைகள் வகுப்பு வாதங்கள் மிகுந் திருந்த வட நாட்டுக் கொள்கைகள் தெற்கே வர நுழைந்த காலத்தில் அவற்றின் வேகத்தைத் தடுத்திடுதல் இந்தப் பெரிய புராணத்தின் பொது நோக்கேயாகும். தனியடியார்கள் 60இல் 13க்குமேல் வேளாளர், 13 சிவ வேதியர், 6 முடிமன்னர், 5 குறுநில மன்னர், வணிகர், 2 இடையர், சாலியர், குயவர்,பரதவர், சான் றார், வண்ணார், புலையர், மறவர், பாணர் ஒவ்வொருவர் ஆகப் பல குலத்தோர் அடங்கியுளர். இத்தனை வேற்றுமை கொண்ட மக்களெனினும் அன்பர்கள் ஆனபடியால் எல்லாரும் கோயிலில் எழுந்தருளும் - வழிபடும் பெருமையும் கொண்டார்கள் என்றால் இந்தப் பெரிய நிலை எவரால் தரப்பட்டது, பெரிய புராணத்தை அருளிய சேக்கிழார் வாக்கினால் என்றறிக. இஃது ஒரு பெரிய நினைக்க ஒணாத சீர்திருத்தம். அதுவும் சமயத்தில் ஏற்பட்டதென்றால் ஆசிரியரின் திரு ஊக்கம், உள்ளத்தெழுச்சி என்றே கூறவேண்டும்.

அரசியலின் ஆதரவு இல்லாமல் இருந்தால் இந்தப் பெரிய சீர்திருத்தமும் மக்களிடை ஏற்பட வகையில்லை. அந்த அரசியலாரின் கல்வி, ஒழுக்கம், சமய உணர்ச்சி, இவைகள் உயர்ந்த நிலையில் இருந்திருக்க வேண்டும். ஆலயங்களை எழுப்பியும் சமய விழாக்களை நடத்தியும் மக்களை ஒற்றுமைப் படுத்தியும் வெகு அமைதியுடன் ஆண்டார்கள். அப்படிப்பட்ட மேன்மையான நிலை ஏற்பட்ட காலம்தான் அக்காலம். ஆகவே திருமுறைகளின்

முடிவான நூலாக இந்தப் புராணம் கொள்ளப்பட்டது. அது மக்களுள் குன்றாது பரவி இன்று வரை தனிப் பெருமையுடன் விளங்குகிறது. தமிழ்நாடும் சைவ சமயமும் அப்பெரிய ஆசிரியருக்கு இது நாளும் பெருமை செலுத்திக் கொண்டே வருகிறது.

சைவ சித்தாந்தம் 9, 10, 11, 12 திருமுறைகளின் சாரம்

சோழர் பேரரசு பெரும் புகழுடன் ஓங்கி இருந்த நாளில் சைவமும் மிக ஓங்கி வளர்ந்திருந்தது என்று கண்டோம். அப்போது அதன் கொள்கைகள் நாடெங்கும் பரவி மக்களும் அவற்றில் ஊன்றிக் கிடந்தனர். மக்களின் வாழ்க்கையே சைவ ஒழுக்கமாக இருந்தது. கோவில்கள் சிறந்து மிளிர்ந்தன. அவற்றில் திருவிழாக்கள் முறைப்படி நடந்தன. மக்கள் ஆலயம் சென்று வழிபட்டார்கள். நிறைந்த பொருள்களை அச்சமயப் பணிவிடைகளுக்கு அளித்தார்கள். ஆடவர்களேயன்றிப் பெண்மணிகளும் இந்த அறச்செயல்களில் ஈடுபட்டார்கள். அரசர்களும் வணிகர்களுமேயன்றி வேளாளர்களும் மற்றத் தொழிலாளர்களும் சமய அறங்களைச் செய்தார்கள். இப்படிப்பட்ட நிலையைத் திருமுறைகள் பாதுகாக்கின்றன (பிரதிபலிக்கின்றன). அக்காலச் சைவ ஒழுக்கத்தை நன்கு விளக்குகின்றன. அதனை எடுத்துக் காட்டுவதற்கு அடியிற் கண்ட சாரம் பயன்படும்:

திருமுறை எண்	நூல்	ஆசிரியர்	காலம்	பிரிவு கள்	செய்யுள் எண்	பாடல் வகை	கருத்து
(9) IX	திருவிசைப்பா திருப் பல்லாண்டு	மாளிகைத் தேவர் முதலியவர்	9-10 நூ	29	301	விருத்தம்	துதிகள்
(10) X	திருமந்திரம்	திருமூலர்	தொடக்கம் பண்டு முடிந்தது 10 - நூ.	9	3047	விருத்தம்	ஆகமம்
(11) XI	பதினோராம் திருமுறை முதலியவர்	திருவாலவா யுடையார் 10 - நூ.	தொகுக்கப் பட்டது.	40	--	நான்கு பா வகை களும்	துதிகள்
(12) XII	பெரிய புராணம்	சேக்கிழார்	12 நூ	13	4286	விருத்தம்	வரலாறு
மொத்தம்	4 ----	9-12 நூ.	---	----	----	----	காவியமுறை

மேலே காட்டியிருக்கும் பாகுபாட்டின்படி சைவ சமயத்தின் மறுமலர்ச்சித் தொடக்கக் காலத்திற்கும், வளமைக் காலத்திற்கும் இருந்த வேற்றுமை நன்கு தெரியலாம். தொடக்கக் காலத்தில் உணர்ச்சி ததும்பக் கூடிய புகழ்த்துதிப் பாடல்களே தோன்றி மக்களை ஈடுபடுத்தின. ஆனால் வளமை உள்ள காலத்தில் புகழ்த்துதிப் பாடல்களோடு கொள்கைகள் திரண்டு வரலாறுகளும் பெருகின. கொள்கைகள் திரண்டால்தான் சமயம் நிலை நிற்கும். மேலும் அவற்றை விளக்கும் எடுத்துக்காட்டுகளும் வேண்டும். அவ்வெடுத்துக் காட்டுகளே நாயன்மார் வரலாறுகள். இவ்வரலாறுகள் எழுதப் பெறாவிட்டால் வாழ்ந்த பெருமைகளைப் பொதுமக்கள் மறந்து விடுவார்கள். அவைகளை மறந்து போகாமல் மக்களுக்கு வழிகாட்டிகள் போல் கண்ணெதிரில் என்றும் நின்று ஊக்கம் அளிப்பது சேக்கிழார் பாடலேயாகும். இந்த வகையில் சோழப்பேரரசில் சைவம் விளங்கி மக்களைச் சீர்ப்படுத்தியது.

V. முதிர்ச்சிப் பருவம்

1. நாட்டு நிலைமை : சோழப் பேரரசு 12ஆம் நூற்றாண்டு இறுதியிலேயே சிறிது ஆட்டம் கொடுக்கத் தொடங்கியது. 13ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் ஆட்டம் வலுவாயிற்று. காரணங்கள் இங்கே கூற வேண்டியதில்லை. அரச பரம்பரையினர் நாளுக்கு நாள் வல்லமை குன்றத் தொடங்கினர். மூன்றாம் குலோத்துங்கன் காலத்திலேயே சமய நிலையங்களில் சில ஒழுங்கீனங்கள் தோன்றத் தொடங்கின. ஒரு சிறந்த அலுவல் ஆளனை நியமித்துக் கோயில் நிர்வாகங்களைப் பரிசோதனை செய்யவும் ஆணையிட வேண்டி இருந்தது. இது மட்டும் அன்று. பாண்டியர்கள் தலையெடுத்துச் சோழநாட்டை வலிந்து கவரத் (ஆக்கிரமிக்கத்) தொடங்கினர். பிறகு வடமேற்கேயிருந்து ஹொய்சளக் கருநாடர்கள் தெற்கே படையெடுத்துத் திருச்சி வட்டம்

வரை வந்தார்கள். சோழ நாட்டில் மேற்பாதி அவர்கள் வசம் சென்று விட்டது. ஆனால் பாண்டியர்கள் தமிழர்கள் ஆனதனாலும் சைவத்தைப் போற்றி வந்ததோடு பெருக்கவும் தொடங்கினார்கள்.

சடாவர்மன் சுந்தரன்:- மாறவர்மன் சுந்தரன் முதலிய பாண்டியர்கள் சோழநாட்டைப் பிடித்ததுமன்றி வடக்கே சீரங்கம், சிதம்பரம் முதலிய திருத் தலங்களுக்குச் சென்று கணக்கற்ற திருப்பணிகள் தானங்கள் செய்தனர். அவர்கள் செய்த திருப்பணிகளையும் வெற்றிச் செய்திகளையும் நீண்ட மெய்க்கீர்த்திகளிலும் வெண்பாக்களிலும் எழுதிக் கல்லில் வெட்டினார்கள். மேலும் பல்லவர் கிளையினரான கோப்பெருஞ்சிங்கன் சோழர்களினின்றும் விடுவித்துக் கொண்டு தனியரசு ஏற்படுத்தியதுமன்றித் திருவண்ணாமலை, விருத்தாசலம் முதலிய கோயில்களில் பெரிய மெய்க்கீர்த்திகளைப் பெரிய கல்லில் வெட்டியிருக்கின்றான். இவனுடைய திருப்பணிகளும் சமயப் பிரசாரங்களும் அளவிறந்தன. ஆகவே சோழநாட்டிலும் நடுநாட்டிலும் சமயம் சீர்தூக்கி நிற்கச் சோழர்களுக்குப் பின் பாண்டியர்களும் புதுப் பல்லவர்களும் மிகவும் பாடுபட்டனர். ஆகவே சமயம் இக்காலத்திலும் தாழவில்லை.

அரசியல் ஆதரவும் மக்கள் ஊக்கமும் பெற்ற சைவசமயமோ மேற்கொண்டு தழைக்கத் தொடங்கிற்று. மிகவும் முதிர்ச்சியும் அடைந்தது. ஆலயமெடுப்பதிலும் (நிர்மாணத்திலும்) வழிபாட்டிலும், திருவிழாக்களிலும் இன்னிசைப் பாடல்களிலும் தழைத்த சைவசமயம் மேற்கொண்டும் கோட்பாடுகளை வகுத்துக்கூறும் சிறப்புத்தொழிலில் சென்று ஓங்கியது. மக்கள் வெறும் புலமையைவிட்டுத் தத்துவ ஞானம்பெற விழைந்தனர். அதுவரை சிறுசிறு தொகுதிகளாக இருந்த சைவசமயக் கோட்பாடுகள் எல்லாவற்றையும் தொகுத்து விரித்து முறையாக வகுத்துச் சித்தாந்தம் அல்லது முடிந்த முடிவாகக்

காண முயன்றனர். மிகச்சிறந்த ஆசிரியர்கள் நாட்டில் தோன்றி அதுவரைகண்ட உண்மைகளையெல்லாம் ஒழுங்குபடுத்திய நூல்கள் தாம் சித்தாந்த சாத்திரங்கள் அல்லது மெய்கண்ட நூல்கள்.

2. மெய்கண்ட நூல்கள் :- இவைகள் பதினான்கு சாத்திரங்கள் என வகுக்கப்பட்டு இருக்கின்றன. இவைகளை இயற்றின அறிஞர்கள் 6 பேர். இவர்கள் 12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 13ஆம் நூற்றாண்டின் முழுப்பகுதியிலும் 14ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இருந்தவர்கள். ஆகவே இரண்டு நூற்றாண்டளவில் இந்நூல்கள் தோன்றியுள்ளன. இவைகளுக்கு முந்திய சைவ நூல்கள் அக்காலத்து அரசர்கள் ஆதரிப்புப் (பராமரிப்பு) பெற்று விளங்கின. ஆனால் சித்தாந்த நூல்கள் அரசியலை அண்டாது சமயப் பேர் அறிஞர்களால் திருவடியுணர்வுப் (ஞானப்) பெருக்கத்தை உன்னியே எழுந்தன. ஆகவே அரசியல் போக்கிற்கும் இந்நூல்களின் தோற்றத்திற்கும் யாதொரு தொடர்பும் இல்லை. காலநிலை மட்டும் அனுகூலமாக இருந்தது. அதனை ஒட்டி அமைதி தோன்றித் தத்துவ ஆராய்ச்சிகள் தோன்றின. அவைகளைச் செய்த அறிஞர்கள் மடாலயங்களில் எழுந்தருளி இருந்த துறவிமார்களே. வடமொழிக்கு வேதாந்தம் தோன்றினது போலத் தென் மொழிக்குச் சித்தாந்தம் விளைந்தது.

இப்பதினான்கு நூல்களுள் சிவஞானபோதம் (மெய் கண்டார்) சிவஞானசித்தியார் (அருள்நந்தி தேவர். சிவப்பிரகாசம் (உமாபதி சிவாச்சாரி) என்ற மூன்று நூல்கள் மிகச்சிறப்பாக ஓதப்படுகின்றன. இவைகள் முறையே முதல்,வழி, சார்பு நூல்கள் என்று கூறப் பெறும். இம்மூன்று நூல்களுக்கும் பல அறிஞர்கள் உரைகள் எழுதி இருக்கிறார்கள். சிவஞானபோதப் பேருரைக்கு மாபாடியம் என்ற சிறப்புப்பெயர் உண்டு. அதனைச் சிவஞான முனிவர் இயற்றியருளினர். சித்தியாருக்கு ஆறறிஞர்கள்

உரையெழுதி உள்ளார்கள். சிவப்பிரகாசத்திற்கு மதுரை சிவப்பிரகாசர் உரை வகுத்திருக்கிறார். இம்மூன்று பெருநூல்களைத் தவிர மற்றப் பதினொான்றும் குறிப்பிட்ட பகுதிகளைக் கூறும் நூல்கள். இவைகளுக்கும் உரைகள் வகுத்திருக்கிறார்கள். இந்நூல்களை எழுதிய பெரியார்கள் 1. திருவியலூர் உய்யவந்த தேவர் (உந்தியார்) 2. திருக்கடவூர் உய்யவந்த தேவர் (களிற்றுப்படியார்) 3. அருணந்தி (இருபா இருபஃது), 4. மனவாசகம் கடந்தான் (உண்மை விளக்கம்), 5. உமாபதி சிவம் (சிவப்பிரகாசம் திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃ றொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம்) இவ்வெட்டும் சித்தாந்த அட்டகம் எனப்படும்.

இந்நூல்கள் எழுதப்பட்ட காலமும் வரையறுக்கப் பட்டுள்ளது. முதலில் எழுந்தது திருவுந்தியார். அது 1147இல் உய்யவந்தார் இயற்றினார். பிறகு 1177இல் திருக்களிற்றுப் படியாரைக் கடவூர் உய்ய வந்தார் இயற்றினார். இவை இரண்டும் திருமூலர் திருமந்திரத்தைப் பின்பற்றியன. பின்னர் மெய்கண்ட தேவர் மிக அரிய நூலாகிய சிவஞான போதத்தை எழுதினார். இதுவே எல்லாச் சாத்திரங்களிலும் சிறந்தது. பன்னிரண்டே சூத்திரங்களில் முழுச் சித்தாந்தமும் அடங்கப்பட்டது. பிறகு அதனை ஒட்டிச் சித்தியாரும் அதனை ஒட்டிச் சிவப்பிரகாச மும் தோன்றின. உமாபதி சிவம் எட்டு நுல்களை எழுதினார். அவற்றிற் சிறந்தது சிவப்பிரகாசம். சிறியது கொடிக்கவி. இறுதி நூலாயது சங்கற்ப நிராகரணம். கி.பி.1313இல் எழுதப்பெற்றது. இதனாலேயே இந்நூல்களின் கால வரையறைகள் காணப்பெறும். இந்நூல்களுக்கு உரைகள் இன்றிப்பொருள் அறிதல் மிகக் கடினம். உரைகளையும் அக்காலத்தில் தோன்றிய மடாலயங்களின் தம்பிரான்கள் எழுதியுள்ளார்கள். சித்தியாரிலும், சங்கற்ப நிராகரணத்திலும் ஏனைய சமயங்களைக் கூறி மறுதலை செய்யப் -பட்டுள்ளன. இது வடமொழிப் போக்கு என்க.

3. கோட்பாடுகளின் சுருக்கம்:- உலகம் முப்பொருள்களை உடையது. இறைவன் (பதி) உயிர் (பசு) கட்டு (பாசம்) என்ற முப்பொருள்களும் என்றைக்கும் உள்ளவை; இவைகளில் இறைவன் (பதி) இருநிலைகளில் தொழிற்படுகிறான். ஒன்று நிர்க்குணம்; மற்றொன்று சகுணம். எட்டுக்குணங்களை உடையவன்.

இவைகளில் அவன் முற்றிய தன்மை உடையவன். அவன் உலக நாயகன். உயிர்க்கும் நாயகன்: ஐந்து திருத்தொழில்களைப் புரிபவன். ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்கள் இயற்றுவதில் இறைவியோடு பிரியாதிருந்து தொழிற் படுத்துபவன் (அவன் நிமித்தகாரணம், அவள் துணைக் காரணம், மாயை என்றது முதற்காரணம்,) குயவன் சக்கரம் மண்போன்ற வகையில் படைப்பு நேரிடும். இந்தக் காரணவகை உள்ளாக்க வழக்கு (சற்காரிய வாதம்) என்று கூறப்படும். இது மற்ற வாதங்களிலும் வேறுபட்டது. மற்றவை மாயாவாதம், ஏகான்மவாதம் என்பன.

உயிர் என்பது இறைவனைப்போல் என்றும் உள்ளதே. அது பலவாக உள்ளது. அஃது உடல், உறுப்பு, உலகம், ஊண்களைப் (தனு, கரண, புவன, போகங்களைப்) பெற்றுப் பிறப்பு இறப்புக்களில் உழலக்கூடியது. அதற்கு ஐந்து நிலைகள் உண்டு. நனவு (சாக்கிரம்), கனவு (சுவப்பனம்), (சுழுத்தி) உறக்கம் பேருறக்கம் (துரியம்), உயிர்ப்படங்கல் (துரியாதீதம்) என்பன. இந்த நிலைகளில் அது 96 தத்துவங்களில் க்ட்டுப்பட்டுள்ளது. உயிர் பசு எனப்படுவதில் எப்போதும் கட்டப்பட்ட நிலையில் உள்ளது. இந்தக் கட்டிலிருந்து அது நீங்குவதே வீடுபேறு. இனிக் கட்டு என்பது பாசம் அல்லது தளை. தளை மூவகைப்படும். ஆணவம், கன்மம், மாயை என்பன. ஆணவம் என்பது உயிரின் துன்ப நிலைக்கு அடிப்படையானது. ஆகவே அது மூலமலம் என்னப்படும். தற்போத மாந்தர் விலங்குகள் இவைகளில்

காணப்படும் உணர்ச்சியே இஃது என்க. மாயை ஆணவச் சார்பால் மதியை மயக்கும் வடிவம். கன்மம் வினைகளின் தொடர்பு அல்லது சங்கிலி. இம்மூன்றும் கட்டு அல்லது களையாகிலும் ஒவ்வொன்றிற்கும் வேறுபாடு உண்டு. இவைகளில் ஆணவம் பிரதிபந்தம் (பகைக்கட்டு) மாயை சம்பந்தம் (துணைக்கட்டு) கன்மம் அனுபந்தம் (சேர்க்கைக் கட்டு) என்னப் படும். இந்தக் கட்டுகள் நீங்கும்போது உயிர் (ஆன்மா) மூன்று நிலைகளில் செல்லும். அவைகளே இருவினை யொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் என்பவை. பிறகு உயிர் சீவன் முத்தனாகும். அப்போது உடலும் போகும்; ஆகில் அது சாயுச்சியம் அடையும். இந்தச் சாதனங்கள் அடைவதற்கு நான்கு வழிகள் உண்டு. சீலம், நோன்பு, செறிவு, அறிவு (சரியை, கிரியை, யோகம், ஞானம்) என்பன. இந் நான்கும் அதே பெயரோடு நான்கு உட்பிரிவுகளாக ஏற்படுகின்றன. இந்தப் பதினாறு படிகளும் சோபான முறையில் அமைந்திருப்பன. உயிர்நிலை, உயிர்வினை, இறையருள் முதலிய நிலைகள் விளக்கப்பட்டிருக்கின்றன. ஐந்தெழுத்து, அதனை ஓதும் முறை, அதனால் உயிர் பெறும் பலன், இவைகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. உயிர் விடுதலை பெறுவதற்கு ஆசிரியன் உதவி இன்றியமையாதது. அதைப் பெறக்கூடிய வகைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இவைகளும் இவற்றின் கணக்கற்ற உட்பிரிவுகளும் இந்த 14 நூல்களில் விரியக் காணலாம்.

உயிர்கள் தகுதிக்குத் தக்கவாறு ஒருமலம் (விஞ்ஞானகலர்) இருமலம் (பிரளயாகலர்) மும்மலம் (சகலர்) கொண்டவராகப் பிரிக்கப்படுவார்கள். இவர்களுக்குத் தக்கபடி இறைவனாகிய ஆசாரியன் உபதேசம் செய்வான்.

4. சிவஞான போதம் (மெய்கண்ட தேவர்) 12-ஆம் நூற்றாண்டு. சைவ சித்தாந்தத்தைப் பன்னிரண்டு கேள்விகளில் அடக்கி ஒவ்வொன்றுக்கும் ஒவ் வொரு சிறிய

சூத்திரம் விடையாக அமைத்து வெளியிட்ட ஒரு சிறந்த இலக்கண நூல். இதனை அவ்வாசிரியரே தம் மாணாக்கர்களுக்குப் போதித்தார். அவராலே நேரில் போதிக்கப் பெற்றவர்கள் 49 பேர். அவர்களில் மூத்தவர் தம் தகப்பனாரின் குலகுருவான அருணந்தி சிவம். அவரே சிவஞான போதத்திற்கு ஒரு விரிவுரைபோலச் சித்தியாரை அருளியிருக்கிறார். மற்றொரு மாணவர் மனவாசகங் கடந்தார். அவர் உண்மை விளக்கத்தை எழுதினார். மற்ற எல்லா ஆசிரியர்களும் மெய்கண்ட தேவரைத் தெய்வீக ஆசிரியனாகவே போற்றி ஏனைய நூல்களை எழுதியிருக்கிறார்கள்.

அவைகள் மெய்கண்ட சாத்திரங்களில் சேர்க்கப்பட்டு எல்லாச் சைவப் பெரியார்களாலேயும் படிக்கப்படுவதால் மெய்கண்டாருடைய பெருமை அளவிடற்பாலதன்று. சிவஞானபோதம் வடமொழி ஆங்கிலம் முதலிய பலமொழிகளிலும் மொழி பெயர்த்து எழுதப் பெற்று ஆங்கிலர்களாலும் விவிலியப் பாதிரிமார்களாலும் போற்றப்பட்டு வருகின்றது. இதனுடைய கொள்கைகளை விரிப்பாம்:

இனி, சிவஞானபோதம் 12 சூத்திரங்களும் 40 அடிகளுமே கொண்டது. அகவற்பாவினால் சுருங்கிய அளவில் எழுதப்பெற்றது. ஒருநாட்டு மக்கள் கொண்ட மெய்ஞ்ஞானத்தை இத்துணைச் சுருங்கிய அளவில் சொன்னது வேறெந்த நாட்டிலும் இல்லை. இதில் பிற மதக் கண்டனம் சிறிதுமில்லை. தள்ளுவனவற்றைக் கூறாது, கொள்ளுவனவற்றை மட்டும் கூறுகிறது. இதில் சடங்கு புராணம் ஏதுமில்லை, தத்துவம் மட்டும் உண்டு. முதன் முதலில் சைவ சித்தாந்தத்திற்கு ஏற்பட்ட தத்துவநூல் இதுவே ஆகும். சித்தாந்தக் கரும்பைப் பிழிந்து சாறாக இந்நூலை மெய்கண்டார் தந்தார்.

பாகுபாடு

சிவஞானபோதம்

- பொது
  - பிரமாண இயல் — 1, 2, 3,
  - இலக்கண இயல் — 4,5,6
- சிறப்பு
  - சாதன இயல் — 7,8,9
  - பயனியல் — 10, 11, 12

சூத்திரங்கள்

ஆசிரியர் பன்னிரண்டு கேள்விகள் கேட்டார். அக்கேள்விகளிலேயே விடையும் தொனிக்க வைத்திருக்கிறார். இக்கேள்விகளை நாமும் கேட்கிறோம். நமது முன்னோரும் கேட்டிருக்கிறார்கள். விடைகளை நாம் நன்கு உணருவதில்லை. இக்கேள்விகளும் விடைகளும் சித்தாந்தம் முழுவதும் உணர்த்துகின்றன.

A.- இருக்கிற பொருள்கள் எவை ?

1. முதல்வன் இருக்கிறானா. ?
2. இருக்கிறான் எனில், அவனை அறியவொட்டாமல் தடுக்கும் தடை எது ?
3. 'நானும்' இருக்கிறேன் அல்லவா ?

B.-அப்பொருள்கள் எப்படிப்பட்டவை ?

4. நான் - யார், என்போலியர் எப்படிப்பட்டவர்கள் ?
5. உள்ளவற்றை அறிய ஒட்டாமல் தடுக்கும் தடையின் குணம் யாது ?
6. முதல்வனுடைய குணங்கள் எவை ?

C.- அறிவது யார், எவரால், எப்படி ?

7. யார் யார் எவரை அறிவோம் ?
8. நான் எவரால் அறிவேன் ?
9. நான் எவ்வாறு அறிவேன் ?

D.- அறிந்தபின் என்ன பெறுவேன்?

10. என்னைக் கட்டியிருக்கும் கட்டு ஒழியும் அல்லவா?

11. பிறகு முதல்வனை அறிவேனா?

12. முதல்வனை அடைந்தபின் நான் என்ன செய்வேன்?

இந்தப் பன்னிரண்டு கேள்விகள் சாதாரண சொற்களில் எவரும் அறியும்படி எழுதப்பட்டுள்ளன. இவைகளுக்குச் சிவஞானபோதப் பதிப்புக்களில் உள்ள சொற்களை எடுத்து எழுதுவோம். அவைகள் வட மொழியென்று அஞ்ச வேண்டியதில்லை.

பாகுபாடுகள்

I. பொது அதிகாரம்

A. பிரமாண இயல்

1. பதி உண்மை (இறை)
2. பாச உண்மை (தடை)
3. பசு உண்மை (உயிர்)

B. இலக்கண இயல்

4. பசு இலக்கணம் (உயிர்)
5. பாச இலக்கணம் (தடை)
6. பதி இலக்கணம் (இறை)

II. சிறப்பதிகாரம்

C. - சாதன இயல்

7. சாதன இயல்பு
8. சாதனம் இன்னது என்பது
9. சாதிக்கும் முறை

D. பயன் இயல்

10. பாச நீக்கம்
11. சிவப்பேறு
12. சீவன்முத்தன் செயல்

மேலே கூறியுள்ள கருத்துக்கள் பகுத்தறிவுள்ள எவனும் ஒத்துக்கொள்ளக் கூடியவையே. அடிப்படையான உண்மைகளையே அவை கூறுகின்றன. ஆனால் இவைகளுக்கு உரை எழுதினவர்கள் தம் தம் கருத்துக்களை உட்புகுத்தி உள்ளார்கள். உரையில்லாமலே படித்து ஆராய்வது நல்லது. இவ்வண்ணமே வடமொழி வேதாந்த சூத்திரங்களுக்கும் கீதைக்கும் பற்பலர் பற்பல முறையாக உரை வகுத்தனர். அந்த வகையில் வடமொழியில் அனேக வேற்றுமைக் கருத்துக்கள்

தோன்றின. அப்படியன்றிப் பொது மெய்ஞ்ஞானத்தைக் கூறும் சிவஞானபோதத்தை உள்ளபடி அறிதலே அறிஞர்களின் கடன். சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கருத்துத் தெரிய வேண்டுமாயின் சிவஞானபோதத்தின் முதல் நூலையே படித்தறிதல் வேண்டும். இனி இதனை வடமொழி மொழிபெயர்ப்பென்று சொல்வார்கள். இராமாயணம் தமிழில் இருக்கின்றது. ஆகவே இராமாயணம் முதன் முதலில் தமிழில் எழுதப்பட்டது என்று கூறலாமா? எத்துணையோ தமிழ் நூற்களை வடமொழியில் தற்போது எழுதியுள்ளார்கள். ஆகவே அவைகள் எல்லாம் வடமொழியிலிருந்து வந்தவைகள் என்றால் அதில் பொருள் இல்லை. இந்த மொழிப்பற்றை ஒதுக்கி விடவேண்டும்.

5. சிவஞான சித்தியார்: (அருணந்திசிவம் 12ஆம் நூற்றாண்டு) மெய்கண்ட தேவரின் சீடர் அருணந்தி சிவாசாரியர் தம் ஆசிரியர் இயற்றிய சிவஞான போதத் திற்கு வழி நூலாக இந்தச் சிவஞான சித்தியாரை இயற்றினார். இந்நூல் சிவஞானபோதத்திற்குச் செய்யுள் நடையில் ஓர் உரைநூல், என்றால் மிகையன்று. அருணந்திசிவம் ஆகமங்களை நன்கு படித்தவர். அவருக்குச் சகலாகம பண்டிதர் என்ற விருதும் உண்டு. ஆகவே தாம் படித்த ஆகமங்களிலிருந்து கருத்துக்களை எடுத்து முதனூலாகிய சிவஞானபோதத்திற்கு மேற் கோளாக அவைகளை வைத்து இந்நூலை ஆக்கி உள்ளார். சிவஞானபோதம் போல இந்நூலில் 12 சூத்திரங்கள் உண்டு. ஆனால் கருத்துக்களை மிகவும் விரித்துள்ளார். மொத்தம் செய்யுள் 328. சில இடங்களில் வெகு விரிவாக இருக்கும். 8ஆம் சூத்திரத்தில் ஆசிரியன் பெருமை கூறும்போது வேடர் கையில் சிக்கின அரச குமாரன் கதையை உவமிக்கும் போது 'மன்னவன் தன்மகன்' என்ற செய்யுளில் வெகு தெளிவாகக் குரு உபதேசத்தைக் கூறுகிறார். மேலும் நூலுக்குப் பாயிரமாகக் கூறும் அளவைகளின் இலக்கணம் தான் கொண்ட கருத்துக்களை நிரூபிக்கும் வகைக்கு ஏற்ற சான்று என்னும்

வகையில் குறித்திருக்கின்றார். முப்பொருள் உண்டு என்பதற்கு இந்த அளவைகள் இன்றியமையாதன. இவை முதனூலில் இல்லை.

மேலும் சிவஞானசித்தியார் இரண்டு பகுதிகளாக அமைந்துள்ளது. வழிநூலாக ஏற்பட்டது சுபக்கம் என்பது மட்டும். மற்றொருபகுதி பரபக்கம் என்பது. இதில் 14 பாகங்கள் கொண்ட 301 செய்யுட்கள் உள்ளன. ஒவ்வொரு பாகத்திலும் மதம் மதமறுதலை என்ற இரண்டு பகுதிகள் உள்ளன. அஃதாவது சுபக்கத்தில் சைவ சித்தாந்தத்தின் கோட்பாடுகளை உணர்த்திய ஆசிரியர் பரபக்கத்தில் பிறமதங்களை எடுத்துக்கூறி அவற்றின் கொள்கைகளை விரித்து அவைகளை மறுதலித்துக் காரணங்களுடன் மறுப்பு எழுதியுள்ளார். இந்த மறுதலைகளில் உலகாயதன் முதற்கொண்டு பாஞ்சராத்திரன் வரையில் 14 சமய பேதங்களையும் கண்டிக்கிறார். அந்தக்காலத்தில் தம்மதம் நிச்சயித்துக் கொண்டு பிறமதங்களைக் கண்டனம் செய்வது வழக்கம். சங்கரர், இராமானுசர், மத்துவர் முதலியோரும் இந்த முறையில் ஈடுபட்டுள்ளனர். அதே முறையில் சமண பௌத்தர்களும் நீலகேசி, மணிமேகலை முதலிய நூல்களில் ஆண்டு இருக்கிறார்கள். அருணந்தி சிவம் ஆகமங்களில் வல்லாரானபடியால் அந்த முறைகளை இந்த நூலில் எடுத்தாண்டு இருக்கிறார் என்க.

இனி, பரபக்கத்தில் மறுக்கப்படும் சமயபேதங்களாவன:

1.உலகாயதன்	8.பட்டாசாரியன்
2.சௌந்திராந்திகன்	9. பிரபாகரன்
3. யோகாசாரன்	10. சத்தப்பிரமவாதி
4. மாத்தியமிகன்	11. மாயாவாதி
5. வைபாடிகன்	12. பாற்கரியன்
6. நிகண்டவாதி	13.நிரீச்சுரசாங்கியன்
7.ஆசீவகன்	14.பாஞ்சராத்திரி

6. சிவப்பிரகாசம்:- (உமாபதிசிவம் 13ஆம் நூற்றாண்டு) இது சிவஞானபோதத்துக்குச் சார்புநூல் ஆகும். அருணந்தி சீடர் மறைஞான சம்பந்தர். இவர் சீடர் உமாபதி எழுதியது. இதில் 12 சூத்திரங்களுள்ளிட்டு 100 செய்யுட்கள் உண்டு. இதில் உள்ள ஒவ்வொரு பாடலுக்கும் 'கொளு' ஒவ்வொன்று உண்டு. அது அந்தப் பாடலின் சாரம். அதனை ஆக்கியவர் காவை அம்பலவாணத் தம்பிரான். இதன் பாயிரத்தில் அவையடக்கத்தில் ஆசிரியர் மிகத் தைரியத்துடன் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கின்றார். 'தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா; இன்று தோன்றிய நூல் எனும் எவையும் தீதாகா. அந்நாள்வரை தொன்மைக்கே மதிப்பு இருந்தது. அதை எதிர்த்துப் பேசுவார் இல்லை. புதிதாகச் சொல்ல அஞ்சுவர். இவரே வெகு தீரத்துடன் இக்கருத்தை வெளியிட்டார்.

7. மற்ற நூல்கள் :- (1) திருவுந்தியார் மணிவாசகர் நூலைச் செய்யுளில் பின்பற்றியும் திருமந்திரத்தைக் கருத்தினில் பின்பற்றியும் உள்ளது. இது 45 கலித்தாழிசைகளைக் கொண்டது. (2) திருக்களிற்றுப்படியார் வெண்பாக்கள் 100 கொண்டது. இவை இரண்டும் 12 நூற்றாண்டு, போதத்திற்கு முன்னவை. (3) இருபா இருபஃது. அருணந்திசிவம் தம் ஆசிரியர் மெய்கண்டாருக்கு அளித்த நன்றிபாராட்டு. (4) உண்மை விளக்கம் மனவாசகம் கடந்தார் மெய்கண்டாருக்கு அளித்த நன்றிபாராட்டல். ஆனால் சித்தாந்தக் கருத்துக்களில் சில கூறுமுகத்தாற் பாடியது. (5) திருவருட் பயன், 10 அதிகாரத்தில் பப்பத்துக் குறளாக 100 கொண்டது; சித்தாந்தக் கருத்துக்களைக் கூறுவது. (6) வினாவெண்பா தம் குருசம்பந்தரை விளித்துக் கூறிய வெண்பாக்கள். (?) போற்றிப் பஃறொடை (கலி வெண்பா) கருத்துக்களை வியந்தது. (8) கொடிக்கவி 4 பாக்களில் சமயக்கொடி கட்டினது. (9) நெஞ்சு விடுதூது, (கலிவெண்பா) தன் விண்ணப்பத்தை ஆசிரியனுக்கு அனுப்பியது. இதில் (தசாங்கம்) பத்துறுப்புக் கூறப்படுகிறது. எல்லாம்

உவமையே. (10) உண்மைநெறி விளக்கம் தத்துவநாதர் பாடலில் தசகாரியங் கூறினது. இறுதியில் (11) சங்கற்ப நிராகரணம் என்பதில் உமாபதிசிவம், சித்தியார், பரபக்கத்தில் விட்டதைக் கூறி மறுக்கிறார். இவைகளோடு சீகாழி சிற்றம்பலநாடிகள் அருளிய (12) துகளறு போதத்தைச் (100) சேர்த்துவதுமுண்டு.

சாத்திரங்களின் விவரங்கள்

எண்	நூல்	ஆசிரியர்	காலம் கி.பி.	பிரிவு	பாடல்	வகை
1	உந்தியார்	வியலூர் உய்யவந்தார்	1147	...	45	கலித்தாழிசை
2	களிற்றுப் படியார்	கடவூர் உய்ய வந்தார்	1177	...	100	வெண்பா
3	சிவஞான போதம்	மெய்கண்டார்	1225	...	12 81	அகவல் வெண்பா
4	சித்தியார் (a) சுபக்கம் (b) பரபக்கம்	அருணந்தி அருணந்தி ,,	1225 1225 1225	... 12 14	... 328 301	விருத்தம் பலவகை ...
5	இருபா இருபஃது	,,	,,	...	20	அகவல் 10 வெண்பா 10
6	உண்மை விளக்கம்	மனவாசகம் கடந்தார்	1250	...	53	வெண்பா

7	உண்மைநெறி விளக்கம்	தத்துவநாதர்	....	....	6	விருத்தம்
8	துகளறு போதம்	சிற்றம்பல நாடிகள்	....	.....	101	வெண்பா
			(b) சித்தாந்த அட்டகம்			
9	சிவப்பிரகாசம்	உமாபதிசிவம்	1300	12	100	விருத்த
10	திருவருட்பயன்	உமாபதிசிவம்	1300	10	100	குறள்
11	வினா வெண்பா	உமாபதிசிவம்	1300	....	....	வெண்பா
12	போற்றிப் பஃறொடை	உமாபதிசிவம்	1300	....	...	கலிவெண்பா
13	கொடிக்கவி	உமாபதிசிவம்	1300	....	4	கட்டளைக் கலித்துறை 1 வெண்பா 3
14	நெஞ்சுவிடு தூது	உமாபதிசிவம்	1300	....	...	கலிவெண்பா
15	சங்கற்ப நிராகரணம்	உமாபதிசிவம்	1313	14	....	அகவல்

திருமுறைகள் 8

எண்	நூல்	ஆசிரியர்	காலம்	பதிகம்	செய்யுள்	பா
I	தேவாரம்	சம்பந்தர்	7 நூ.			பலவகை விருத்தம்.
II	தேவாரம்	சம்பந்தர்	7 நூ.			
III	தேவாரம்	சம்பந்தர்	7 நூ.	383	4213	
IV	தேவாரம்	அப்பர்	7 நூ.			பலவகை விருத்தம்.
V	தேவாரம்	அப்பர்	7 நூ.			
VI	தேவாரம்	அப்பர்	7 நூ.	312	3066	
VII	தேவாரம்	சுந்தரர்	9 நூ.	100	1026	பலவகை விருத்தம்.
VIII	திருவாசகம்	வாதவூரார்	10 நூ. தொகுத்தது.	51	658	பலவகை விருத்தம்.
	திருக்கோவை	வாதவூரார்	10 நூ.	1	400	கட்டளைக்கலித்துறை
				52	1058	
மொத்தம் 8		4	7-10 நூ.	847	9363	

திருமுறைகள் - 9 முதல் 12 வரை

IX	திருவிசைப்பா	திருமாளிகைத் தேவர் 9	9-10 நூ	28	287	விருத்தம்
	திருப்பல்லாண்டு	சேந்தனார்	9-10 நூ	1	13	விருத்தம்
X	திருமந்திரம்	திருமூலர்	1 நூ.	9	3047	விருத்தம்
XI	திருமுறை	இறையனார் மூலம் 12	1-10 நூ.	41	1388	பலவகை
XII	பெரிய புராணம்	சேக்கிழார்	12 நூ.	13+71	4286	விருத்தம்
	5	24		150	9021	

VI. மடாலயப் பணிகள்

1. காலநிலை:- *13, 14*ஆம் நூற்றாண்டுகளின் இடையில் பாண்டியர்களுக்குள் தாயாதிச் சண்டை தோன்றி முகம்மதியர்களைத் துணைக்கு அழைத்தார்கள். அவர்கள் துணைக்காக வந்து இருதரத்தாரையும் தொலைத்துத் தாங்களே நாட்டைக் கவர்ந்துகொண்டார்கள். மதுரை சிலநாள் முகம்மதியர் ஆட்சிக்குள் வருந்திற்று. அதனைக்கண்ட கர்நாடகப் பேரரசன் சேனையின் உதவிகொண்டு முகம்மதியர்களைத் துரத்திவிட்டான். தமிழ்நாடு முழுவதும் விசயநகரத்தார் ஆட்சிக்கு உட்பட்டது. அது முதல் தமிழர் தன்னரசு போய்விட்டது. விசய நகரத்தார்கள் பிரதிநிதிகளான நாயக்கத் தலைவர் மூலம் தமிழ்நாடு ஆளப்பட்டது. அரசியலில் குழப்பம்

ஏற்பட்டதே ஒழியச் சமயநிலையில் குழப்பம் யாதொன்றும் தோன்றவில்லை. ஏனெனில் சித்தாந்த நூல்களை வகுத்த பேரறிஞர்கள் தங்கள் சீடபரம்பரையைத் தோற்றுவித்தார்கள். அந்தச் சீட பரம்பரைகள் மடாலயங்களாகத் திகழ்ந்தன. (பரிணமித்தன.) அம்மடாலயத்து ஆதீனத்துத் தலைவர்களும் அவர்களுடைய மாணாக்கர்களும் சைவசமயப் பிர சாரத்தில் ஈடுபட்டுச் சமயத்தைக் காப்பாற்றினார்கள்.

அவ்வாறு அந்த அரசியல் குழப்பக் காலத்தில் தோன்றிய சைவ மடாலயங்கள் பதினெட்டு என்பர். அவைகளில் சிறந்தவை திருவாவடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம் என்பவை. தருமபுரத்திலிருந்து இளையாகத் தோன்றியது திருப்பனந்தாள். இம் மூன்றுமே இன்றைக்கும் சிறந்து விளங்குகின்றன. இவை தவிர மதுரை சம்பந்தர் ஆதீனம், குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம், வேளாக்குறிச்சி மடம், செங்கோல் மடம் முதலியனவும் உள்ளன. இம்மடங்களில் சில சிறப்பாகவும் தாழ்ந்தும் மற்றவை ஆட்சி புரிந்து வந்தன. இம்மடங்களே தமிழையும் சைவத்தையும் காப்பாற்றும் வகையில் அநேக துறவிகளைத் தம் ஆதீனங்களுக்குள் வைத்து ஆதரித்தன. அப்படிப்பட்ட துறவிகள் கணக்கற்ற சைவ நூல்களை எழுதினார்கள். சித்தாந்தக் கொள்கைகளைப் பல வகையிலும் எழுதி மக்களுக்குப் போதித்தார்கள். சைவப்புலமை இந்த வகையில் நிலைநின்றது.

மடாலயங்களின் சார்பில் ஆராயப்பட்ட நூல்கள் மூவகையாக அமைந்தன. சித்தாந்தக் கொள்கைகளை எளிய நடையில் செய்யுள்களாக ஆக்கின. இரண்டாவது முந்திய சாத்திரங்களை உரை நடையில் விளக்கிச் சிற்றுரைகளாகவும் பேருரைகளாகவும் வெளியிட்டன. மூன்றாவதாகச் சைவக்கருத்துக்களை அரிய பாடல்களில் அமைத்துப் பிரபந்தங்களாக வெளியிட்டன.

இந்த மூன்று வகைகளில் சைவமடங்கள் அநேக நூல்களை ஆக்கின. மேலும் மடங்களுக்கு வரும் மாணவர்களுக்குச் சமயக்கல்வி அளிப்பதும், பொதுமக்களுக்குச் சமய உபதேசம், தீக்கை முதலியவைகளைச் செய்வதும், திருவிழாக்களில் சமயச் சடங்குகளைக்கொண்டு சேவை செய்விப்பதும் தம் பிரசாரத் தொழிலாகத் தலைவர்கள் பணி செய்தார்கள். இந்த முறைகளைச் சிறிது விளக்கலாம்:-

2. பண்டார சாத்திரங்கள் :- திருவாவடுதுறை ஆதீனத்தில் பதினான்கு சித்தாந்த சாத்திரங்களை ஒட்டிப் பதினான்கு பண்டார சாத்திரங்கள் எழுதப்பட்டன.

1. தச காரியம்	தெக்கணா மூர்த்தி தேசிகர்
2. தச காரியம்	ஈசான தேசிகர்
3. தச காரியம்	அம்பலவாண தேசிகர்
4. சன்மார்க்க சித்தியார்	அம்பலவாண தேசிகர்
5. சிவசிரமத்தெளிவு	அம்பலவாண தேசிகர்
6. சித்தாந்தப் பஃறொடை	அம்பலவாண தேசிகர்
7. சித்தாந்த சிகாமணி	அம்பலவாண தேசிகர்
8. உபயநிட்டை வெண்பா	அம்பலவாண தேசிகர்
9. உபதேச வெண்பா	அம்பலவாண தேசிகர்
10. நிட்டை விளக்கம்	அம்பலவாண தேசிகர்
11. அதிசய மாலை	அம்பலவாண தேசிகர்
12.நமச்சிவாய மாலை	அம்பலவாண தேசிகர்
13. உபதேச பஃறொடை	தெக்கணா மூர்த்தி தேசிகர்
14. பஞ்சாட்சரப் பஃறொடை	பின்வேலப்ப தேசிகர்

இவற்றுள் தசகாரியம் என்பது தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவ யோகம், சிவபோகம் என்ற பத்துக் காரியங்கள். இவை வீடெய்தும் உயிர்கள் அறியற்பாலன.

தருமபுர ஆதீனத்தில் பண்டார சாத்திரங்கள் என்ற தலைப்பில் வேறுநூல்கள் எழுதப்பட்டன.

1.சிவபோக சாரம் (சாத்திரம்)

2. சொக்கநாத வெண்பா தோத்திரம்

3. முத்தி நிச்சயம்.

4.திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல்.

5. சோடாகலப் பிரசாதக சாத்திரம்,சட்டம்.

6. சொக்கநாதக் கலித்துறை (தோத்திரம்)

7.பண்டாரக் கலித்துறை (தோத்திரம்), ஞானப் பிரகாசமாலை.

8.நவரத்தினமாலை. (தோத்திரம்)

மற்ற நூல்கள்

1. ஞானப்பிரகாசர் தசகாரியம்.

2. போதாந்த சித்தியார்.

3. திரிபதாதி ரூபாதி தசகாரியம்.

4. பதிபசு பாசப் பனுவல்.

5. சிவானந்த மாலை.

6. சம்பிராதய தீபம்,

7.ஞானாவரண விளக்கக் குறள்.

8. சித்தாந்த நிச்சயம்.

9. சதமணிக்கோவை.

10. பரமத சங்கற்ப பரமோபதேசம்.

11. நிராகரணம்.

12. பரமதிமிரபானு

13. சிவானுபோக சாரம்.

14. திரிபதார்த்த தீபம்.

3. மடத்து உரை நூலாசிரியர்கள் :- சித்தாந்த நூல்களுக்கு உரைகள் எழுதிய நூலறிஞர்கள் பலர்

இருந்தனர். அவர்களில் மிகச்சிறந்தவர் சிவஞான முனிவர். அவர் இயற்றிய பெருநூல் சிவஞானமாபாடியம். சிற்றுரை ஒன்றும் இயற்றியுள்ளார்.

நிரம்பவழகிய தேசிகர் சித்தியார் சுபக்கத்திற்கு உரை எழுதினார். திருவருட்பயன் பொழிப்புரை.

திருவொற்றியூர் ஞானப்பிரகாசர் சித்தியார் பர பக்கத்திற்கு உரை வகுத்தார். சங்கற்ப நிராகரணத்துக்கு உரை வகுத்தார்.

தில்லைச் சிற்றம்பலவர் என்ற சிவப்பிரகாசனார் திருஉந்தியார், திருக்களிற்றுப்படியார் உரைகள்.

நமச்சிவாயத் தம்பிரான் இருபா இருபஃது, வினா வெண்பா உரை.

சிவாக்கிர யோகிகள் - சித்தியார் சுபக்கத்திற்கு யாழ்ப்பாணம் (இலங்கை) ஞானப்பிரகாசர் - சித்தியார் சுபக்க உரை.

பாண்டிப் பெருமாள் - சிவஞான போதத்துரை. ஈசான தேசிகர்- சிவஞான போதச் சூரணிக் கொத்து.

சூரியனார் கோவில் சிவாக்கிர யோகிகள்-சித்தியார் சுபக்க உரை. வடமொழிச் சிவஞான போதத்திற்குப் பேருரை, சைவ பரிபாஷை, தத்துவ தரிசனம், சித்தாந்த தீபிகை, வேதாந்த தீபிகை, பாஞ்சராத்திரமத பேரிகை.

4. மடத்துப் புராண ஆசிரியர்கள் :- மடத்தைச் சார்ந்த புலவர்கள் சைவச்சார்பான புராணங்களை எழுதியுள்ளார்கள். அப்புராணங்கள் வடமொழிச் சார்பான புராணங்களும், தல புராணங்களுமாம். இவைகள் சார்பு நூல்கள் எனினும் நேர் மொழிபெயர்ப்புக்களாக இல்லை. தமது அறிவுக்குத்தக்கபடி மாற்றியும் சேர்த்தும் இயற்றி இருக்கிறார்கள். தல புராணங்கள் தலங்களின் சிறப்புக்களை எடுத்து ஓதும் வகையில் எழுந்தன. இவைகள்

பெரும்பாலும் வடமொழி மொழிபெயர்ப்பு எனக் கூறிக்கொண்டபோதிலும் எல்லாம் அத்தலங்களில் வழங்கின கர்ண பரம்பரைகளை ஒட்டிப் பாடப்பட்டன. ஆகவே இவைகளை முதல் நூல்கள் என்று கூறினாலும் தவறு இல்லை. தல புராணங்களின் சம்பிரதாயப்படி வருணனைகளும், பெருமைகளும், கதைகளும் பாடப்பட்டுள்ளன. அநேகமாக இவைகள் உயர்வு நவிற்சி அணிகளாகவே அமைந்திருக்கின்றன. ஆக இவைகள் கவிஞர்களின் புலமை தோற்றுவிக்கும் முறையில் எழுந்தவை எனக் கூறலாம்.

5. திருவாவடுதுறை :- திருப்பறியலூர் புராணம் - வேலப்ப தேசிகர்.

சிவஞான முனிவர் - காஞ்சிப்புராணம்.

கடவுள் மாமுனிவர் - திருவாதவூரடிகள் புராணம்.

சிதம்பரநாத முனிவர் - திருப்பாதிரிப்புலியூர்ப்புராணம்

கச்சியப்ப முனிவர் - தணிகை, பூவாளூர், பேரூர். திருவானைக்கா, காஞ்சிப் புராணங்கள் (பிற்பகுதி) மற்றும் விநாயக புராணம்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை - கணக்கற்ற தலபுராணங்கள்.

6. தருமபுரம் :- கந்த புராணச் சுருக்கம் : சம்பந்த சரணாலயர். திருமுல்லைவாயிற் புராணம்: வடுகனாத தேசிகர்.

VII. மடாலயப் பிரபந்தங்கள்

குமரகுருபரர் தருமபுரத்துத் துறவியாக இருந்து காசிவரை சென்று அங்கு ஒரு மடாலயமும் பின் திருப் பனந்தாளில் மடமும் நிறுவியவர் ஆவர். சைவப் புலவர்களில் மிகச் சிறந்தவர். அவர்கள் பாடிய நூல்கள் திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா, கயிலைக் கலம்பகம், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், திருவாரூர் நான்மணிமாலை, முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்,

சிதம்பரமும்மணிக்கோவை, செய்யுட்கோவை, இரட்டை மணிமாலை, பண்டாரமும்மணிக்கோவை (சைவ சித் தாந்தம்), காசிக் கலம்பகம், சகலகலாவல்லி மாலை முதலிய மிகச் சிறந்த நூல்கள்.

ஈசான தேசிகர் சிவஞானபோதச் சூரணிக் கொத்து இயற்றினார். வடமொழிப் பற்றுடையவர். தருமபுரம் சிதம்பர நாத முனிவர் - நித்திய கன்மநெறி.

சிவஞான முனிவர் - சோமேசர் முதுமொழி வெண்பா.

கச்சியப்ப முனிவர் - தணிகையாற்றுப்படை.

தொ.சுப்பிரமணிய முனிவர் - துறைசைக்கோவை.

கந்தசாமிப் புலவர் - திருப்பூவணநாதர் உலா.

கந்தப்பையர் - தணிகைப் பிரபந்தங்கள்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளை - எண்ணற்ற பிரபந்தங்கள்.

வீரசைவப் புலவர்கள்:- வீர சைவப் புலமை தனியாக வளர்ந்தோங்கியது. 16ஆம் நூற்றாண்டு முதல் நாளிது வரை வீரசைவம் தமிழுக்கும் சைவத்திற்கும் மிக்க தொண்டு செய்திருக்கிறது. சிவப்பிரகாச சுவாமிகள் முதற்கொண்டு பல புலவர்கள் தோன்றிப் பலவகை நூல்கள் எழுதி இருக்கின்றனர். மடங்களும் பல தோன்றின. அவற்றில் சிறப்பானவை:

1.மயிலம், 2. துறையூர், 3. விருத்தாசலம், 4. திருவண்ணாமலை, 5. பேரூர் சாந்தலிங்கர், 6.போரூர் சிதம்பர சுவாமிகள், 7. கும்பகோணம் சாரங்கதேவர் மடம் முதலியன.

புலவர்களும்	**நூல்களும்**
1.சிவப்பிரகாசர்	பிரபுலிங்க லீலை முதலியன

2. சாந்தலிங்கர்	கொலை மறுத்தல், வைராக்கிய தீபம், வைராக்கிய சதகம், அவிரோதவுந்தியார்
3. குமாரதேவர்	மகாராஜா துறவு
4. சிதம்பர சுவாமிகள்	போரூர்ச் சந்நிதி முறை
5. வேலைய சுவாமிகள்	சீகாளத்தி புராணம்
6. கருணைப் பிரகாசர்	சீகாளத்தி புராணம்
7. சென்னமல்லையர்	சிவசிவ வெண்பா
8. கந்தப்பையர்	தணிகைச் சந்நிதிமுறை
9. சரவணப் பெருமாளையர்	களத்தூர்ப் புராணம், ஆத்திசூடிப் புராணம்
10. விசாகப் பெருமாளையர்	வினாவிடை
11. ஞானியார் அடிகள்	அரிய சொற்பொழிவுகள்

VIII. தனியார் நூல்கள்

1. காலநிலை:- *15, 16, 17, 18*ஆம் நூற்றாண்டுகளில் தமிழ்நாடு இருந்த நிலையை நன்கு அறிவோம். தன்னரசு போய்விட்டது. தமிழையும் சைவத்தையும், அரசாங்கத்தார் ஆதரிக்கவில்லை. கல்விச்சாலைகளும் கிடையா. மடாலயங்களைத் தவிர வேறு ஆதரவு தருபவர்கள் நாட்டில் இல்லை. ஆகவே மடாலயங்களில் தமிழும் சைவமும் செழித்தன. அங்குச் சென்று தான் மாணவர்கள் அறிவு பெற்றனர். ஆனால் அங்கு சென்று தமிழைக்கற்ற மாணவர்கள் பலரும் வெளியே வந்து தனியாகவே கல்விச்சாலைகளை நடத்தி வந்தார்கள். அவைகள் மிக எளிய நடையில் இருந்தன. தமிழைக் கற்றவர்கள் வாளா இரார் அல்லவா? அவர்கள் புலமை அவர்களை வாளா இருக்க விடாது. பல அறிஞர்கள் தன்னந்தனியே பிறர் உதவியின்றித் தமிழ் நூல்கள் எழுதினார்கள். சைவ

நூல்களும் எழுதினார்கள். 17, 18, நூற்றாண்டுகளில் இவர்களுக்குக் குறுநில மன்னர்களான பாளையக்காரர்களின் ஆதரவும் கிடைத்தது. சில பாளையக்காரர்கள் தமிழ்ப்பற்றுக் கொண்டவர்களாகவும் இருந்தார்கள். ஆனால் அவர்கள் பெரும்பாலும் சிற்றின்பங்களையே விரும்பினார்கள். ஆகவே காதல், குறம், பள்ளு, விலாசம், ஊசல் முதலிய பிரபந்த நூல்கள் தோன்றின. அவைகளில் சைவ நூல்களைப்பற்றி மட்டும் இங்கே சுருக்கமாகக் குறிப்போம்:

தனியார் நூல்களில் கந்த புராணம் மிகச்சிறந்த நூல். அது நடை, அழகு, யாப்பு முதலியவை பெற்றுச் சைவக் கொள்கைகளை மிகத்தெளிவாகக் கூறுவது. கதை மட்டும் வடநூல்; கருத்து முற்றும் தென் நாட்டினது. சமயமுறை, இரசவாதத்தால் ஏமாறுவது முதலிய உலகியல் செய்திகள் மிக உருக்கமாக உள்ளன. சமயத்தின் பேரால் மக்கள் வஞ்சிக்கப்பட்டதைக் கண்டிக்கிறது. புலம்பல் உணர்ச்சி ததும்பியது. கச்சியப்ப சிவாச்சாரியாரின் வாக்கு மிக மென்மையும் பெருமையும் கொண்டது. ஒட்டக் கூத்தர், தக்கயாகப்பரணி என்ற மிகச் சிறந்த சைவ நூலை இயற்றினார். ஔவையார் ஆத்திசூடி முதலிய நீதி நூல்களோடு குறளில் சமயக் கொள்கைகளைக் கூறுகிறார்.

2. சமய புராணங்கள் :- அதிவீரராமன் - கூர்ம புராணம், காசிக்காண்டம், இலிங்கபுராணம், மாக புராணம்

3. தல புராணங்கள்:- 16ஆம் நூற்றாண்டு. பரஞ் சோதிமுனிவர் திருவிளையாடற்புராணம், சேது புராணம் - நிரம்ப அழகிய தேசிகர், 17ஆம் நூற்றாண்டு. சைவ எல்லப்ப நாவலர் செவ்வந்திப் புராணம், திருவெண்காடு, செங்காட்டங்குடி, திருவிரிஞ்சை விநாயகர், திருக்கழுக்குன்றப் புராணம்.

துதி நூல்கள் முதலிய பிரபந்தங்கள்

15 ஆம் நூற்றாண்டு:

1. காளமேகப் புலவர் - திருவானைக்கா உலா பரப்பிரம்ம விளக்கம், தனிப்பாடல்கள் நகைச்சுவை மிக்கன.

2. இரட்டையர் - திருவாமாத்தூர்க் கலம்பகம், தில்லைக் கலம்பகம், ஏகாம்பரநாதர் திரு உலா.

3. அருணகிரி நாதர் - திருப்புகழ், கந்தர் அலங் காரம், கந்தர் அநுபூதி, கந்தர் அந்தாதி, திருவகுப்பு மிகப்புகழ் பெற்றவை.

16 ஆம் நூற்றாண்டு

1. மறைஞான சம்பந்தர்	சிவதருமோத்திரம்
2. அனதாரியப்பர்	சுந்தர பாண்டியம்
3. அதிவீரராம பாண்டியன்	நைடதம், குட்டித் திருவாசகம் அல்லது கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி
4. வரதுங்கராம பாண்டியன்	பிரமோத்திர காண்டம்
5. குகை நமச்சிவாயர்	அருணகிரி யந்தாதி
6. குரு நமச்சிவாயர்	சிதம்பரவெண்பா, அண்ணாமலை வெண்பா, பரம ரகசிய மாலை
7. இரேவண சித்தர்	சிவஞான தீபம்
8. ஆறுமுக சுவாமிகள்	நிட்டாநுபூதி.

17 ஆம் நூற்றாண்டு

சைவ எல்லப்ப நாவலர் - அருணைக் கலம்பகம்

சர்க்கரைப் புலவர் - திருச்செந்தூர்க் கோவை

அந்தககக்கவி வீரராகவர் - சேயூர் முருகன் பிள்ளைத்
தமிழ், சேயூர்க் கலம்பகம்,
திருவா ரூருலா,
கழுக்குன்றமாலை.

18 ஆம் நூற்றாண்டு

கண்ணுடைய வள்ளல் - ஒழிவில் ஒடுக்கம்
மதுரகவிராயர் - திருக்கச்சூர் நொண்டி நாடகம்
தாயுமான சுவாமிகள் - பாடல் திரட்டு
திரி கூடராசப்பர் - குற்றாலக் குறவஞ்சி
ஒப்பிலா மணிப்புலவர் - சிவ ரகசியம்
அருணாசலக் கவிராயர்- சீகாழிக் கோவை
அபிராமி பட்டர் - அபிராமி அந்தாதி
வரத பண்டிதர் - கிள்ளை விடுதூது
நமசிவாயச் சுவாமிகள் - உலகம்மை யந்தாதி
பகழிக் கூத்தர் - திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்
மார்க்கசகாய தேவர் - விரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ்
தலைமலைகண்ட தேவர் - மருதூரந்தாதி

19ஆம் நூற்றாண்டு

சேறைக் கவிராயர்- சேயூர் முருகனுலா
அருணாசல முதலியார் - கற்பக வல்லிமாலை
மாம்பழக்கவி - பல நூல்கள்
சிவக்கொழுந்து தேசிகர் - கோடீசுரக் கோவை
ஆறுமுக நாவலர் - பாலபாடம் முதலியன
இராமலிங்க அடிகள் - திருவருட்பா
முருகதாசர் - புலவர் புராணம்
சோமசுந்தர நாயகர் - பலநூல்கள்
பாம்பன் சுவாமிகள் - 6, 666 செய்யுட்கள்

5. ஆராய்ச்சி நூல்கள்:- சென்ற ஒரு நூற்றாண்டாகச் சைவ சமயத்தைப்பற்றி அநேக ஆராய்ச்சி நூல்கள் தோன்றியிருக்கின்றன. அவைகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதப்பட்டு இருக்கின்றன. சைவப் பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகள் தக்க சான்றுகளுடன் வெளிவந்துள்ளன. மேலும் சைவ சித்தாந்தக் கொள்கைகளைப் பற்றி வெகுவிரிவாக எழுதப் பெற்றுள்ளன. இவைகளை ஆராய்ந்து எழுதுவதற்கு நாவலர்களேயன்றிக் கிறித்துவ சமயத்தவர்களும் முற்பட்டிருக்கின்றனர். தவிர, திருப்பனந்தாள் ஆதீனத் தலைவர்கள் நன் முயற்சியால் அரிய ஆராய்ச்சிகள் செய்து காசி பிரயாகைப் பல்கலைக் கழகங்களில் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. அச்சொற்பொழிவுகளும் அச்சு வாயிலாக வெளியிட்டிருக்கிறார்கள். தவிர, மாத இதழ்களிலும் பல கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இவைகள் சைவ சமய ஆராய்ச்சிக்குத் தக்க சான்றுகள் தருகின்றன.

1. ஆங்கில நூல்கள்

1. Sivagnana bodham - N. David Nadar.
2. Sivagnana bodham - Nallasami Pillai.
3. Sivagnana bodham - Gordan Mathews.
4. Siva Siddhantam - K.M.B. Pillai.
5. Elements of S. Siddhantam - A Science Graduate, Ceylon.
6. History of Saivism - Narayana Iyer.
7. Saivism Heritage of India - S. S. S. Pillai.
8. Article - Siva Siddhanta - Radhakrishnan.. by T. M. P. Mahadevan..
10. Saiva Siddhantam - Dr. Paranjothi.
11. Siddhiar, a thesis - Dr. Devasenapathi.
12. Manikka Vasagar - Rev. Schemorus
13. Sambandar - Prof. Sundaram Pillai.
14. Siddhantam - K. Navaratnam.
15. The Cult of Siva or Sivagnanabotham - V. J. Kanthimathinatha Pillai,

BENARES LECTURES

1947 - G. Subramania Pillai

1948 - R. Ramanujachariar.

1949 - T. S. Kandasami Mudaliar

1950 - M. Balasubramania Mudaliar

1951 - K. Vajravelu Mudaliar

1952 - S. Sachitanandam Pillai

1953 - T. M. P. Mahadevan

1954 - Suddhananda Bharathi

1955 -

1956 -

1957 - K. M. Balasubramaniam

1958 -

உ. தமிழ் நூல்கள்

1. சிவஞானபோத உபன்னியாச பாடம் - காந்திமதிநாத பிள்ளை
2. சிவஞானபோத சுருக்கம் - வாலையனந்தர்
3. சைவசித்தாந்த பரிபாஷை - தேவகோட்டை சங்கம்
4. சிவஞான போதம்- சின்மயானந்தர்
5. சிவஞான போதம் - ஓ. கீ. முதலியார்
6. சிவஞான போதம் - கந்தசாமி முதலியார்
7. சிவஞான போதம் - இ.ஓ.கு. முதலியார்
8. சிவஞான தீபம் - பாம்பன் சுவாமிகள்
9. சைவப் பிரகாசிகை - குமாரசாமிக் குருக்கள்
10. சிவஞானபோதக் கட்டுரைகள் - தருமபுரம் மடாலயம்
11. சமயபோதக் கட்டுரைகள்
12. சிவஞானபோத மாநாட்டுரைகள்
13. சைவ இலக்கிய வரலாறு - ஔவை. சு. துரைசாமி பிள்ளை

14. சித்தாந்த விளக்கம்- சென்னை கைச்சுவடி நூலகம்
15. சைவ வினாவிடைகள் - நாவலர்
16.சைவ வினாவிடைகள் - திரிசிரபுரம்
17. சைவ வினாவிடைகள் - நா. நாவலர்

IX. பின் சேர்க்கை

சிந்து நதி நாகரிகம்

அண்மையிலே மற்றும் பல இடங்களில் சோதனை செய்ததில் குஜராத் வட்டங்களில் பல சின்னங்கள் காணப்பட்டன. கீழ் மேலாக 100 மைல்களும் தென் வடலாக 300 மைல்களும் கொண்ட அகண்ட பிரதேசத்தில் பண்டை நாகரிகம் செழித்திருந்தது என அறிகிறோம். இதில் பெரும்பான்மையான பகுதி பாகிஸ்தானுக்குப் போய்விட்டது. தற்போது கிடைத்து இருக்கும் முக்கியப் புதையல் ஆமதாபாத் வட்டத்தில் உள்ள லோதால் (Lothal) என்ற ஊரில் ஒரு மேடு ஆகும். இங்கே 40 நுற்றாண்டுக்கு முன் வாழ்ந்த மக்கள் மிகச் சிறந்த நாகரிகத்தைக் கொண்டிருந்தார்கள் என்று புதைபொருள்கள் காட்டுகின்றன. ஒழுங்கான நகரங்கள், வீடுகள், தெருக்கள், பாதுகாப்பு மதில்கள் மட்பாண்டங்கள், அளவைக்கற்கள், நகைகள், கல் அணிகள், பூச்சு வண்ணங்கள், செங்கல் சூளைகள், வடிகால்வாய்கள் (சலதாரைகள்) முதலிய பல பண்டங்கள் கிடைத்தன. எழுத்துக்கள் வரைந்த பொருள்கள் 396 கிடைத்திருக்கின்றன. அவைகள் எருது உருவங்களைக் கொண்டு செதுக்கப்பட்டிருக்கின்றன. எழுத்துக்கள் வலது புறத்திலிருந்து இடது புறமாக எழுதப்பட்டு இருக்கின்றன. இரண்டாவது வரி இருந்தால் அது இடது புறத்திலிருந்து வலது புறத்திற்குச் செல்கின்றது. பல அறிஞர்கள் இவற்றைப் படிக்க முயன்றார்கள். ஆனால் இதுவரை முடிவாக உறுதிப் படுத்தப்படவில்லை. வடிவ எழுத்துக்களாக இருக்கின்றன. சமயச் சார்பாக இருந்திருக்க

வேண்டும். மட்பாண்டங்களில் தீட்டியிருக்கும் வண்ணங்கள் பல உருவங்களைக் கொண்டிருக்கின்றன. மயில், மான், கயல், பாம்பு, குருவி, ஆலிலை, பனைமரம் முதலிய இயற்கைப் பொருள்கள் எழுதப்பட்டு இருக்கின்றன. சமயச் சடங்குகளுக்காக இவ்வாறு தீட்டப்பெற்று இருக்கலாம். அக்காலத்தில் இறந்தவரைப் புதைப்பது வழக்கம். மூன்று எலும்புக் கூடுகள் கிடைத்தன.

இவைகள் இன்னும் ஆராயப்படவில்லை. கடல் பொங்கி வெள்ளம் ஏறினபடியால், இந்த நகரங்கள் அழிந்தன எனக் கொள்ளவேண்டும். பூம்புகார், குமரிக்கண்டம் முதலியவை அழிவுற்றதுபோல் இங்கும் ஏற்பட்டிருக்கலாம். ஒவ்வொரு வீட்டிலும் குளிக்கத் தண்ணீர் அறையும், பூசைஅறையும் இருந்தனவெனவும் அறிகின்றோம். ஆகவே அக்காலத்தில் சமயக்கொள்கைகள் நிரம்ப இருந்தன. எழுத்துச் சின்னங்களில் எருது ஒரு சிறந்த வடிவம் ஆக இருந்திருப்பதினால் நந்தியம் பெருமானை அக்காலத்து மக்கள் வழிபட்டு இருக்கவேண்டும் என்று ஊகிக்கிறார்கள்.



இந்நூலின் புரவலர்
தவத்திரு. அருணை அருள்முருகன் அடிகளார்
சின்னத்தொட்டிப்பாளையம்.